THE SUDAROLI
REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA
# சுடர் ஒளி
விலை : ரூபா 30 பக்கங்கள் 28 வார மலர்
ஜூலை 01 - ஜூலை 07 , 2012
July 01 - July 07, 2012



பேசும் செடிகள்

விஜய் அரசியலுக்கு.....?

# கிழக்கின் உதயத்தில் விரியும் அஸ்தமனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேஸ்புக் நிறுவனரின் எளிமையான திருமணம்

சராசரி மனிதர்கள்கூட இப்போது ஹொட்டலுக்கு சென்று சாப்பிட்டால் உணவை வழங்குபவர்களுக்கு டிப்ஸ் கொடுக்கும் கலாசாரத்தை கடைபிடிக்கத் தொடங்கிவிட்டார்கள். ஆனால், சமீபத்தில் திருமணமான ஓர் உலக மகா பணக்காரர், தனது தேனிலவின்போது தங்கிய, சாப்பிட்ட ஹொட்டலில் உள்ள உணவு வழங்குனர்களுக்கு ஒரு டிப்ஸ் கூட கொடுக்காமல் வந்துவிட்டாராம். உடனே இது பெரிய வியமாக விமர்சனத்திற்கு உள்ளாகிவிட்டது.

அந்த மெகா பணக்காரர்- மார்க் ஸுக்கர் பர்க். இவர்தான் பேஸ்புக்கின் நிறுவனர்.

தனது நீண்ட நாள் காதலி பிரிசில்லா சானை கரம் பிடித்த மார்க், திருமணத்தை எளிமையாக நடத்தினார். விசேட சமையல்காரரை எல்லாம் அமர்த்தாமல், ஒரு சாதாரண மெக்சிகோ உணவ கத்தில் இருந்து பிளாஸ்டிக் தட்டுகளுடன், உணவுகள் வந்திறங்கின. மணமகள் பிரிசில்லாவுக்கு பிரத்தியேக டிசைனர் வடிவமைத்த மண ஆடையெல்லாம் இல்லை. கடைகளில் கிடைக்கும் சாதாரண உடைதான்.. விருந்தினர் எண்ணிக் கையும் நூறுக்குள்தான்.

கல்யாணத்தை முடித்தகையோடு புதுமனைவியுடன் ரோமுக்கு தேனிலவு சென்ற ஸுக்கர் பர்க், அங்கு ஓர் ஹொட்டலில் தங்கி சாப்பிட்டுவிட்டு ஒரு சில்லறைக் காசு கூட டிப்ஸ் கொடுக்காமல் வந்திருக்கிறார். உலகிலேயே பிரபலமான சமூக வலைத்தளத்தை உருவாக்கியவர் இவ்வளவு கஞ்சத்தனமாக இருக்கிறாரே என்று முணுமுணுக்கத் தொடங்கி விட்டார்கள் விடயம் அறிந்தவர்கள். அவர்களின் ஆதங்கத்தில் நியாயம் இருக்கிறது. மார்க் ஸுக்கர்பர்க்கின் இன்றைய சொத்து மதிப்பு 5 லட்சத்து 80 ஆயிரம் கோடி ரூபாய்!



# ஆவி பாடுகிறது

மறைந்த பிரபல பாப் பாடகர் மைக்கேல் ஜாக்சனின் ஆவி அவரது வீட்டைச் சுற்றி வருவதாக அப்பகுதிவாசிகள் தெரிவித்துள்ளனர்.

பிரபல பொப் பாடகர் மைக்கேல் ஜாக்சனுக்கு அவரது மருத்துவர் அதிக அளவில் மயக்க மருந்து, வலிநிவாரணி மற்றும் தூக்க மாத்திரைகள் கொடுத்ததால் அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு மரணம் அடைந்தார். இந்த சம்பவம் நடந்து 3 ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்நிலையில் அவர் உயிரை விட்ட லாஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில் உள்ள பெவர்லி ஹில்ஸ் வீட்டில் அவரது ஆவி உலவுவதாக அக்கம்பக்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

உலாவுவது மட்டுமல்ல இரவு நேரத்தில் பாடவும் செய்கிறதாம். இதனால் அப்பகுதிவாசிகள் அச்சத்தில் உள்ளனர். மைக்கேல் ஜாக்சன் உயிருடன் இருக்கையில் அடிக்கடி ஜன்னல்கள் வழியாக யார் போகிறார்கள், வருகிறார்கள் என்பதைப் பார்ப்பாராம். தற்போது அவர் இசையமைக்கும், பாட்டுப் பாடும் சத்தம் கேட்கிறதாம்.

மைக்கேல் ஜாக்சன் உயிருடன் இருக்கையில் தனது குழந்தைகள் பிரின்ஸ், பாரிஸ் மற்றும் பிளாங்கெட்டுடன் பெவர்லி ஹில்ஸ் வீட்டில் தான் தங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் அவருக்கு ஆவிகள் மீது நம்பிக்கை இருந்தது. தற்போது அவரே ஆவியாக வருகிறார் என்று கூறப்படுகிறது.




# விஜய் அரசியலுக்கு அத்திவாரம்





நடிகர் விஜய் தனது பிறந்தநாளை ஒட்டி சென்னை எழும்பூர் அரசு மகப்பேறு மருத்துவமனையில் பிறந்த அனைத்துக் குழந்தைகளுக்கும் தங்க மோதிரங்களை அணிவித்து, அங்கிருந்து தாய்மார்களின் வாழ்த்துகளைப் பெற்றார். விஜய் தங்கமோதிரம் வழங்கியது போலவே, அவரது ரசிகர்களும் தங்கள் பகுதி அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கினர். அத்துடன் பல்வேறு ஆதரவற்ற, முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளி இல்ல குழந்தைகளுக்கும் விஜய் உணவு, உடைகள் மற்றும் உதவிகளை வழங்கினார்.

லிட்டில் பிளவர், மெர்ஸி ஹோம், ஸ்பாஸ்டிக் சொஸைட்டி ஹோம், பொன்னேரி அன்புக் கரங்கள், ஆதம்பாக்கம் ஜெரோகம் இல்லம் போன்ற ஆதரவற்ற இல்லங்களுக்கு விஜய் தன் கையால் உணவு வழங்கினார்.

தனது வித்யா சாரிடபிள் ட்ரஸ்ட் மூலம் தமிழகம் முழுவதும் உள்ள 2 லட்சம் மாணவ மாணவிகளுக்கு இலவசமாக புத்தகங்களையும் வழங்கினார். இவைதவிர, மாநிலம் முழுவதிலும் உள்ள விஜய் நற்பணி இயக்கத்தைச் சேர்ந்த நிர்வாகிகள், தத்தமது பகுதிகளில் விரிவாக பிறந்த நாள் விழா நற்பணிகளைச் செய்தனர்.

இப்பிறந்தநாள் கொண்டாட்ட நிகழ்வுகளில் அவரது தந்தை எஸ்.ஏ.சந்திரசேகரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்தார். விஜயின் பிறந்தநாள் கொண்டாட்டங்கள் அவர் அரசியலுக்கு காலடி வைப்பதற்கான அத்திவாரங்களாக இருந்தன என திரையுலக வட்டாரங்களில் கிசுகிசு எழுந்துள்ளது.

## மருத்துவமனையில் களேபரம்

பிறந்த நாளையொட்டி இலவச மோதிரம் வழங்க வந்த நடிகர் விஜய்யைப் பார்க்க ஏராளமானோர் முண்டியடித்ததால் ரசிகர்கள் - பொலீசாருக்கிடையில் மோதல் ஏற்பட்டது பலர் காயமடைந்தனர்.

காலை 10.30 மணிக்கு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், 11 மணிக்கு பிறகுதான் விஜய் மருத்துவமனைக்கு வந்தார்.

அவரின் வருகைக்காக பொதுமக்களுடன் மருத்துவர்களும், மருத்துவமனை ஊழியர்களும் காத்திருந்தனர். மருத்துவர்களும், மருத்துவமனை ஊழியர்களும் வேலையை கவனிக்காமல் விஜய்யின் வருகைக்காக காத்திருந்ததால் சிகிச்சைக்காக வந்திருந்தவர்கள் பெரும் அவதிக்குள்ளானார்கள்.

அதைவிடக் கொடுமை, வலியில் துடித்த பிரசவம் ஆன தாய்மார்களை விஜய் வருகிறார் என்று கூறி படுக்கவிடாமல் 1 மணி நேரமாக உட்காரவைத்திருந்தனர். பிரசவம் ஆகி ஒப்பிரேசன் தியேட்டரில் இருந்து வெளியே வந்த ஒரு பெண்ணை, விஜய் அங்கே வருகிறார் இங்கே வருகிறார் என்று ஸ்டெச்சரில் வைத்தே அதிக நேரத்திற்கு அலையவிட்டிருக்கிறார்கள்.

விஜய் வந்ததும் பொதுமக்களும், ஊழியர்களும் முட்டிமோதினர். இதனால் மருத்துவமனை கண்ணாடிகள் நொறுங்கின. இதில் சிக்கிய சில ரசிகர்கள் மற்றும் பொலீசாருக்கு காயம் ஏற்பட்டன.



செடிகள் காற்றில் ஆடுவதைப் பார்த்திருப்பீர்கள். அவை அவ்வாறு ஆடுவதன் மூலம் ஒன்றுக்கொன்று பேசுகின்றன என்ற அதிசயத் தகவலைக் கூறுகின்றனர் ஆய்வாளர்கள். தாவரங்கள் ஒலிக்கு ரெஸ்பான்ஸ் காட்டுவது மட்டுமல்ல, தாங்களே சில ஒலிகளை வெளியிடவும் செய்கின்றன என்கிறார்கள் இவர்கள்.

இந்த ஆய்வை மேற்கொண்ட பிரிஸ்டல் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் அதிசக்தி வாய்ந்த ஸ்பீக்கர்களை பயன்படுத்தினர். அதன்மூலம் சோளப் பயிர்கள் தமது வேர்ப் பகுதியிலிருநது வெளியிட்ட கிளிக் ஓசையைக் கேட்டனர்.

காற்றில் செடிகள் தமது விருப்பம் ஏதுமில்லாமல் இயல்பாக ஆடுவது போலத் தோன்றினாலும், உண்மையில் அவை அப்போது தொடர்ந்து உரையாடிக் கொண்டு இருக்கின்றனவாம்.

தாவரங்கள் ஏற்படுத்தும் அதே அலைவரிசையிலான ஒலியைத் தொடந்து ஏற்படுத்தியபோது, தாவரங்கள் அதை நோக்கி வளரத் தொடங்கியிருக்கின்றன. தாவரங்கள் பொதுவாக வெளிச்சம் நோக்கி வளரும் என்று நமக்குத் தெரியும். ஒலியும் அவற்றை ஈர்க்கிறது என்பது தற்போது உறுதியாகியிருக்கிறது.

எக்ஸெட்டர் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் வெளியிடும் தகவல் இன்னும் வியப்பை ஏற்படுத்துகிறது. அதாவது, முட்டைக்கோஸ் தாவரமானது ஒருவித வாயுவை வெளியிட்டு, வெட்டுக்கிளிகள், செடிகளை வெட்டும் கத்திரிகள் குறித்து பிற தாவரங்களை எச்சரிக்கின்றனவாம்.

மனிதர்களின் காதுகளுக்குக் கேட்காத ஒலி மொழியில் செடிகள் பேசிக்கொள்கின்றன என்பதற்கு இவ்வாறு உறுதியான ஆதாரம் கிட்டியிருக்கிறது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மொழி என்பது மனிதர்களின் கண்டுபிடிப்பு என்று இனியும் நாம் பெருமையடித்துக் கொள்ள முடியாது!

# பேசும் செடிகள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கின் உதயத்தில் விரியும் அஸ்தமனம்

**இலங்கையின் இன்றைய அரசு எவ்வாறு இரு பாரம்பரியமாகத் தமிழ்மக்கள் வாழ்ந்த பிரதேசத்தை பாதுகாப்பு அபிவிருத்தி போன்ற சுலோகங்களை ஓங்கி ஒலித்தவாறு கபளீகரம் செய்கிறது என்பதற்கு சம்பூர் நல்லதொரு உதாரணமாகும். கடந்த மூன்று வருடங்களாக இந்த மக்கள் தங்கள் சொந்த இடத்தில் குடியேற அனுமதிக்கும் படி கோரிவருகின்றனர். உயர் பாதுகாப்பு வலயம், அனல் மின்நிலையம் என வெவ்வேறு சாக்குப் போக்குகளைச் சொல்லி வந்த அரசு நிரந்தரமாகவே அப்பகுதியை அபிவிருத்தி என்ற பெயரில் சிங்கள மயப்படுத்த திட்டமிட்டுவிட்டது.**




இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா அவர்களின் இறப்பின் பின் ஜனாதிபதியாகப் பதவியேற்று ஒரு சில மாதங்களே அந்தப் பதவியில் அமர்ந்திருந்த பின்பு அரசியலிலிருந்தே காணாமல் போய் விட்ட டி.பி.விஜயதுங்க அவர்கள் இலங்கையில் வாழும் தமிழ்மக்கள் அனைவரும் வந்தேறு குடிகள் எனவும், இந்த நாடு சிங்களவர்களுக்கே உரியது எனவும் தமிழர்கள் மரத்தைச் சுற்றிப் படரும் கொடிபோன்று சிங்களவர்களில் தங்கி வாழ்பவர்கள் எனவும் கொக்கரித்தார். அவரின் பதவி பறிக்கப்பட்ட பின்பு வந்தேறு குடிகளின் புராணமும் ஓய்ந்து விட்டது.

பின்பு திருமதி சந்திரிக்கா விஜயகுமாரணதுங்க அவர்கள் ஜனாதிபதியாக இருந்த போது அவர் அவுஸ்ரேலிய ஊடகமொன்றுக்கு இலங்கையில் தமிழ்மக்கள் வந்தேறு குடிகள் எனப் பேட்டி கொடுக்க, அமரர் குமார் பொன்னம்பலம் அவர்கள் அதை அம்பலப்படுத்தி சர்ச்சையை எழுப்ப, சந்திரிக்கா அம்மையார் தான் அப்படிச் சொல்லவில்லை என மறுதலிக்க சில நாட்கள் ஊடகச் செய்திகளில் பரபரப்பு ஏற்பட்டது. சில நாட்களில் அதுவும் அடங்கிப் போனது.

அண்மையில் பாதுகாப்புச் செயலரும் தற்சமயம் இலங்கையின் சக்தி வாய்ந்த மனிதர்களில் ஒருவராகக் கருதப்படுபவருமான கோத்தபாய ராஜபக்ச வடக்கைத் தமிழ்மக்கள் தமது பாரம்பரிய வாழிடம் என உரிமை கொண்டாட முடியாது என ஒரு கருத்தை வெளியிட்டார். உடனடியாகவே ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவெல மேதானந்த தேரர் இதுவே இந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த கருத்து எனத் தன் இனவாத நாக்கால் நீர்வடித்து வாலை ஆட்டி தன் விசுவாசத்தை வெளிப்படுத்திக் கொண்டார்.

இலங்கை பிரிட்டிஷ் அரசிடமிருந்து சுதந்திரம் பெற்றதாகக் கூறப்படும் காலம் தொட்டு அடிக்கடி இலங்கையில் தமிழ்மக்களின் பாரம்பரிய வாழிட உரிமை தொடர்பாக சில மறுதலிப்புக்கள் எழுவதும் பின் ஓய்ந்து போவதும் இடம்பெற்று வருகின்றன. இப்படியான சிந்தனைப்போக்கைக் காலத்திற்குக்காலம் சிங்கள மக்களிடம் அணையாமல் பாதுப்பதில் பல சிங்கள அரசியல்வாதிகள் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இதற்கு இவர்கள் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்கள், இனக்கலவரங்கள், இராணுவச் சுற்றிவளைப்புப் படுகொலைகள் எனப் பல்வழிகளையும் கையாண்டு வருகின்றனர்.

2009 மே 19ம் நாளின் பின்பு இந்த நில ஆக்கிரமிப்பும் இனச்சிதைப்பும் புதிய வடிவத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பாதுகாப்பு, அபிவிருத்தி போன்ற சர்வதேசம் ஏற்றுக்கொள்ளக் கூடிய அலங்கார வார்த்தைகள் மூலமாக தமிழ்மக்களின் நில உரிமை இனத்தனித்துவம் என்பன பறிக்கப்பட்டு வருகிறது.

இலங்கையின் இன்றைய அரசு எவ்வாறு இரு பாரம்பரியமாகத் தமிழ்மக்கள் வாழ்ந்த பிரதேசத்தை பாதுகாப்பு அபிவிருத்தி போன்ற சுலோகங்களை ஓங்கி ஒலித்தவாறு கபளீகரம் செய்கிறது என்பதற்கு சம்பூர் நல்லதொரு உதாரணமாகும். கடந்த மூன்று வருடங்களாக இந்த மக்கள் தங்கள் சொந்த இடத்தில் குடியேற அனுமதிக்கும் படி கோரிவருகின்றனர். உயர் பாதுகாப்பு வலயம், அனல் மின்நிலையம் என வெவ்வேறு சாக்குப் போக்குகளைச் சொல்லி வந்த அரசு நிரந்தரமாகவே அப்பகுதியை அபிவிருத்தி என்ற பெயரில் சிங்கள மயப்படுத்த திட்டமிட்டு விட்டது.

இங்கு இந்தியாவின் உதவியுடன் அனல் மின்நிலையம் அமைக்கப்படப் போவது நாம் ஏற்கனவே அறிந்த விடயம். ஆனால், இப்போ அங்கு சீன சுத்திகரிப்பு தொழிற்சாலை, ரின் மீன் தொழிற்சாலை, யந்திர உதிரிப்பாகங்கள் தொழிற்சாலை என்பன அமைக்கப்படுவதுடன் ஒரு பெரிய இறங்குதுறையும் ஏற்படுத்தப்படவுள்ளது. இவற்றில் நேரடியாக 3500 பேருக்கும், மறைமுகமாக 20000 பேருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும் எனவும் கூறப்படுகிறது.ஆனால் ஜுலை இந்த 23500 பேரும் தென்னிலங்கையிலிருந்து கொண்டு வரப்படும் சிங்களவர்களாக இருப்பார்கள் என்பதில் சந்தேகப்பட வேண்டியதில்லை. அது மட்டுமல்ல, காலப்போக்கில் இப்பகுதியில் இவர்களின் குடும்பங்கள் குடியேற்றப்படும். ஒட்டுமொத்தத்தில் அங்கு தமிழர் வாழ்ந்த அடையாளமே அழிக்கப்பட்டு அது முழுமையாகச் சிங்கள மயப்படுத்தப்படும் அதேவேளையில் சம்பூரில் நிரந்தரமாக பரம்பரை பரம்பரையாகக் குடியிருந்த மக்கள் வேறு இடங்களில் காணிகள் வழங்கப்பட்டு அங்கு குடியேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

உண்மையிலேயே சம்பூரில் இடம்பெறும் அபிவிருத்தித் திட்டங்கள் போரால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்காக மேற்கொள்ளப்படுவதானால் அங்கு தமிழ்மக்கள் மீள்குடியேற அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும். அங்கு நிறுவப்படும் தொழிற்சாலைகளில் அப்பகுதி மக்களே பணிக்கு அமர்த்தப்பட வேண்டும்.

ஆனால் வெளிப்படையாகப் போரில் சிதைவடைந்த சம்பூரை அபிவிருத்தி செய்வதாகவே கூறப்படுகிறது. ஏற்கனவே ஏனைய பிரதேசங்களில் பொருளாதார அபிவிருத்தி எட்டு வீதமாக இருக்கும் போது வடக்கில் அபிவிருத்தி 23 வீதமாக உள்ளது என அறிக்கை விடப்பட்டதை நாமறிவோம். கிழக்கிலும் இப்படி ஒரு அறிக்கை[illegible] விடப்ப[illegible] அரசு சர்வதேசத்தை ஏமாற்ற முடியும். ஆனால் அப்பகுதி மக்களுக்கு எவ்வித நன்மையும் கிட்டப் போவதில்லை.

சம்பூர் வளமான விளைநிலங்களைக் கொண்ட பகுதி. அது மட்டுமன்றி சம்பூர் கடற்பகுதி பெரும் மீன்வளம் கொண்ட பகுதி. இப்பகுதி மக்களின் வாழ்வாதாரமாக மீன்பிடியும், விவசாயமுமே அமைந்திருந்தன. இத்தொழில்கள் மூலம் அப்பகுதி மக்கள் செழிப்புடன் வாழ்ந்து வந்தனர்.

இன்று அவர்கள் வெளியேற்றப்பட்டு அகதிகளாக அல்லல் படுகிறார்கள். தொழில்களை இழந்து வறுமையில் வாடுகிறார்கள். அதேவேளையில் அவர்களின் வளமான நிலம் அபிவிருத்தியின் பேரால் விழுங்கப்படுகிறது.

அதேபோன்று குச்சவெளியிலும் அப்பகுதி மக்களின் மயானம் உட்பட குடியிருப்புக்கள் அபகரிக்கப்பட்டு ஒரு பெரும் சுற்றுலா வளாகம் அமைக்கப்பட்டு விட்டது. அதேபோல் கும்புறுப்பிட்டியில் இறால், நண்டு என்பன உற்பத்தியாகும் கடல் நீரேரி அபகரிக்கப்பட்டு வெளிநாட்டு நிறுவனம் ஒன்றால் உப்பளம் அமைக்கப்படவுள்ளது. இதேபோன்று சீன நிறுவனத்தின் உதவியுடன் கொக்கிளாயில் ஒரு இலுமனைட் சுத்திகரிக்கும் ஆலை அமைக்கப்படவுள்ளது.

குச்சவெளி, கும்புறுப்பிட்டி, கொக்கிளாய் போன்ற கிராமங்கள் பாரிய கடல்வளம் கொண்ட பகுதிகளாகும். இப்பகுதி மக்களின் பிரதான தொழில்களாக கடற்றொழிலும் விவசாயமுமே விளங்கி வந்தன. இன்று அபிவிருத்தியின் பெயரால் அவர்களின் நிலங்களும் அபகரிக்கப்பட்டு தொழில் வாய்ப்புகளும் அழிக்கப்படுகின்றன.

ஒட்டுமொத்தத்தில் திருமலை மாவட்டத்தில் அபிவிருத்தி என்பது தமிழ்மக்களின் இருப்பை, அவர்களின் தொழில்களைக் கேள்விக்குள்ளாக்கும் ஒரு ஆயுதமாகவே பாவிக்கப்படுகின்றது.

அதாவது திருமலை மாட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி என்ற பெயரில் தமிழ்மக்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து தொழில் செய்த இடங்கள் இன்று தமிழ்மக்களிடமிருந்து பறிக்கப்பட்டு சிங்கள மயப்படுத்தப்பட்டு வருகின்றன. நேரடியான சிங்களக் குடியேற்றங்கள் ஒரு புறம் நடக்க, அபிவிருத்தியின் பெயரால் சிங்களவர் குடியேற்றப்படும் நிலை உருவாக்கப்படுகிறது.

இலங்கை சுதந்திரம் பெற்ற போது திருமலை மாவட்டத்தில் வாழ்ந்த சிங்களவரின் தொகை 9 வீதம் மட்டுமே. இன்று இத்தொகை 33 வீதமாக அதிகரிக்கப்பட்டு விட்டது. கல்லோயா, கந்தளாய், சேருவில குடியேற்றத் திட்டங்கள் மூலமும் சிறிமா புர, அன்பு வழிபுரம், தம்பலகாமம், குமரன் கடவை (சோமரன் கட்டுவ) போன்ற பல அத்துமீறிய குடியேற்றங்கள் மூலமும் இந்த விகிதாசார அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டது.

குளக்கோட்ட மன்னன் திருமலையை இராசதானியாக் கொண்டு ஆட்சி செய்த காலத்திலேயே தென்னை மரவாடிப்பற்று, தம்பலகாமம்பற்று, கொட்டியாரப்பற்று, வெருகலபற்று என இருந்தன எனவும் அவற்றை நாச்சிமார் எனப்படும் பெண்களே ஆட்சி செய்தனர் எனவும் வரலாற்று ஆதாரங்கள் குறிப்பிடுகின்றன. அதுமட்டுமன்றி கந்தளாய் குளம் குளக்கோட்ட மன்னனால் கட்டப்பட்டது எனவும் அதன் கீழ் உள்ள ஒரு பகுதி நிலம் கோணேசர் ஆலயப் பரிபாலனத்திற்கென ஒதுக்கப்பட்டதாகவும் கோணேசர் கல்வெட்டு தெரிவிக்கிறது. ஆனால், இன்று சிங்கள வரலாற்றியலாளர்கள் அதை திரிபுபடுத்தி கந்தளாய் குளத்தைக் கட்டியவன் அக்கிர போதி என்ற சிங்கள மன்னன் எனக் கூறி வருகின்றனர். இதுவும் கூட திருமலையில் தமிழரின் வரலாற்றுத் தொன்மையை மறைக்கும் ஒரு முயற்சியாகும். இதே அடிப்படையிலேயே இப்போ திருமலை மாவட்டத்தைச் சிங்கள மயமாக்கும் நடவடிக்கைகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.


வடக்கு, கிழக்கு தமிழ்மக்களின் பாரம்பரிய வாழிடம் அல்ல எனப் பாதுகாப்புச் செயலர், ஏனைய சிங்கள இனவாதிகள் வெளியிடும் கருத்துகள் வெறும் கூச்சலல்ல? அப்படி ஒரு தோற்றப்பாட்டை உருவாக்க அபிவிருத்தி, பாதுகாப்பு என்ற போர்வைகளில் திட்டமிட்ட வகையில் துரிதமாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த முயற்சியின் ஒரு பகுதியே இன்று சம்பூர், குச்சவெளி, கொக்கிளாய் போன்ற பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களின் உண்மையான நோக்கமாகும். இப்படியே இது நீடித்து திருமலை சிங்களவரைப் பெரும்பான்மையாகக் கொண்ட மாவட்டமாக மாற்றப்பட்டால் ஆச்சரியப்பட எதுவுமில்லை.


இன்று வடக்கில் நில அபகரிப்புக்கு எதிராகப் போராட்டங்கள் வெடித்தெழ ஆரம்பித்து விட்டன. இது சர்வதேச மயப்பட்டு மேலும் வலுப்பெறும் சூழலும் ஏற்பட்டுள்ளது. எனவே, கிழக்கின் அரசியல் தலைமைகளும் மக்களை அணிதிரட்டி எமது பாரம்பரிய நிலங்கள் அபகரிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும். வடக்கு, கிழக்கு எமது பாரம்பரிய வாழிடம் என்பதை தமிழர்கள் எவ்விதத்திலும் விட்டுக் கொடுக்க முடியாது.

சந்திரசேகர ஆசாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பயம் விளைக்கும் மறுபக்கங்கள்



தொலையா நினைவுகள்

நெடுந்தீவு மகேஷ்

திருவாளர் 'எக்ஸ்' தனது வீட்டை விட்டு வெளியே போவதில்லை. எல்லாத்தும் வீட்டின் உள்ளேயே உள்ளடங்கி இருந்தது. அது அவருக்கு எல்லா வகையிலும் வசதியாக இருந்தது. அவரது குடும்பத்தினரோ அவரது இந்தச் செய்கை குறித்து [illegible] கொண்டிருந்தனர். அவரது தம்முணர்வில் அவர் ஒரு சிறிய புழு என்பதான மயக்கம் இருந்தது. வீட்டிலே வளரும் கோழி, வாசலில் வந்து கரையும் காகம், முற்றத்தில் குந்தித் தானியம் பொறுக்கும் குருவிகள் எல்லாமே அவரைத் தேடி வந்து கொத்திக் குதறிவிடுவதான பூதாகர எண்ணம் அவரை அச்சுறுத்தியது. அந்தப் பறவைகளின் பார்வையிலிருந்து விலகி இருக்கவே அவர் விரும்பினார் என்பதாய் தோன்றியது. பறவைகளைக் கண்டு பயந்தொதுங்கும் அவரின் செயலைப் பல்லோரையும் அவர் மீதான எண்ணத்தில் அவர் ஒரு உளநோயாளி என்றே தீர்மானிக்க வைத்தது.

இந்தப் புதுமையான எண்ணமும் செய்கையும் 'எக்ஸ்' அவர்களின் சுதந்திர நடமாட்டத்திற்குத் தடை விதித்தன. அவர் வீட்டுக்கு வெளியே போவதை நிறுத்தியே விட்டார். பறவைகளைப் பார்ப்பதற்கும் பயம். அவை தன்னைக் கண்டால் பறந்து வந்து கொத்திக் குதறிவிடுவதாய் ஒரு பயங்கரம்.

திருவாளர் எக்ஸின் குடும்பத்தினருக்கோ அவர் ஒரு மனநோயாளியாகிப் போய் விட்டாரே என்ற ஏக்கம். திருவாளர் எக்ஸின் இந்த நிலையை உளவளத்துணையாளர்களிடம் எடுத்துரைத்து அவர்களை அழைத்து வந்து அவரது மன அழுத்தத்தைப் போக்கலாம் என அவர்கள் எண்ணினர். பிரசித்தி பெற்ற உளவளத்துணையாளர் ஒருவரை அணுகி நிலைமையை எடுத்துரைத்தனர். அதனைக் கேட்டவர் உடனேயே திருவாளர் எக்ஸ் அவர்களை வந்து வீட்டிலேயே பார்த்தார். அவருடன் உரையாடினார். அவரது உடல், உள வலிமைகளை உற்றுணர்ந்தார். ஒருவார காலம் அவருடன் பழகினார். எல்லா வகையிலும் 'எக்ஸ்' அவர்களுடன் நடத்திய மன சிகிச்சையோடு இணைந்த கலந்துரையாடல் திருப்தியளித்தது. எக்ஸின் மனத்திலிருந்த நான் ஒரு சிறிய புழு என்ற எண்ணத்திலிருந்து மாற்றத்தை ஏற்படுத்திவிட்டதான உற்சாகத்தோடு 'மிஸ்ரர் எக்ஸ்' இப்பொழுது எப்படி இருக்கிறீர்கள் என்றொரு கேள்வியை இறுதி நாளன்று உளவளத் துணையாளர் கேட்டார். "ஐ ஆம் ஆல் ரைட்" என்று உரத்துக் கூறிய 'எக்ஸ்' "எனக்கு ஒன்றுமில்லை. நான் நன்றாகத் தானே இருக்கிறேன்" என்றார். "நல்லது நான் உங்களை அடுத்த வாரம் வந்து பார்க்கிறேன். நீங்கள் பயமில்லாமல் சுதந்திரமாக எங்கும் போய் வரலாம். இப்பொழுது நீங்கள் ஒரு புழு என்ற எண்ணம் உங்களுக்கு இல்லைத்தானே?" என்றார் உளவளத்துணையாளர். 'எக்ஸ்' ஆம் என்றதாகத் தலையசைத்தார். உளவளத்துணையாளர் போய்விட்டார்.

ஒருவாரம் கழிந்து மிஸ்ரர் எக்ஸ் அவர்களைச் சந்திக்க மீண்டும் வந்தார். ஆனால் அவர் எதிர்பார்த்ததைப் போல 'எக்ஸ்' வீட்டுக்கு வெளியே உலவியதற்கான அடையாளங்கள் எதுவுமே தென்படவில்லை. மனம் சோர்வடையாத உளவளத்துணையாளர் எக்ஸைப் பார்த்து "ஏன் நீங்கள் வீட்டைவிட்டு வெளியே போகவில்லை. நீங்கள் புழு இல்லை என்பதை உணர்கிறீர்கள் தானே. பறவைகள் உங்களைக் கொத்துமோ என்ற பயம் இப்பொழுது உங்களிடம் இல்லையல்லவா?" என்றார். அதற்கு 'எக்ஸ்' "உண்மைதான் நான் புழு அல்ல என்பது எனக்குப் புரிந்துவிட்டது. ஆனால் அந்தப் பறவைகள் என்னைக் கண்டதும் புழு என எண்ணி என்னைக் கொத்திவிட்டால் என்ன செய்வது? என்ற பயம் இருக்கிறதே. அதற்கு என்செய்வது எதற்கும் நீங்கள் இந்தப் பறவைகளுக்கும் நான் புழு அல்ல என்றும் என்னைக் கொத்தித் தொந்தரவு செய்ய வேண்டாம் எனவும் சொல்லி வையுங்களேன்!" என்றார். அதைக் கேட்ட உளவியலாளர் ஆச்சரியத்தோடு எக்ஸைப் பார்த்தார்.

மிஸ்ரர் எக்ஸ் புன்னகைத்தவாறே "எனக்கு என் நிலைமையை உணர்த்தி நான் புழுவல்ல என்று தைரியம் தந்து எனது பயத்தை நீக்கியது போல இந்தப் பறவைகளுக்கும் நான் புழு அல்ல என்று சொல்லி வைத்தால்தானே அவை என்னைக் கொத்தாமல் இருக்கும். அப்பொழுது தானே முழுமையாக எனது பயம் தீரும்" என்றார் நிதானமாக.

மிஸ்ரர் எக்ஸ் அவர்களின் குழம்பிய சிந்தனையிலும் ஏதோ ஒரு பாரிய உண்மை பொதிந்திருப்பதாகத் தோன்றியது.

வீதியெங்கும் ஓடிப்பறக்கும் வாகனங்களை ஓட்டும் சாரதிகள் யாவருமே அனுமதிப் பத்திரங்களை வைத்துக் கொண்டே பயணிக்கிறார்கள். அவர்கள் ஓட்டும் வாகனங்களோ பலவேளைகளில் எந்தவித வீதி ஒழுங்குகளையும் கவனத்தில் கொள்ளாமல் விபத்துக்கு உள்ளாகி விடுகின்றன. சிறந்த வாகன ஓட்டிகளின் வாகனங்களும் ஒன்றுடன் ஒன்று மோதி உயிராபத்துக்களை விளைவித்து விடுகின்றன. இதனை உணர்ந்த ஒரு வாகனசாரதி "நான் நன்றாக வீதி ஒழுங்குகளை அனுசரித்து வாகனம் ஓட்டுகிறேன். அதற்கான அனுமதிப் பத்திரத்தையும் பெற்றுக் கொண்டுள்ளேன். ஆனால் எதிரே வந்து எனது வாகனத்துடன் மோதும் வாகனத்தில் சாரதியிடமும் அனுமதிப் பத்திரம் இருக்கிறதே. இந்நிலையில் விபத்துக்களைத் தடுப்பதற்கு யாருக்கு அறிவுரை வழங்குவது. வீதி ஒழுங்குகளை அனுசரித்து ஓடுவதாக அனுமதிபெற்ற சாரதிகளுக்கா? அல்லது அந்தச் சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்கிய அதிகாரிக்கா? என்று கேட்டார் அவர்.

அந்தக் கேள்விக்கும் 'மிஸ்ரர் எக்ஸ்' கேட்ட கேள்விக்கும் உறவிருப்பதாக எண்ணிக் கொண்ட நான் மௌனமானேன்.

# முகாம் தரும் வேதனையுடன்



அறிவுமதியுடன் செல்வம்

முகாம் வாழ்க்கையை அனுபவித்து வேதனைப்படும் ஒரு வேளை உணவுக்காகக் காத்துக்கிடக்கும் அவலமும் அனுபவித்தவர்களுக்கே புரியும். அவற்றின் உறுத்தல்களை உளம் நொந்து [illegible] கவிதைகளைத் தருகிறார் கவிஞர்.

[illegible]

தினந்தினம் முகாம்களில் அழுது அழுது [illegible] ஆறாத புண்களோடு [illegible].

[illegible]

முகாம் வாழ்க்கைக்கு உள்ளாகிய ஒரு [illegible] தொடர்ந்தும் முகாம் [illegible] தொடரும் அனுபவங்கள் எத்தனையோ. அவற்றின் தொடர்ச்சியும் [illegible] என்கிறார் கவிஞர்.

[illegible]

முகாமிலும் பசிக்கும் [illegible] ஒரு கோப்பை கஞ்சி போதும் [illegible] பசிகளோ அடங்காதவை. அது அந்த ஒரு கோப்பை கஞ்சி மாத்திரமல்ல. மேலும் பல பசிகள் உள்ளதல்லவா?

[illegible]

தனித்து [illegible] ஒரே ஒரு உடையுடன் அதுவும் உடுத்தியிருந்த உடையுடன் [illegible] இதனைத் தவிர்க்கும் [illegible] இருந்தாலும் [illegible] இருக்கும் என்கிறார் கவிஞர்.

[illegible]

முகாம் தொலைந்து [illegible] இருப்பிடம் கலைந்து தனித்திருக்கும் [illegible] இந்த முகம் இல்லாதவர்கள் [illegible] அதனால் பயம் இருக்கிறது என்கிறார் கவிஞர். [illegible] கவிஞராய் அறியப்பட்டவர் தமிழகத் [illegible] இலக்கிய பரம்பரையின் [illegible] இணைத்துக் கொண்டு கவிதை [illegible].

தமிழகத்தின் சினிமா இயக்குனரும் பாடலாசிரியருமான அறிவுமதியின் [illegible] கவிஞர் செல்வம் தமிழக சினிமாத்துறை சார்ந்து [illegible] தமது கவிதை [illegible] என்னும் கவிதைத் தொகுப்பு ஒன்றை ஆக்கியுள்ளார்.

அவரது [illegible] கவிதை வரிகள் தமிழக சஞ்சிகைகளிலும் சஞ்சிகைப் பக்கங்களிலும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. தொடரும் இலக்கியப் பணியில் அவரது சினிமாத்துறை சார்ந்த [illegible] எண்ணிய வாறு [illegible] இலக்குகளை அடையும் என நம்புகிறோம்.

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வலியிலிருந்து மீள்வதற்குள்...

இலங்கையின் ஆட்சிப்பீடத்தில் உள்ள அமைச்சர்கள் ஒரு சிலர் தொடர்ந்தும் வெளியிட்டு வருகின்ற இனவாதக் கருத்துக்களும் கடும்தொனியிலான எச்சரிக்கைகளும் வடக்கு, கிழக்கு வாழ் தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதாகவே கருதமுடிகிறது. அதாவது தற்போதைய ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் கூட்டுச் சேர்ந்துள்ள சிங்கள இனவாதக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் எரிபொருள் மின்சக்தி அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தொடர்ச்சியாக தமிழ்மக்களுக்கு எதிரான இனவாதக் கருத்துக்களை பரப்பி வருவது யாவரும் அறிந்த விடயம். இந்த நிலையில் குறித்த அமைச்சர் அவர்கள் அண்மையில் வெளியிட்டிருந்த கருத்தானது தமிழ்மக்களை மிரட்டிப் பணிய வைப்பதாகவும் இனவாதத்தை மேன்மேலும் தூண்டிவிடுவதாகவுமே உற்றுநோக்கப்படுகின்றது. அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் கொள்கைகளுக்குப் பின்னால் தமிழ்மக்கள் செல்வார்களாயின் நூறு முள்ளிவாய்க்கால்களைச் சந்திக்க நேரிடும் என்பதுவே அந்தக் கருத்தாகும். முள்ளிவாய்க்கால் பேரவலம் ஏற்படுத்திவிட்ட வலிகளிலிருந்து தமிழ்மக்கள் இன்னமும் முழுமையாக மீளவில்லை. இந்தநிலையில் ஒரு முள்ளிவாய்க்கால் போதும், நூறு முள்ளிவாய்க்கால்கள் ஏற்பட எவரும் முயற்சிக்கக் கூடாது என்ற அமைச்சரின் கருத்தானது முடிந்துபோன முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் போது ஆளும் தரப்பினர் எத்தகைய கொடூரமான நடவடிக்கைகளை அரங்கேற்றியிருக்கிறார்கள் என்பதை வெளிப்படையாகவே கோடிட்டுக் காட்டுகின்றது.

இந்த வருடம் மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டில் கட்சியின் தலைவர் விசேட உரை நிகழ்த்தியிருந்தார். அவர் அந்த உரையில் "ஒருமித்த இலங்கைக்குள் தமிழர்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்கும் என்பதில் துளியளவும் நம்பிக்கை இல்லை" என்ற கருத்தை உள்ளடக்கியதாகக் கடந்தகால தமிழர்களின் அரசியல் வரலாறுகள் தொடர்பாகவும் விரிவாக விளக்கியிருந்தார். தமிழரசுக் கட்சித்தலைவர் திரு சம்பந்தன் அவர்களது இந்த உரை யதார்த்த பூர்வமானதாகவே அமைந்திருந்தது. அத்துடன் தற்போது தமிழ்மக்கள் எதிர்பார்க்கின்ற பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை அமுலாக்குவது தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் பல தடவைகள் இந்திய மத்திய அரசுக்கு உறுதிமொழிகளை வழங்கியுள்ளார். இவ்விடயம் தொடர்பாகவும் சம்பந்தன் அவர்கள் தனது உரையில் குறிப்பிடத் தவறவில்லை. அத்தோடு அவரது உரையில் எந்தவிதமான இனவாதமும் வெளிப்படவில்லை. ஆனால் சிங்கள பேரினவாத சக்திகள் சம்பந்தனின் உரையை பெரும் பூதாகாரமாக்கி தமது கண்டனங்களை வெளியிட்டிருந்தன. அதன் ஒரு அங்கம் தான் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் "நூறு முள்ளிவாய்க்கால்களைச் சந்திக்க நேரிடும்" என்ற இனவாதக் கருத்தாகும். அமைச்சரின் இந்தக் கருத்தானது இலங்கைத் தமிழர்கள் மத்தியிலும் தமிழகத் தமிழர் மத்தியிலும் புலம்பெயர்ந்த நாடுகளில் வாழ்கின்ற தமிழ்மக்கள் மத்தியிலும் கடுமையான மனக்கொதிப்பையும் அதிருப்திகளையும் ஏற்படுத்தியுள்ளது. ஆட்சிப்பீடத்தில் உள்ளவர்களே இவ்வாறு பொறுப்பற்ற விதத்தில் எச்சரிக்கை கலந்த இனவாதக் கருத்துக்களை வெளியிடுகின்ற போது, சாதாரண சிங்களக் குடிமக்கள் எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டிருப்பார்கள் என்பதை யாரும் சொல்லித் தெரியவேண்டிய அவசியம் இல்லை. இத்தகைய இனவாதிகள் ஆட்சிப்பீடத்தில் இருக்கும் வரையிலும் இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பூர்வீகமாக வாழ்ந்து வருகின்ற தமிழ்மக்கள் நீதியானதும் நிரந்தரமானதுமான அரசியல் தீர்வொன்றை சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்து எதிர்பார்ப்பது எந்தவகையிலும் சாத்தியப்படாத விடயம். அவ்வாறு நினைப்பது வானத்து நிலாவை கைகளுக்குள் அடக்க நினைப்பது போலானது.

தற்போது இலங்கை அரசாங்கத்தில் அமைச்சர்களாகவுள்ள சம்பிக்க ரணவக்கவும் விமல் வீரவன்சவும் தமிழ்ச் சமூகத்திற்கு எதிரான கடும்போக்கையுடைய இனவாத சக்திகள் என்பதை புலத்திலும், புலத்திற்கு வெளியிலும் வாழ்கின்ற தமிழர்கள் நன்கறிவார்கள். இந்த நிலையில் அமைச்சர் சம்பிக்க ரணவக்க அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் தமிழ்மக்களுக்கும் விடுத்திருக்கின்ற இந்த இனவாத எச்சரிக்கையானது சிங்கள பேரினவாதம் தமிழ்மக்களை எந்தளவிற்கு மட்டமாக நோக்குகின்றது என்பதை துலாம்பரமாக விளக்குகின்றது.

முள்ளிவாய்க்கால் பேரவலம் நிகழ்ந்து மூன்று ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் அதன் எதிர்விளைவுகள் இலங்கை அரசாங்கத்தை ஆட்டங்காணச் செய்துகொண்டேயிருக்கின்றது. முள்ளிவாய்க்கால் பேரவலம் ஏற்படுத்திவிட்ட வடுக்கள் இன்னமும் மறையவில்லை. ஆனாலும் அழிவுகளையும் அவலங்களையும் கண்டு துவண்டுவிடக்கூடிய சமூகம் அல்ல தமிழ்ச்சமூகம். தமிழ்மக்கள் அவலங்களையும் அழிவுகளையும் சந்தித்தது முள்ளிவாய்க்காலில் தான் முதற்தடவை என்பதல்ல. 1983ம் ஆண்டுமுதல் 2009ம் ஆண்டு வரையிலான 26 வருடங்களும் காலத்திற்குக் காலம் ஆட்சிபீடத்தில் இருந்த அரசாங்கங்களான ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு போன்றவை பல்வேறு கால கட்டங்களில் தமிழ்மக்கள் மீது வன்முறைகளையும் படுகொலைகளையும் கட்டவிழ்த்து விட்டிருந்தன. அவலங்களைக் காட்டி தமிழ்மக்களை அடிபணிய வைத்து விடலாம் என்று சிங்கள கடும்போக்காளர்கள் எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். அந்த வக்கிர உணர்வு சிங்கள பேரினவாத சமூகத்தினரிடையே புரையோடிப் போயிருக்கின்ற வரையிலும் இலங்கையில் வாழ்கின்ற தமிழ்குடிமக்கள் சிங்கள ஆட்சியாளர்களால் இரண்டாம் தரக் குடிமக்களாகவே நடத்தப்படுவார்கள் என்பது திண்ணம்.

அமைச்சர் சம்பிக்க ரணவக்க அவர்கள் ஒரு முள்ளிவாய்க்காலே போதும், நூறு முள்ளிவாய்க்கால்களை உருவாக்குவதற்கு எவரும் முயற்சிக்க வேண்டாம் என்றும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் கொள்கையின் பின்னால தமிழ்மக்கள் செல்வார்களாயின் அவர்கள் நூறு முள்ளிவாய்க்கால்களைச் சந்திக்க நேரிடும் என்று கூறிய இனவாத எச்சரிக்கை தமிழக அரசியல் கட்சிகள் மட்டத்திலும் பெரும் கொந்தளிப்பு நிலையை ஏற்படுத்தியுள்ளது. தமிழக முன்னாள் முதலமைச்சரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான கலைஞர் கருணாநிதி அவர்கள் இலங்கை அமைச்சர் சம்பிக்கவின் இந்த இனவாதக் கருத்தை வன்மையாகக் கண்டித்து கடிதம் வரைந்து இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றிருந்தார். அத்துடன் விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தின் தலைவர் திருமாளவனும் தனது கண்டனங்களை வெளியிட்டிருந்ததோடு மாபெரும் கண்டனப் பேரணியையும் சென்னையில் நடாத்தியிருந்தார். அமைச்சர் சம்பிக்கவின் கருத்துக்கு இந்திய நாடாளுமன்றத்தில் கண்டனம் தெரிவிக்க வேண்டுமெனவும் இலங்கை அரசாங்கத்துடனான தொடர்புகளை இந்தியா துண்டிக்க வேண்டுமென்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் கோஷங்களை எழுப்பினார்கள். கண்டனப் பேரணியில் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் கொடும்பாவியும் இழுத்துச் செல்லப்பட்டு எரியூட்டப்பட்டதுடன் இலங்கையின் தேசியக் கொடியும் கிழித்தெறியப்பட்டது. அதனைத் தொடர்ந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களில் பதினைந்து பேர் வரையில் தமிழக காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டதாக ஊடகங்கள் வாயிலாக அறிய முடிந்தது.

அமைச்சரின் இந்த இனவாதக் கருத்துக்கு பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுனர் டொக்டர் ராமதாஸ், இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் ஆகியோரும் தங்களது கடுமையான எதிர்ப்புக்களை வெளியிட்டிருந்தனர். இவ்வாறு வெளியிடப்பட்ட கண்டன அறிக்கைகளுக்கு தமிழகத்தில் வெளியாகின்ற ஆங்கில ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட்டிருந்ததுவும் குறிப்பிடத்தக்கது.

தமிழரசுக் கட்சியின் மாநாட்டின்போது அதன் தலைவர் சம்பந்தன் நிகழ்த்திய உரையில் "வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் பாரம்பரியமான தாயகபூமி" என்ற விடயத்தையும் வலியுறுத்தியிருந்தார். வடக்கு, கிழக்கு பகுதிகள் தமிழர்களின் தாயகநிலம் என்பது சம்பந்தனது தனிப்பட்ட கருத்தல்ல. அத்துடன் அவ்வாறு கூறியிருப்பது அவர்தான் முதற்தடவையும் அல்ல. வடக்கு, கிழக்கு தமிழர்களின் பாரம்பரிய நிலம் என்பது அந்தப்பகுதியில் வாழ்கின்ற பெரும்பான்மையான தமிழ் மக்களின் ஒருமித்த கருத்தாகவுள்ளது. இந்தக் கருத்தை இலங்கையில் வடக்கு, கிழக்கிற்கு வெளியே வாழ்கின்ற அநேகமான தமிழ்மக்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். குறிப்பாக மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணியும் இந்தக் கருத்தை முழுமையாக ஆதரித்திருக்கின்றது. வடக்கு, கிழக்குப் பகுதிகள் தமிழர்களின் தாயகம் என்ற நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக அரசியல் வழியிலும் பின்னர் ஆயுத வழியிலும் அதைத் தொடர்ந்து அரசியல் வழியிலுமாக தமிழர்கள் தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இந்தநிலையில் சம்பந்தரது உரையை சிங்களக் கடும்போக்காளர்கள் இனவாதக் கருத்துக்களாகச் சித்தரித்து பூதாகாரமான விடயமாக்கி இராணுவப் புலனாய்வாளர்களின் விசாரணை வரையிலும் கொண்டு சென்றிருப்பது தமிழ்மக்கள் எத்தகைய சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை சர்வதேசத்திற்கு பறைசாற்றுவதாகவே அமைந்திருக்கின்றது. இவ்வாறு சிங்கள ஆட்சியாளர்களின் கடும்போக்கான அணுகுமுறைகள் தமிழர்களை ஒருபோதும் மண்டியிட வைக்காது. மாறாக அது தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை சர்வதேச அரங்கில் மேன்மேலும் வலுப்படுத்தும் என்பதுவே யதார்த்தம். தற்போதும் கூட வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தி செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற தமிழ்தேசியக் கூட்டமைப்பிற்கு தமிழ்மக்கள் தமது முழுமையான ஆதரவுகளை வழங்கி அவ்வப்போது எதிர்கொண்ட தேர்தல் களங்களில் பலதரப்பட்ட அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் வடக்கு, கிழக்கில் பெரும்பான்மையான தமிழ்மக்கள் வீட்டுச் சின்னத்திற்கு வாக்களித்து தமிழ்தேசியக் கூட்டமைப்பினரை அமோக வெற்றியீட்டச் செய்ததன் ஊடாக தமிழ்மக்கள் ஒன்றுபட்டு நின்றதை வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். இத்தகைய பெரும்பான்மையான தமிழ் மக்களின் பலத்துடன் நின்றுதான் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் அரசியல் தலைவிதியை பேரம்பேசுகின்ற சக்தியாகத் திகழ்கின்றனர். வடக்கு, கிழக்குப் பகுதிகள் தமிழர்களின் தாயகநிலம் என்பதை நிரூபித்துக் காட்டுவதற்கு மேற்குறிப்பிட்ட விடயங்களே போதுமானது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை அமுலாக்குவதற்கு வாக்குறுதி வழங்கியதன் ஊடாக ஜனாதிபதி அவர்களே வடக்கு, கிழக்கு பகுதிகள் தமிழர்களின் நிலம் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளார். அதாவது பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற இலங்கை - இந்திய ஒப்பந்தம் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் தாயகம் என்ற யதார்த்தத்திற்கு அமைவாகவே அந்த ஒப்பந்தம் வரையப்பட்டிருக்கின்றது.

இலங்கையின் ஆட்சிபீடத்தில் உள்ளவர்கள் இவ்வாறான கடும்போக்குடைய கொள்கைகளைத் தொடர்ந்தும் கடைப்பிடிப்பார்களாயின் அது இனங்களுக்கிடையிலான தேசிய நல்லிணக்கத்தையே கேள்விக் குறியாக்கிவிடும் என்பது திண்ணம். அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் நூறு முள்ளிவாய்க்கால்களைச் சந்திக்க நேரிடும் என்ற இனவாத எச்சரிக்கை இலங்கைத் தமிழ் மக்களை பெரும் உளப் பாதிப்பிற்கும் கடுமையான அதிருப்திகளுக்கும் உட்படுத்தியிருக்கின்றது. இருப்பினும் அவர்கள் வாய்பேசா மௌனிகளாக வாழவேண்டிய சூழ்நிலையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால் அமைச்சரின் இந்த இனவாத எச்சரிக்கைக்கு அரசாங்கத்துடன் கூட்டுச் சேர்ந்திருக்கின்ற அரசியல் கட்சிகளோ அல்லது எதிரணியிலுள்ள அரசியல் கட்சிகளோ தங்களது கண்டனங்களையும் அதிருப்திகளையும் வெளியிடாது அமைச்சரின் கருத்தை ஆமோதித்தவர்கள் போல மௌனம் சாதித்து வருவதால் தமிழ்மக்கள் அந்த அரசியல் கட்சிகள் மீது மென்மேலும் நம்பிக்கை இழக்கும் நிலையே ஏற்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

■ தமிழன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டே லீடர் பத்திரிகையில்
நிமாலா கன்னங்கரா
எழுதிய கட்டுரை
தமிழில்: [illegible]

# மகிந்தவின் விமானப் பயணங்கள்!

**அண்மையில் கூட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவரது தாய்லாந்துக்கான உத்தியோக பூர்வமான விமானப் பயணத்தை மேற்கொண்ட சமயத்தில் கால்நடை மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் மகனது திருமண வைபவத்தில் கலந்து கொள்வதற்காக இடையில் நாட்டிற்குத் திரும்பி வந்தமை அதிர்ச்சியளிப்பதாகவே இருந்தது. அவர் விமானங்களை ஏதோ கார் சேவைகள் போலப் பயன்படுத்துகிறார்.**

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சிறீலங்கா விமானசேவையின் நவீன விமானங்களை அவரது தனி உடைமையாகக் கருதிப் பயன்படுத்தி வருவதனால் பல கோடிக்கணக்கான நிதி இழப்புகளுக்கு விமானசேவைகள் நிறுவனம் ஆளாகி உள்ளதாக சிறீலங்கா விமான சேவை நிறுவனத்தின் அதிகாரிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

முன்னைய சகல ஜனாதிபதிகளாலும் கைக்கொள்ளப்பட்டது போன்று ஒழுங்கான முறையில் விமானப் பயணங்களை ஜனாதிபதி ராஜபக்ஷ மேற்கொள்ளாததமையே இத்தகைய பாரிய நஷ்டங்களுக்கு சிறீலங்கா விமானசேவை நிறுவனம் உள்ளாகியுள்ளதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நாட்டின் முதன்மைக் குடும்பமான ராஜபக்ஷ குடும்பத்தினர் சிறீலங்கா விமானசேவையின் விமானங்களை அவர்களின் சொந்தச் சொத்துக்கள் போலப் பயன்படுத்துவதில் நடந்து கொள்ளும் விதம் பார்ப்பதற்கு நம்பிக்கையை இழக்கச் செய்வதாகவே உள்ளது.

அண்மையில் கூட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவரது தாய்லாந்துக்கான உத்தியோக பூர்வமான விமானப் பயணத்தை மேற்கொண்ட சமயத்தில் கால்நடை மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் மகனது திருமண வைபவத்தில் கலந்து கொள்வதற்காக இடையில் நாட்டிற்குத் திரும்பி வந்தமை அதிர்ச்சியளிப்பதாகவே இருந்தது. அவர் விமானங்களை ஏதோ கார் சேவைகள் போலப் பயன்படுத்துகிறார்.

இத்தகைய தனி ஒருவர் சார்ந்த சுற்றுலா விமானப் பயணத்திற்கு ஜனாதிபதி பணம் செலுத்தினாரா? அல்லது ஜனாதிபதி செயலகத்தினால் இதற்கான செலவுகள் பொறுப்பேற்கப்படுகின்றதா? அல்லது நாட்டின் தேசிய விமானசேவை நிறுவனம் பொறுப்பேற்கின்றதா? என்பதைச் சகலரும் அறிந்து கொள்ளவே விரும்புகின்றனர்.

மேலும், சில வாரங்களுக்கு முன்பதாக ஜனாதிபதியும் அத்துடன் அவரது பரிவாரங்களும் லண்டனுக்குப் பறந்து சென்ற விமானம் 'கித்துல' விமான நிலையத்திலிருந்து எவரையும் ஏற்றிவராது வெறுமையாக நாட்டிற்குத் திரும்பி வந்தது ஏன் என்பதையும் நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது. இத்தகைய செயற்பாடுகளே விமானசேவைகள் நிறுவனத்தின் இழப்புகளுக்குரிய ஒருசில காரணிகளாகும் என விசயமறிந்தவர்கள் கூறுகின்றனர்.

ஜனாதிபதியும் அவரது பரிவாரங்களுக்குமான விமானப் பயணங்களுக்கான கொடுப்பனவுகளை யார் வழங்குகின்றார்கள் என்ற தகவலைப் பெறுவதற்கு எடுத்த முயற்சிகள் பலனளிக்காது போயின.

இவ்விதமான கேள்விகள் எழுப்பப்பட்ட வேளையில் முகாமைத்துவப் பகுதி மௌனம் சாதித்தது. தனிப்பட்ட விமானப் பயணத்தின் போது இவ்வளவு பேரளவிலான பரிவாரங்களுடன் பறப்பினை மேற்கொண்ட நாட்டின் முதலாவது தலைவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவேதான்.

ஜனாதிபதிகளான பிரேமதாச, ஜே.ஆர்.ஜெயவர்த்தனா மற்றும் சந்திரிகா குமாரணதுங்க போன்றோர் ஜனாதிபதிகளாக இருந்த பொழுதுகளில் அவர்கள் ஒருபோதும் இவ்விதமான விமானப் பயணங்களை மேற்கொள்ளவில்லை.

விமானப் பயணிகளுக்கு குறைவற்ற வழுவற்ற சேவையினை வழங்கும் பொருட்டு 13 சுழற்சி முறைகளில் மாதமொன்றிற்கு 28 நாட்களுக்கு மிகக் குறைவான வருடாந்த விடுமுறை நாட்களுடனும் வாரஇறுதி மற்றும் போயா தின விடுமுறைகளின்றியும் பணிபுரியும் பணியாளர்களுக்கு அவர்களுக்கான மேலதிக வேலைக்கான கொடுப்பனவுகளை விமானசேவை நிறுவனத்தின் நஷ்டத்தைக் காரணங்காட்டி வழங்குவதில்லை எனவும் இது ஓர் நியாயமற்ற செயல் எனவும் அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது இப்படியே தொடர முடியாது எனவும், இருந்தும் எந்த விடுமுறையுமின்றிக் கடுமையாக வேலை செய்கின்ற அவர்களுக்கு மேலதிக வேலை நாட்களுக்கான ஊதியம் வழங்கப்படுவதில்லை என்றும் கவலைப்படுகின்றனர்.

விமானிகள், பயணிகள் கூடப் பணியாளர்கள், விமானநிலையத் தளப் பணியாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும், பொறியியலாளர்கள் எனப் பலதரப்பட்டோர் மாதமொன்றிற்கு 28 நாட்கள் பணிபுரிகின்றனர். இந்நாட்களை பன்னிரண்டு மாதங்களினால் பெருக்கிப் பார்த்தால் ஊழியர்கள் வருடமொன்றில் 13 மாதங்கள் வேலை செய்திருப்பது தெளிவாகப் புரியும். அவர்களுக்கு ஏன் மேலதிக மாதத்திற்கான ஊதியம் வழங்கப்படவில்லை?

இம்மேலதிக ஒரு மாதத்திற்கான ஊதியத்தை வழங்குவதற்கு நிறுவனத்திடம் பணம் இல்லை என்பதே அவர்கள் கவனமாகப் பயன்படுத்தக் கிடைத்த ஓர் காரணமாகவுள்ளது. அவ்வாறாயின், சிறீலங்கா விமானசேவையின் பணத்தினைச் செலவுசெய்து கொண்டு ஜனாதிபதி உலகமெங்கும் சவாரி செல்வதை அனுமதிப்பதற்கு அவர்களால் எவ்விதம் முடிகின்றது?

இதேவேளையில், 2010ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்குச் சிறிது காலம் முன்பதாக 2009 மார்கழி மாதத்தில் சகல விமானசேவை ஊழியர்களுக்கும் ஊக்குவிப்புத் தொகையினை வழங்குமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கட்டளையிட்டிருந்தார்.

உண்மையில் இக்கொடுப்பனவு அவர்களின் மனங்களை வென்றெடுத்து அதனூடாக வாக்குகளைத் தம்பக்கம் ஈர்ப்பதற்கான ஓர் தேர்தல் உத்தியாகவே வழங்கப்பட்டது.

எப்படியிருப்பினும் 13 சுழற்சி முறைகளில் பணி புரியாத ஊழியர்களுக்கும் அம்மேலதிக ஒரு மாத ஊக்குவிப்பு ஊதியம் வழங்கப்பட்டது குறித்து அனைவரும் வியப்படைந்தனர்.

அதேசமயத்தில், சிறீலங்கா விமானசேவையின் விமானப்பணிப் பெண்ணான செனாலி சேனாநாயக்கா என்பவரை ஒரு மாதத்தில் சொற்ப நாட்களுக்கு மட்டுமே விமானப் பயணத்திலும், மீதி நாட்களில் நாடாளுமன்ற உறுப்பினரான நாமல் ராஜபக்ஷவின் அந்தரங்கச் செயலாளராகவும் பணிபுரிய அனுமதிப்பது தொடர்பில் விமானசேவை நிறுவன நிர்வாகத்திற்கெதிராக விமானப் பணிப்பெண்கள் போர்க் கொடி தூக்கியுள்ளனர்.

இந்த அனுகூலங்களுக்கு மேலாக அதே செனாலிக்கு சகல, மிகமிக முக்கிய பிரமுகர்களின் விமானப் பயணங்களின் போதும் பணிபுரிவதற்கும் சந்தர்ப்பம் நன்றாகவே வழங்கப்படுகின்றது.

ஏனைய விமானப் பணிப்பெண்களுக்கு (STEWARDESS) மாதாந்தம் 6 தொடக்கம் 10 வரையிலான நாட்களுக்கு வேலையற்ற நாட்களாக இருக்கையில் இவருக்கு மட்டும் இந்த அதிகாரத்தை யார் வழங்கியது?

எது எப்படியிருப்பினும் அவருக்கு சிறீலங்கா விமானசேவையினால் ஊதியம் வழங்கப்படுகையில் அவரது சேவை நாமல் ராஜபக்ஷவுக்குக் கிடைக்கின்றது. ஓர் விமானப் பணிப்பெண்ணுக்கு மாதத்தில் ஒரு குறுகிய நாட்களுக்கு மட்டும் பறப்பதற்கும் அவருக்கு மாதாந்த ஊதியம் வழங்குவதற்கும் விமான சேவை நிறுவனத்தை அனுமதித்தது யார்? இவ்வாறெல்லாம் விமான சேவைப் பணியாளர்கள் கேள்விகளை அள்ளி வீசுகின்றனர்.

அதுமட்டுமன்றி, பயிற்சி விமானிகளுக்கான தேர்வில் எடுபடத் தவறிய விண்ணப்பதாரியொருவரைச் சேர்த்துக் கொள்வதற்காக மனிதவள திணைக்களத்திற்குச் செல்வாக்கினைப் பயன்படுத்தியதில் குற்றவாளியாகக் கருதப்பட்ட செனாலி சேனாநாயக்காவுக்கு எதிராக எதுவித ஒழுக்காற்று நடவடிக்கையினையும் விமானசேவை நிர்வாகம் எடுக்காதமை குறித்தும் அவர்கள் குறைகூறுகின்றனர்.

மேற்குறிப்பிட்ட செனாலி சேனாநாயக்கா ஜனாதிபதியின் மகனும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷவின் அலுவலகத்திலிருந்து வரும் தொலைபேசி அழைப்பு என நம்பும் படியான விதத்தில் தொலைபேசி மூலம் மனித வளத் திணைக்களத்துடன் அழைப்பினை மேற்கொண்டு குறித்த நபரை விமானி பயிற்சிக்காகச் சேர்த்துக் கொள்வதை மீள ஆய்வு செய்யும்படி வலியுறுத்திக் கூறியுள்ளார்.

எனினும், மனிதவளத் திணைக்களம் பின்னர் யாருடைய தொலைபேசி அழைப்பு என்பதை அடையாளங் கண்டுகொண்டது.

இவ்விதம் வேறெங்கேயாகிலும் நடந்திருக்குமேயாயின் நிச்சயமாகக் கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும். ஆனால் இங்கோ, இதுவிடயத்தில் விமானசேவை நிர்வாகம் மௌனம் சாதிக்கின்றது எனக் குறை தெரிவிக்கின்றனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பம்பல் பரமசிவம்



சில சமயம் அலட்டப்பிடிச்சால்.... நான் பரமசிவம் கட்டாயம் நிலை குலைந்து. நான் ஒரு பம்பலுக்காகச் சிலதைச் சொன்னாலும் அதில் கருத்துக்கொள்ள ஒரு பாடம் இருக்கும் கண்டியளோ.

இந்தாள் பரமசிவம் மாதிரி நாங்கள் இருந்தால் கடந்தென்று நினைச்சிட்டாலும் அது ஒரு பாடம் தான் பருவங்களை. எங்கடை பாக்கியம் மாமி வாறா என்ட உடனை என்ரை பிள்ளையளும் சொல்லிப்போடும். ஆ.. லெட்டு மாமி வாறா என்டு. அதென்ன லெட்டு? லெட்டு என்டால் இனிமையான ஒரு சிற்றுண்டி. ஆனால் இது அலட்டு. கன்னை கேட்டாலும் அலட்டு அலட்டென்று அலட்டி ஆக்களை வறுத்தெடுத்துப் போடுவாங்கள். பாக்கியமாமி வாறா என்டா உடனை ஆ... லெட்டு வாறா என்டு எல்லாரும் 'அலெட்டா' மிடுவினம். அவசரமாய்ப் போறனை அவ

வாற பாதையைத் தவிர்த்து வேறை பாதையைத் தான் பார்ப்பினை

இப்படித்தான் ஒருநாள் அவசரமாய்ப் போன நான் பாக்கியமாமியைக் கண்டிட்டன்.

காலிலை பெரிய பத்துப் போல மருந்து கட்டி ஒரு லெவலு தடியோடை நடக்க ஏலாமை நடந்து வந்தா. இதைக் கண்டிட்டு நான் பேசாமல் இருக்க ஏலுமோ. என்ன மாமி காலில் இப்ப பிளாஸ்ரர் சீலையில் கிடக்குது. "என்ன நடந்தது?" என்டு அவசரத்திலை நான் நானே அலட்டிப்போட்டு கேட்டன்.

"அட.... ஆர் இது பரமுவே? மருமோன்... அதை ஏன் கேக்கிறாய்? அட உனக்குத் தெரியும் தானே. என்ரை அப்பு என்னை என்ன மாதிரி வளர்த்தவரென்டு. ஐந்த பொடியளுக்கு நான் ஒரு பொம்பிளைப் பிள்ளை. பிள்ளை மாதிரியே என்னை வளர்த்தவை மகாராணி மாதிரி எங்கிட என்னை வளர்த்தெடுத்ததை என்று தொடங்கி தன்ரை பூப்புனித நீராட்டு விழா என்ன மாதிரி நடத்தினவை தெரியுமோ? என்டதைச் சொல்லி தான் இரண்டாம் தாரமா வாழ்க்கைப் பட்டதைச் சொல்லி பிள்ளை குட்டி பெத்ததெல்லாம் சொல்லி கடைசியாய்... இதுடாவோடை நேற்றுக் கிணறடிக்குப் போகேக்கை வழுக்கி விழுந்து கால் சுளுக்கு விட்டுப் போச்சுது." என்டு நிலை கொண்டு வந்து முடிப்பா...

பள்ளிக்கூடத்துக்குப் போற பிள்ளையள் படிச்ச பள்ளிக்கூடம் விட்டாலும் இவ கதை முடிஞ்சிருக்காது.

இப்ப பாக்கியம் மாமியைக் கண்ட உடனை, நானே சொல்லிப்போடுவன். ஐந்த பொடியளுக்கு ஒரு பொம்பிளைப் பிள்ளை என்டு தொடங்கி, அவையள் என்ன மாதிரி வளர்த்தவை. என்ன மாதிரிப் பார்த்தவை என்டெல்லாம் வரலாறு சொல்லி, என்ன மாமி இப்ப கொஞ்சம் மெலிஞ்சு போனியள் என்டு கேட்டிட்டு, வரட்டே மாமி என்று அவளின்ரை பதிலுக்கு நில்லாமல் டாட்டா பாய் காட்டிப் போடுவன்.

உந்தப் பிள்ளைக்குத் தெரிஞ்ச அளவுக்கு இந்தளவு ஊர் உலகத்திலை ஆருக்குத் தெரியும் என்று ஒரு செர்டிபிக்கற் தந்திட்டுப் போயிடுவா.

இன்னொரு லட்டு என்ரை அம்மாவின்ரை புருஷன் பொன்னம்பலத்தார்.

மாலை மச்சானுக்கை ஒரு மாமவோடை வந்தாரெண்டால்...... மத்தியானம் சாப்பிட்டுதிருக்கமாட்டார். அப்ப எங்கட பெரிய அக்கா டேய் பரமு... கொத்தானைச் சாப்பிட வரச் சொல்லடா என்டுவா.

"பொறு வாறன்... பரமு மச்சானோடை கதைச்சுக் கொண்டு இருக்கிறன்" என்டு பொன்னம்பலம் அத்தான் கதைக்கப் பிடிச்சாரெண்டால்....

இதுக்கிடையில பெரியக்கா இன்னொருக்கா சொல்லுவா. "டே பரமு... கொத்தான் மத்தியானமும் சாப்பிடேல்லை. ஆளை அனுப்பி விடு..." என்டு. பொன்னம்பலம் மச்சானுக்குக் கோபம் வந்திடும்.

"டேய் பரமு... கொக்காவுக்கு சொல்லு ஒரு கதையைப் பத்துத்தரம் சொல்லக் கூடாதென்டு" என்டுவார் அத்தான்.

ஓமோம் என்டு நான் சொன்னதுக்குப் பிறகும் அத்தான் சொல்லுவார். "ஒரு கதையை ஒரு மனுசன் பத்துதரம் சொல்லக்கூடாது? என்னத்தை? ஒரு கதையை பத்துத் தரம் சொல்லக்கூடாது. எனக்கு எல்லாம் பிடிக்கும். ஒரு கதையைப் பத்துத்தரம் சொல்லுறது பிடிக்காது" அத்தான் சொன்னார். நான் சொன்னன் எனக்கும் அப்பிடித்தான் என்டு.

நீ என்ரை மச்சான் தானே. என்டு தொடங்கினாரெண்டால். நான் கலியாணம் முடிச்சநாள் தொடக்கம் கொக்காவுக்கு சொல்லுறனான். ஒரு கதையை என்னத்தை, ஒரு கதையைப் பத்துத்தரம் சொல்லக்கூடாது.

எத்தினை தரம் சொல்லக் கூடாது. பத்துத்தரம் சொல்லக்கூடாது. விளங்காததுகளுக்கு திரும்பத் திரும்பச் சொல்லலாம். நான் என்ன விளக்கம் குறைஞ்ச ஆளோ? உவன் எங்கடை விக்கினேசுக்குச் சொல்லலாம். விக்கினேசு.... உன்ரை கொண்ணன் விக்கினேசம் கொஞ்சம் புத்திக் குறைவானது. அவருக்கு ஒரு கதையைப் பத்துத் தரம் சொல்லலாம். ஆனால் எனக்கு ஒரு கதையைப் பத்துத்தரம் சொன்னால் கோபம் பொத்துக்கொண்டு வரும். என்டு அத்தார் தொடங்கினாரெண்டால், எங்கடை குடும்பத்தில விக்கினேஸ்வரன் அண்ணையில தொடங்கி, அவர் கொஞ்சம் புத்திமத்திமான ஆள்தான். எல்லாரும் அப்பிடித்தான் என்டு கொண்டு வந்து முடிக்கிறதில அவருக்கு ஒரு சந்தோசம்.

உதுகளைப் பற்றி நான் சொல்ல வெளிக்கிட்டால் கொக்கா எனக்கு விக்கினேஸ் என்டிடுவா. அதென்ன விக்கினேஸ் நீங்களும் விக்கினேஸ் மாதிரி என்டு நேரடியாய்ச் சொல்லலாம் தானே. அது என்ன விக்கினேஸ். எனக்கு எல்லாம் பிடிக்கும் ஒரு கதையை பத்துத்தரம் சொன்னால்....

என்ன பேப்பரை மடிக்க வெளிக்கிறியள். அத்தான்ரை கதையை இனி நான் சொல்லேல்லை.

# தமிழினிக்கு கிடைத்தது ஏனைய பெண் கைதிகளுக்கும் கிடைக்குமா?

மூன்று ஆண்டுகளுக்கு மேலாக சிறைச்சாலையும் நீதிமன்றமுமாக தனது வாழ்நாளைக் கழித்த விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த தமிழினி எனப்படும் சுப்பிரமணியம் சிவகாமியை அவரின் ஒப்புதலைப் பெற்று புனர்வாழ்விற்கு உட்படுத்துமாறு சட்டமா அதிபர் திணைக்களம் கொழும்பு பிரதான நீதவான் ரஷ்மி சிங்கப்புலி அவர்களுக்கு பணிப்புரை விடுத்திருந்தது. அதற்கமைவாக தமிழினி புனர்வாழ்வுப் பயிற்சி பெறுவதற்கு விரும்புவதால் அவரை வவுனியாவிலுள்ள பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வுக்கு உட்படுத்துமாறும் சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றத்திற்கு ஊடாக பரிந்துரை செய்திருந்தது. தமிழினிக்கு புனர்வாழ்வு வழங்கலாம் என்று சட்டமா அதிபர் திணைக்களமும் நீதிமன்றமும் தீர்ப்பளித்திருப்பது உண்மையில் வரவேற்கத்தக்க விடயம் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

விடுதலைப்புலிகளது ஆயுதப் போராட்டத்தின் இறுதித் தருணங்களான 2009ஆம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் சுமார் பன்னிரண்டாயிரம் விடுதலைப்புலி உறுப்பினர்கள் இலங்கை இராணுவத்தினரிடம் சரணடைந்தும் கைது செய்யப்பட்டும் சிறைச்சாலைகளிலும் புனர்வாழ்வு நிலையங்களிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இதன்பின்னர் குறிப்பிட்ட காலம் கடந்த நிலையில் புனர்வாழ்வு நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த விடுதலைப்புலி உறுப்பினர்களான முன்னாள் போராளிகள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டு இதுவரையில் சுமார் பத்தாயிரம் வரையிலானோர் சமூகமயப்படுத்தப்பட்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கணிசமான முன்னாள் போராளிகள் நீதிமன்ற வழக்குகளை எதிர்கொண்டு அதன் நிமித்தமாக ஒருவருட காலம் புனர்வாழ்வுக் காலமாக நிர்ணயிக்கப்பட்டு. தற்போது கொழும்பு வருகின்ற வெலிக்கந்தையிலுள்ள சேனபுர, கந்தக்காடு புனர்வாழ்வு நிலையங்களிலும் மற்றும் வவுனியாவிலுள்ள மருதமடு, பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையங்களிலும் புனர்வாழ்வு பெற்று வருகின்றனர். பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையம் பெண்களுக்கான புனர்வாழ்வு நிலையமாகச் செயற்படுவது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு பூசா தடுப்பு முகாமிலிருந்து புனர்வாழ்வு பெறுவதற்கென்று குறித்த புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட முன்னாள் போராளிகள் அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஒருவருட காலவரையறை நிறைவடைந்ததும் அவர்களும் கட்டம் கட்டமாக சமூகமயப்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பதுவும் யாவரும் அறிந்த விடயம்தான். இதன் அடிப்படையில் புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பி அங்கு புனர்வாழ்வுக்கு உட்படுத்துவதற்கு நீதிமன்றம் பரிந்துரை செய்திருக்கின்ற தமிழினியும் குறிப்பிட்ட ஒருவருட கால புனர்வாழ்வுப் பயிற்சியின் பின்னர் சமூகத்துடன் ஒன்றிணைக்கப்படுவார் என்பது அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.

முன்னாள் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினியை புனர்வாழ்வுக்கு உட்படுத்துகின்ற விடயமும் ஊடகங்களில் வெளியாகிய காலப்பகுதியில் மற்றுமோர் ஆதாரபூர்வமான முக்கியமான செய்தியொன்றும் அண்மையில் இணையத்தளத்தில் வெளியாகியிருந்தது. அதாவது விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ தொலைக்காட்சி சேவையான தமிழீழ தேசிய தொலைக்காட்சியின் நிகழ்ச்சித் தயாரிப்பாளரும் அறிவிப்பாளருமாகிய இசைப்பிரியா அவர்கள் ஆடைகள் ஏதுமற்று நிர்வாணமாக நனைந்த நிலையில் ஆரோக்கியமாக தொடர்ந்து கொடூரமாக படுகொலை செய்யப்பட்ட நிலையிலான ஒளிப்படத்தைக் கொண்ட செய்தியொன்று குறித்த இணையத்தளம் வெளியிட்டிருந்தது. இசைப்பிரியா தொடர்பான ஒளிப்படங்களும் செய்திகளும் இதற்கு முன்னரும் பல தடவைகள் ஊடகங்களில் வெளிவந்திருந்ததுவும் குறிப்பிடத்தக்கது. அந்தச் சந்தர்ப்பங்களிலெல்லாம் இசைப்பிரியா படையினரிடம் சரணடையவில்லை. அவர் யுத்தத்திலேயே கொல்லப்பட்டார் என்று அரசாங்கமும் படைத்தரப்பும் மறுதலித்திருந்தது. அவ்வாறு அரசதரப்பு கூறுவதுபோல இசைப்பிரியா யுத்தத்தில் கொல்லப்பட்டிருந்தால் ஆடைகள் களையப்படுவதற்கான சாத்தியங்கள் இல்லையே. போர் முடிவுறும் தருணத்தில் படையினரிடம் சரணடைந்த இசைப்பிரியா படையினரால் நிர்வாணப்படுத்தப்பட்டு வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கோரமாக படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்ற உண்மையை ஊடகங்கள் உறுதி செய்திருக்கின்றன. போரின் இறுதித் தருணங்களில் படைத்தரப்பினர் புரிந்ததாகக் கூறப்படுகின்ற போர்க்குற்றங்களிலும் மனித குலத்திற்கு எதிரான செயற்பாடுகளிலும் இசைப்பிரியாவின் படுகொலைச் சம்பவம் பாரதூரமான விடயமாகவே கொள்ளப்படுகிறது. இசைப்பிரியா கடமையாற்றிய தமிழீழ தேசிய தொலைக்காட்சியும் நிதர்சன நிறுவனமும் அரசியல் துறையின் நிர்வாக ஆளுகையிலேயே செயற்பட்டது. எனவே இசைப்பிரியாவின் பொறுப்பாளராக தமிழினி செயற்பட்டிருந்தார் என்பது இங்கு முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது.

விடுதலைப்புலிகள் அமைப்பின் சிரேஷ்ட பொறுப்பாளர்களில் ஒரு பகுதியினர் போரின் இறுதித் தருணங்களில் களமுனைகளில் கொல்லப்பட்டதோடு இன்னும் சிலர் தங்களைத் தாமகவே அழித்துக் கொண்டனர். இன்னும் ஒரு பகுதியினர் படையினரிடம் சரணடைந்த பின்னர் குறிப்பிட்ட ஒரு படைப்பிரிவினரால் கொடூரமான முறையில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர். மேலும் ஒரு தொகுதியினர் முள்ளைத்தீவிலும் ஓமந்தையிலும் படையினரிடம் சரணடைந்த பின்னர் காணாமல் போயுள்ளனர். இந்தப் பட்டியல்கள் எதிலும் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளராகவிருந்த தமிழினியின் பெயர் இடம்பெறாமல் அவரது பெயர் வெலிக்கடைச் சிறைச்சாலையின் பெண்கள் பிரிவுப்பட்டியலிலும் தற்போது புனர்வாழ்வுப் பட்டியலிலும் இடம்பெற்றிருப்பது தமிழினிக்கு கிடைத்த ஒரு அதிஷ்டம் என்று கூறுவதுதான் பொருத்தமாகும்.


சட்டமா அதிபர் திணைக்களமும் கொழும்பு மாவட்ட நீதவான் நீதிமன்றமும் தமிழினியின் விடயத்தில் வெளிக்காட்டிய நல்லெண்ண சமிக்ஞையை தமிழ்ச்சமூகம் வரவேற்பதோடு மனத்திருப்தியும் கொள்கின்றது. இதே நல்லெண்ணத்தையும் கருணையையும் சிறைச்சாலைகளில் பல வருடங்களாக சிறைக்கூண்டுகளுள் அடைபட்டிருக்கும் ஏனைய கைதிகளுக்கும் வெளிக்காட்ட வேண்டும் என்பதில் அனைத்து தமிழ் சமூகத்தினதும் ஒருமித்த கருத்தாகவுள்ளது. தமிழினிக்கு புனர்வாழ்வுப் பயிற்சிகள் வழங்குவதற்கு நீதிமன்றம் பரிந்துரை செய்ததுபோல சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற ஏனைய தமிழ் அரசியல் கைதிகளுக்கும் புனர்வாழ்வளித்து அல்லது பொதுமன்னிப்பு வழங்கி அவர்களும் சமூகத்துடன் ஒன்றிணைந்து வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்த வேண்டும் என்று ஐனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் வேண்டுகோள் விடுத்திருப்பதோடு தமிழ் அரசியல் கைதிகளை புனர்வாழ்விற்கு உட்படுத்தாமல் தொடர்ந்தும் அவர்களின் விடுதலையை இழுத்தடித்து வருவது ஏன் என்ற கேள்வியையும் அவர் எழுப்பியுள்ளார். இந்த விடயத்தில் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் அவர்களும் புனர்வாழ்வு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர அவர்களும் பொறுப்புடன் செயற்பட வேண்டிய கடப்பாட்டில் உள்ளனர்.

அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவரும் தற்போதைய நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் அவர்கள் அமைச்சுப் பதவிக்கு வருமுன்னர் அதிகாரங்கள் அற்று இருந்த காலப்பகுதியில் அரசியல் கைதிகளை சந்தித்த போது "உங்களது விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றக் கூட்டங்களில் குரல் கொடுத்து அதற்கு ஊடாக உரிய தீர்வினைப் பெற்றுத் தருவோம்" என்று வாக்குறுதி வழங்கியிருந்தார். ஆனால் நீதி, சட்டம் என்பவற்றை உள்ளடக்கிய இது தொடர்பான சகல அதிகாரங்களையும் கொண்ட நீதி அமைச்சர் என்ற அமைச்சுப் பதவி கிடைத்தவுடன் கொடுத்த வாக்குறுதிகளையெல்லாம் மறந்து விட்டார் அல்லது மறந்து போனவராக மாறிவிட்டார்.

விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்த தருணத்தின் அரசபடையினரால் கைது செய்யப்பட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினியை குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் பயங்கரவாதத் தடுப்புப்பிரிவினரும் தொடரான விசாரணைகளுக்கு உட்படுத்தியிருந்தனர். அதன் நிமித்தமாகவே நீதிமன்றமும் அவருக்கு தொடர்ந்து விளக்கமறியல் உத்தரவைப் பிறப்பித்திருந்தது. தனது மூன்றாண்டு கால வாழ்நாளில் விசாரணையும், வெலிக்கடைச் சிறையில் விளக்கமறியலும். நீதிமன்றமுமாக பல்வேறு இடர்பாடுகளையும் சந்தித்த தமிழினிக்கு பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையம் புதுத்தெம்பையும் புதிய தொரு வாழ்க்கைக்கான படிக்கல்லாகவும் அமையும் என்று நம்புவோம். தமிழினி போன்று இன்னும் பல பெண்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நீண்ட காலமாக சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள். அதில் திருமணம் முடித்த குடும்பப் பெண்களும் அடங்குகின்றனர். அவ்வாறானவர்கள் தங்களது கணவன்மார், பிள்ளைகளை பிரிந்து வாழ்கின்றனர். இன்னும் சிலர் தங்களது பிள்ளைகளோடு சிறைவாசம் அனுபவிக்கின்றனர். ஆகவே, இவர்கள் அனைவரினதும் விடுதலைக்கு தமிழினியின் புனர்வாழ்வும் அதன் பின்னரான விடுதலையும் ஒரு திறவுகோலாக அமையவேண்டும் என்பதுவே அனைவரினதும் எதிர்பார்ப்பாகவுள்ளது.

■ ஏரிக்கோசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகளிர் சுடர்

# பெண்களே உடலைப் பரிசோதனை செய்து கொள்ளுங்கள்!

பெண்களில் 28, 30, 35 வயதுடையோர், மாரடைப்பு ஏற்பட்டு மரணமடைந்துள்ளனர். இதில், சில டொக்டர்களின் இளம் மனைவிகளும் அடங்குவர். இளம் பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் சுரக்கும் ஈஸ்டிரோஜன் என்ற ஹோர்மோன், இதயத்தைக் காப்பாற்றுகிறது.

இப்போது, பெண்கள் வேலைக்குச் செல்கின்றனர். வீட்டு வேலை, வேலைக்குச் செல்லும் போது ஏற்படும் போட்டி, வேலை நேரத்தில் ஆண் சகாக்களோடு ஏற்படும் உறவு, உரசல், விரிசல், இதனால் ஏற்படும் மன அழுத்தம், மன உளைச்சல், உடல் சோர்வு போன்றவை ஈஸ்டிரோஜனின் இதயம் காக்கும் பணியைத் தடுப்பதால், மாரடைப்பு வருகிறது.

இரவு, பகல் வேலைப் பளு, மசாலா உணவுகள், குடும்பக் கட்டுப்பாட்டு மாத்திரைகள், ஆகிய அனைத்தும், இதய நோய் விரைவில் வர வழிவகுக்கின்றன. பெண்கள், இதயத்திற்கு ரத்தத்தை எடுத்துச் செல்லும் கரோனரி ரத்தக்குழாய் நோய்களால் பாதிக்கப்படுகின்றனர்.

இவைகளில் இரண்டு வகை. ஒன்று, அடைப்பால் ஏற்படும் மார்பு வலி அல்லது மாரடைப்பு. இரண்டாவது வகை, ரத்த நாளச் சுருக்கம். ஆண்களைப் போல பெண்கள், தெளிவாக நெஞ்சுவலி என்று கூற மாட்டார்கள். காஸ் அடைக்கிறது, ஜீரணக் கோளாறு. சாப்பிட முடியவில்லை, ஏப்பம் என்று தான் கூறுவர். இதற்கு, காஸ் மாத்திரைச் சாப்பிட்டதும் சரியாகி விடுகிறது என்று கூறி, சந்தோஷப்படுவர். இது தவறான எண்ணம்.


30 வயதுக்கு மேல் உள்ள பெண்கள், குடும்பத்தில் ரத்தக்கொதிப்பு, நீரிழிவு, அதிக எடை, இடுப்பு அளவு அதிகம் உள்ளவர்கள் ஆண்டுதோறும் டி.எம்.டி., எக்கோ, கெட்டக் கொழுப்பு, டி.ஜி.எல்., எச்.டி.எல்., பரிசோதனை செய்ய வேண்டும்.

ரத்தஅழுத்தம், நீரிழிவு பரிசோதனைகள், 19 வயதில் ஆரம்பிக்கப்பட வேண்டும். பள்ளியிலேயே அது ஆரம்பிக்க வேண்டும்.

பெண்கள் உடலிலுள்ள சுண்ணாம்புச் சத்து அளவு, எலும்பில் அதன் அடர்த்தி ஆகியவற்றை, 45 வயதிற்கு மேல் கட்டாயம் பார்க்க வேண்டும். ஈஸ்டிரோஜனின் அளவு கண்காணிக்கப்பட வேண்டும்.

இளவயது, 30 வயதுக்கு மேல் உள்ள பெண்களுக்கு மாரடைப்பை விட, மார்பகப் புற்று நோய் அதிகம் தாக்குகிறது. கர்ப்பப்பை வாய் புற்று நோய் ஏற்படுகிறது. இவற்றைத் தவிர்க்க, ஆண்டுதோறும், அவற்றுக்குரிய பரிசோதனைகளை மேற்கொண்ட வண்ணம் இருப்பது இன்றியமையாதது.

# புருவங்கள் அழகாக



புருவங்களை கடுமையாக கீழ் நோக்கி வளைத்து ஷேப் செய்யக் கூடாது. லேசாக மேல் நோக்கி வளைந்திருக்கும் படி செய்தால் பார்க்க இளமையான தோற்றம் கிடைக்கும்.

நீளமான முகத்திற்கு புருவங்களை கண்களுக்கு சற்று வெளியே இருக்கும்படி பார்த்து ஷேப் செய்ய வேண்டும். அப்பொழுது தான் பார்க்க அழகாக இருக்கும்.

சாதாரண முகத்திற்கு சாதாரண அளவில் ஷேப் செய்யலாம்.

சிறிய முகத்திற்கு புருவங்கள் மிக நீளமாக இருக்கக் கூடாது.

எண்ணெய் மசாஜ் புருவத்தில் முடி வளர உதவுவதோடு, அது அடர்த்தியாகவும் கருமையாகவும் வளரவும் வழி செய்கிறது.


தினசரி குளிப்பதற்கு முன்பாகப் புருவங்களின் மேல் கொஞ்சம் தேங்காய் எண்ணெயைத் தடவி மசாஜ் செய்து விட்டு, ஊறியதும் குளிக்கலாம். இதுவும் புருவங்கள் அழகாக உதவும்.

புருவங்களில் உள்ள முடி வளர்ச்சிக்கு விளக்கெண்ணெய் மிக முக்கியம். அத்துடன் சம அளவு பாதாம் எண்ணெயும், ஒலிவ் எண்ணெயும் கலந்து சில துளிகள் அரோமா எண்ணெய் ஏதேனும் கலந்து மசாஜ் செய்யலாம். அதனால் அவ்விடங்களில் இரத்த ஓட்டம் அதிகரித்து, ரோமவளர்ச்சியும் அதிகரிக்கும்.

எண்ணெய் தடவி மசாஜ் செய்வதற்கு முன்பாக, புருவங்களை இரண்டு விரல்களால் மெதுவாகக் கிள்ளி விட வேண்டும். இவ்வாறு செய்வதால் அந்த இடங்களில் ரத்த ஓட்டம் அதிகரிக்கும்.

# பேரீச்சம்பழச் சட்னி

**தேவையானவை**



- பேரீச்சம்பழம் 200 கிராம்
- சீரகப்பொடி - 1/4 தேக்கரண்டி
- பச்சைமிளகாய் - 4
- புளித்தண்ணீர் - 1 தேக்கரண்டி
- மிளகாய்த்தூள் - 1 தேக்கரண்டி
- இஞ்சி - சிறு துண்டு
- வெல்லம் - 50 கிராம்
- தனியா - 1 தேக்கரண்டி
- எண்ணெய் - சிறிதளவு
- உப்பு - தேவையான அளவு

**செய்யும்முறை**

பேரீச்சம்பழக் கொட்டைகளை நீக்கி, பச்சைமிளகாய், இஞ்சி, மிளகாய்த்தூள், தனியா, சீரகம் இவற்றைச் சேர்த்து அரைத்துக் கொள்ளவேண்டும்.

அதை புளித் தண்ணீரில் போட்டுக் கலக்கி, தேவையான அளவு உப்பும் சேர்த்து வாணலியில் எண்ணெய் ஊற்றி கடுகைத் தாளித்து, சட்னியில் கொட்டினால் பேரீச்சம்பழச் சட்னி தயார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை பேசுவதில் தாமதமா?



வி.மகாதேவன்
மருத்துத்துறை

**கேள்வி:** எனது குழந்தைக்கு 2 வயதாகிறது இதுவரை அப்பா அம்மா என்ற இரு சொற்கள் மட்டுமேபேசுகிறாள். இது காலப் போக்கில் சரியாகிவிடுமா? சிகிச்சை அவசியமா?

விடை: 2 வயதாகின்ற குழந்தை சாதாரணமாக 50வரையான சொற்களை பேசும். ஆயினும் இது குழந்தைக்கு குழந்தை வேறுபடும் வித்தியாசமும் இருக்கவே செய்கிறது. ஆண் குழந்தைகளைவிட பெண் குழந்தைகள் விரைவாக பேசத் தொடங்குகின்றன. இதுபோலவே ஆசியக் குழந்தைகளை விட ஐரோப்பியக் குழந்தைகள் சீக்கிரம் பேச முயற்சிக்கின்றன என ஆய்வுகள் கூறுகின்றன. இவை பொதுவாக குழந்தைகளின் பேச்சுத் தொடக்கம் பற்றிய குறிப்புகள்.

இனி உங்கள் குழந்தை பற்றி குறிப்பாகப் பார்த்தால் நாக்கின் அடியில் தொடுப்பு போல (மருத்துவத்தில் Frenulum என்று அழைக்கிறார்கள்) ஒரு சவ்வு நாக்கின் அடிப்பகுதியையும் வாய்க் குழியின் தளத்தையும் தொடுத்துக் கொண்டிருப்பதைப் பார்க்கலாம். இந்தச் சவ்வு சாதாரணமாக இருப்பதைவிட இறுக்கமாக இருப்பின் இதனாலும் பேச்சு தாமதிக்கலாம். இவ்வாறான அசாதாரண சவ்வு Tonguetie எனப்படும். இது உள்ளதா என வைத்தியர் மூலம் நீங்கள் பரிசோதித்துப் பார்க்கலாம்.

செவிப்புலன் குறைபாடு காரணமாகவும் குழந்தை பேசுவதில் தாமதம் ஏற்படலாம் என்பது பலரும் மறந்து விடும் முக்கிய விடயமாகும். சில சமயம் குழந்தையின் செவிப்புலன் சிறிது பாதிக்கப்பட்டு இருந்தாலும் கூட பேச்சுத் திறன் தாமதிக்க காரணமாக இருக்கக்கூடும். 9 மாதமாகும் போது குழந்தை முன் புறம் ஏதேனும் விளையாட்டுப் பொருள் மீது கவனம் பதிந்து இருக்கையில் பின்புறமாக ஒரு ஒலியை எழுப்பினால் குழந்தையின் கவனம் சிதறி விளையாட்டுப் பொருளில் இருந்து இந்தப் புதிய சத்தத்தின் பக்கம் திரும்ப வேண்டும்.

இதை மருத்துவமொழியில் Distraction Hearing Test என மருத்துவர்கள் அழைப்பார்கள். சாதாரணமாக பெற்றோர்களுமே தமது குழந்தையை செவிப்புலன் தொடர்பாக தாமே இவ்வாறு பரிசோதித்துப் பார்க்க முடியும். இல்லாவிடின் காது மூக்கு தொண்டை சத்திரசிகிச்சை நிபுணரிடம் காண்பித்துக் குழந்தையின் செவிப்புலனை பரிசோதிக்க முடியும்.

2 வயதான பின்பும் தனக்குத் தேவையானதை சுட்டிக் காட்ட இலகுவாக பழகக்கூடிய சொற்கள் இருந்தும் குழந்தை சைகை மொழியை பயன்படுத்துகிறது எனில் பேச்சுத்திறன் தாமதித்தல் என்ற பிரச்சினை உள்ளதா என சந்தேகிக்கப்பட வேண்டும். இவ்வாறான தாமதத்துக்கு ஏனைய காரணங்களானவை Autism எனப்படும் பிரச்சினை, பிறப்பில் நிறை மிகக்குறைவாக இருந்தமை, பிரசவத்தின்போது குழந்தையின் தலை இறுகுப்பட்டு மிகநீண்ட நேரமாக சிக்கலடைந்த பிரசவம், இரட்டைக் குழந்தையரில் ஒருவராக இருந்தமை, Cerebral palsy எனும் வியாதி முதலியனவற்றில் ஒன்றோ பலவோ இருக்கலாம். எனினும் பிறப்பு நிறை ஒன்றரைக் கிலோவிலும் குறைவாக இருந்த குழந்தைகள் எந்தப் பேச்சுக் குறைபாடோ ஏனைய குறைபாடுகளோ இன்றி ஜாம்பவான்களாக வளர்ந்து வருவதும் நடந்துள்ளது. எனவே, பேச்சுத்திறன் தாமதித்தல் மேலுள்ள காரணங்கள் ஒன்று அல்லது பலவற்றின் சேர்க்கை காரணமாக ஏற்பட்டதாக இருக்கலாம். குழந்தை வளர்ந்து வரும் சூழலில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் பெரியவர்களால் பாவிக் கப்படுமாயின் குழந்தை ஒரு மொழியைக் கூட சரியாகப் பேசத்தொடங்குவதும் தாமதிக்கலாம். உதாரணமாக வீட்டிலும் அயலிலும் உறவினர் மத்தியிலும் தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளும் கலந்து பேசப்படுமாயின் சிலசமயம் சில குழந்தைகள் எந்த மொழியையும் கற்க முடியாது தடுமாறலாம்.

எனினும் பல குழந்தைகள் இதையும் தாண்டி ஒரே நேரத்தில் இரண்டு மொழிகளையும் கற்றுத் தேறி விரைந்து பேசத் தொடங்குவதும் நடக்கிறது. எனவே பேச்சுத் தாமதம் பல காரணிகளின் சேர்க்கையால் ஏற்படும் பிரச்சினை என கருதப்படலாம். ஒருமாத, இருமாதக் கைக்குழந்தையை மடியில் வைத்து அது கேட்கும்படி பாடுவது பேச்சுத்திறன் விரைந்து ஏற்பட உதவுமென ஆராய்ச்சிகள் காட்டுகின்றன. முற்காலத்தில் தாலாட்டுப் பாடுவதை ஒரு முக்கிய விடயமாக இவ்வகையில் கருதலாம். பெரியவர்கள் ஒருவருடன் ஒருவர் பேசாதும் உம்மென்று மூஞ்சியை வைத்துக் கொண்டிருக்கும் சூழலில் கூட குழந்தைக்கு மொழியைக் கேட்கும் சந்தர்ப்பம் இல்லாததால் அக் குழந்தையின் பேச்சு தாமதமடையலாம்.

[illegible]





# கறிவேப்பிலை கறிக்கு மட்டுமானதில்லை!

இந்தியாவிலும் இலங்கையிலும் அந்தமான் தீவுகளிலும் வளரும் சிறு புதர்ச்செடியாகவும், சிறு மரமாகவும் காணப்படும், இலையுதிர் காலத்தில் இலையுதிர்க்கும் தன்மைகொண்ட இந்தச் செடியில் நறுமணங் கொண்ட இலைகள் சமையலுக்காக மட்டுமின்றி மருத்துவத்திற்கும் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. இதன் மணம் எல்லோருக்கும் பிடிக்கும்.

இலைகளில் விட்டமின் ஏ, இரும்பு, தாமிர, அயச் சத்தும், கால்சியம் மற்றும் அமினோ அமிலங்கள் நிறைந்தும் காணப்படுகிறது.

கோனிகின் எனும் ஒருவகை மரப்பிசினும் உண்டு. காம்புகளிலும், இலைகளிலும் சிறிது சாம்பல் உப்பு இருக்கும். கறிவேப்பிலைச் செடியின் இலைகள், பட்டை மற்றும் வேர் முதலிய பகுதிகள் பசி தூண்ட, வெப்பம் உண்டாக்க பயன்படுத்தப்படுகின்றன. பசும் இலைகளிலிருந்து எண்ணெய் வடித்தெடுக்கப்படுகின்றது. இந்த எண்ணெய் அழகுசாதனப் பொருள் தயாரிப்பிலும் பயன்படுத்தப்படுகிறது. சோப்புகளில் மணத்தை நிலைக்கச் செய்யும்.

கறிவேப்பிலையை வறுத்து உட்கொண்டால் வாந்தியைத் தடுக்கலாம். கொப்புளங்களுக்கும் விஷக்கடிகளுக்கும் தடவும்மருந்தாக, மேல்பூச்சாக உபயோகிக்கலாம். சீதபேதிக்கு தளிர் இலையைத் தயிருடன் உட்கொள்ளலாம். கசக்கிய இலைகள் பற்றாக தோல் வீக்கங்களில் பயன்படுத்தலாம். தலைமுடி நரைப்பதைத் தடுத்து கேசத்திற்கு ஆரோக்கியத்தை அளிக்கும். கறிவேப்பிலையை பச்சைப் பயறுடன் கலந்து ஸ்நானப் பொடியாகப் பயன்படுத்தலாம்.

கறிவேப்பிலை 2 கைப்பிடியுடன் கசகசா 2 கிராம், கஸ்தூரி மஞ்சள் 4 கிராம் அனைத்தையும் சேர்த்து மையாக அரைத்து அம்மைத் தழும்புகளுக்கு பூசி, ஊறவைத்து கழுவ அம்மைத் தழும்புகள் மறையும்.

கறிவேப்பிலை, மருதாணி இலை, கரிசலாங் கண்ணி இலையின் தண்டு, வேப்பிலையின் கொழுந்து சிறிது சேர்த்து அரைத்து தலையில் பூசி வந்தால் நரை மறையும். எல்லாரைக்கும் உள்ள குணங்கள் இதற்கும் உண்டு. ஜீரணசக்தியை எம்மருங்கு விரிவுபடுத்துவது போல, இம்மூலிகையும் சக்தியைத் தூண்டிப் பெருக்கும்.

நன்றாக முற்றிய கறிவேப்பிலை 100 கிராமுடன் சுக்கு 25 கிராம், கடுக்காய் உலர்ந்த தோல் இவற்றை நன்றாக உலர்த்தி பொடியாக்கி இந்தப் பொடியைத் தேவைக்கேற்றவாறு வெந்நீரில் கலக்கி குடித்து வந்தால் அழிந்து போன சுரப்பிகள் புதுப்பிக்கப்பட்டு ருசி இல்லா நாக்கில் ருசியை ஏற்படுத்திக் கொடுக்கும். வாத பித்தங்கள் உடலில் ஒளிந்து கொண்டிருந்தால் அவை விடுபட்டு மறைந்து விடும்.

வளரும் குழந்தைகளுக்கும் வலுக்குறைந்த பெரியோர்களுக்கும் இரும்புச் சத்தை இழக்கும் பெண்களுக்கும் கறிவேப்பிலை சிறந்த சத்துணவு. தொற்று நோய்களை எதிர்க்கும் சக்தி கறிவேப்பிலைக்கு உண்டு. இரத்தசோகைச் சுத்தம் செய்யும் திறன், புண்களை விரைவில் குணப்படுத்தும் ஆற்றல் இதற்கு உண்டு. குறிப்பாக வாய்ப்புண்களைக் குணப்படுத்தும். பல் ஈறுகளை வலுப்படுத்தும். விட்டமின் சி ஊட்டச் சத்து, இரத்தச் சோகையை விரட்டியடிக்கும் பாலிக் அமிலம் எனும் உயிர்ச்சத்து இதில் அடங்கியுள்ளது. தலைமுடியின் வளர்ச்சிக்கும் வனப்புக்கும் உதவும் ஊட்டச்சத்துகள் கறிவேப்பிலையில் நிறைய உண்டு. கறிவேப்பிலையில் நார்ச்சத்து அதிகம் இருப்பதால் மலச்சிக்கலைப் போக்கும்.

ஜீரணத்திற்கு உதவும் சிறந்த மருந்தாக இந்த இலை பயன்பட்டு வருகிறது. இந்த இலை தனித்தும், பிற பொருள்களோடு சேர்ந்தும் நம் நோய்களைப் போக்குகிறது.

பசும் இலைகளிலிருந்து நீராவி அழுத்தத்தில் தைலம் வடித்தெடுக்கப்படுகிறது. இத்தைலம் குளியல் சோப்புகளில் சேர்க்கப்படும் நறுமணங்களை நிலைக்கச் செய்யப் பயன்படுகிறது. கறிவேப்பிலைப் பழங்களில் இருந்தும் தைலம் எடுக்கப்படுகிறது.

முகத்திலுள்ள அம்மைத் தழும்பினைப் போக்க கைப்பிடி கறிவேப்பிலையுடன், கசகசா 15 கிராம், கஸ்தூரி மஞ்சள் 10 கிராம், இவற்றை மைபோல அரைத்து முகத்தில் கனமாகப் பூசி கால் மணி நேரம் ஊறவைத்து பின் வெந்நீர் கொண்டு கழுவி விட வேண்டும். இவ்விதம் காலை, மாலை இருவேளை செய்யப் படிப்படியாகத் தழும்பு மறைந்து விடும்.

தைலம் காரச் சுவையும், அழுத்தமான நறுமணமும் கொண்டிருக்கும். நாட்டு மருந்து வகைகளில் கறிவேப்பிலைச் செடியின் இலைகள், பட்டை மற்றும் வேர் முதலிய பகுதிகள் பசி தூண்ட பயன்படுத்தப்படுகிறது.

கறிவேப்பிலை மரத்தின் மலர்கள் வெண்மையாக இருக்கும். பின்னர் இது பச்சை நிறமுள்ள காய்களாகக் காய்க்கும். காய்கள் கரிய நிறமுள்ள கனியாக மாறி கீழே உதிர்ந்துவிடும். இந்த கனியினுள் கனத்த உறையுடன் கூடிய விதைகள் இருக்கும். அழகிய கரிய கூந்தலுக்கு கறிவேப்பிலை உத்தரவாதம் தரும் எளிய மருந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைச் சம்பவம்

# வித்தியாசமான கொள்ளைக்காரன்...!

**வாலிபனின் வலக் கையில் துப்பாக்கியொன்று பளபள வென மின்னியவாறிருந்தது. ஒரு கணம் அவன் துப்பாக்கியை வைத்திருந்த கை மேலே உயர்ந்து வயதான வனைத் தாக்கிற்று. மறு கணமே என்னை நோக்கித் துப்பாக்கி சற்றும் எதிர்பாராத வகையில் குறிவைத்தது.**

பொலிஸ் இலாகாவில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவனான எனக்கு இப்பொழுது வயது எழுபதை நெருங்குகின்றது. தலையிலும் முழுமையாக நரை விழுந்துவிட்டது. எனது 24 வது வயதில் பொலிஸ் இலாகாவில் ஓர் சாதாரண பொலிஸ்காரனாக இணைந்து கொண்ட நான், 36 வருட சேவைக் காலத்தில் பலவகையான சிக்கல்களையும், ஆபத்துகளையும் சந்திக்க நேர்ந்தது. எனினும் எனது கடமை, கண்ணியம், கட்டுப்பாடுள்ள நடத்தையினாலும், அயராத உழைப்பின் மூலமாகவும் படிப்படியாகப் பதவி முன்னேற்றங்களைப் பெற்று, இறுதியில் எனது 60வது வயதில் சேவையில் இருந்தும் ஓய்வு பெற்றேன்.

எனது பெயர் ஜாக். தனிமையில் ஓய்வாக இருக்கும் வேளைகளில் என் சேவைக்காலத்தில் கிடைத்த அனுபவங்களையும், நேரிட்ட ஆபத்து நிறைந்த சம்பவங்களையும் மனதில் நினைவு கூர்வதுண்டு.

அவ்வகையில், எனது 30வது வயதில் நடைபெற்ற ஓர் சம்பவம் என் மனதில் நிழலோடியது. நான் அப்பொழுது சூரா இலாகாப் பிரிவில் ஓர் பொலிஸ்காரனாகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன்.

வசந்த ஆரம்பத்தின் ஒரு நாள் காலை 10.15 மணியளவில், நான் வழக்கம்போல போக்குவரத்து நிரம்பிய ஒரு தெருமுனையில் நின்று போக்குவரத்தினைச் சீர் செய்து கொண்டிருந்தேன். அப்போது திடீரென ஒருவன் என்னருகில் மூச்சிரைக்க ஓடி வந்து நின்றான். அவன் முகத்தில் பதட்டத்துடன் "நான் பார்ட்டன் விடுதியிலிருந்து வருகிறேன். எனது அறையின் ஜன்னலருகில் நின்று உடையணிந்து கொண்டிருந்தேன். அப்போது மேல்மாடியிலிருந்து ஜன்னல் கண்ணாடி உடைந்து நடைபாதையில் விழுந்தது. நான் எனது அறையிலிருந்து வெளியே வந்து மேலே அண்ணார்ந்து பார்த்தேன். அக்கட்டடத்தின் மேல் மாடியில் வட்டிக்குப் பணம் கொடுப்பவன் ஒருவனது அலுவலகம் இயங்கிவருகின்றது. அவனது அலுவலக அறையின் கண்ணாடிதான் உடைந்திருந்தது என் பார்வைக்கு தென்பட்ட அங்கு ஏதோ சச்சரவு நடைபெறுவது போலத் தோன்றுகிறது" எனக் கூறினான்.

யாராவது கடன் கேட்டு வந்திருப்பார்கள். வட்டிக்காரன் கடன் கொடுக்க மறுத்திருக்கலாம் அதன் நிமித்தம் அவர்களுக்குள் சச்சரவு ஏதேனும் மூண்டிருக்கலாம் என நான் தீர்மானித்தேன்.

எனினும் தகவல் அறிந்தும் போகாதிருப்பது சரியல்லவெனக் கருதியும் அத்துடன் மேற்கொண்டு விபரீதம் ஏதும் நடந்துவிடக் கூடாதென்பதாலும், அங்கு சென்று சச்சரவைத் தீர்க்க எண்ணினேன். "நல்லது வாருங்கள் போய்ப்பார்க்கலாம்" எனக் கூறிவிட்டு வந்தவரையும் என்னுடன் இடத்தைக் காட்டுமாறு கூட்டிச் சென்றேன்.

கதிரவன் இதமாகத் தன் கிரணங்களைப் பரப்பிக் கொண்டிருந்தான். நீல வானத்தின் பின்னணியில் கறுத்தக் கல் கட்டடம் வானை நோக்கி உயரமாக நின்றிருந்தது. அங்கிருந்த நூறு கஜ தூரத்தில் பார்ட்டன் விடுதியிருந்தது.

வீதியெங்கும் பரபரப்பாகவும், சனநெரிசலான போக்குவரத்து அதிகமாகவும் காணப்பட்டது. அக்கட்டடத்தின் மாடியிலுள்ள அலுவலகங்களுக்குத் தனி மாடிப்படிகள் இருந்தன. கட்டடத்தை அண்மித்ததும் என்னுடன் வந்தவன் அந்த மாடிதான் என்று கண்ணாடி உடைந்திருந்த ஜன்னலைச் சுட்டிக் காட்டினான்.

நான் தாமதியாது கல்லினாலான படிக்கட்டின் மீது ஏறத் தொடங்கினேன். ஏறும் படிக் கட்டு வழி இருட்டாகவும் ஆனால் குளிர்ச்சியாகவும் இருந்தது. கட்டடத்திற்கு வெளியே கதிரவன் கிரணம் இதமாகவும், சந்தடி நிறைந்தும் இருந்தது. இங்கே பூரணமான நிசப்தம் நிலவியது.

ஒருவாறு படிகளில் ஏறி வட்டிக்காரனின் அலுவலக அறைவாசலை அடைந்துவிட்டேன். பல இடங்களில் இரத்தக்கறைகள் காணப்பட்டன. அறையினுள் இரண்டுபேர் ஒருவரையொருவர் கட்டிப்பிடித்துக் கொண்டிருந்தனர். ஒருவன் வயதானவனாகக் காணப்பட்டான். அவன்தான் வட்டிக்காரன் போலும், மற்றவன் எனது வயதுள்ள வாலிபனாகத் தோன்றினான். அவர்கள் இருவரும் ஏனோ தெரியவில்லை, சந்தடி செய்யாமலே சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். இருவரும் அப்படியும், இப்படியுமாக ஒருவரையொருவர் தள்ளிக் கொண்டனர். ஆரம்பத் திகைப்பை அடுத்து நான் கண்டகாட்சி எனது இதயத்துடிப்பையே நிறுத்திவிடும் போலிருந்தது.

வாலிபனின் வலக் கையில் துப்பாக்கியொன்று பளபளவென மின்னியவாறிருந்தது. ஒரு கணம் அவன் துப்பாக்கியை வைத்திருந்த கை மேலே உயர்ந்து வயதானவனைத் தாக்கிற்று. மறுகணமே என்னை நோக்கித் துப்பாக்கி சற்றும் எதிர்பாராத வகையில் குறிவைத்தது.

எனது நெஞ்சம் படபடத்தது. நான் அச்சமயத்தில் நிராயுதபாணியாக நின்றிருந்தேன். இவ்வாறான விபரீதம் ஒன்றினை நான் எதிர்பார்க்கவும் இல்லை. எனது மூச்சே நின்று விடும்போலிருந்தது. மனைவியின் அழகிய முகம் ஒருகணம் என் நினைவில் வந்து சென்றது. திருமணமாகி ஆறுமாதங்கள் மட்டுமே கழிந்திருந்தன.

எதிர்பாராத நிலையில் எம்மைக் குறிவைத்தபடி துப்பாக்கியுடன் ஒருவனைப் பார்த்தால் நிலைமை எப்படி இருக்கும் என்பதை அந்தப் பயங்கர அனுபவத்தை, நேரில் பார்த்தவர்களால் தான் உணரமுடியும்.

பயப்பட்டு ஒதுங்க அப்போது அவகாசம் இருக்கவில்லை. அது மட்டுமின்றி மேற்கொண்டு விபரீதம் எதுவும் நடக்காமல் தடுப்பதற்கு நான் ஏதாவது செய்தேயாகவேண்டும். ஒருவாறு மனதைத் தைரியப்படுத்திக் கொண்டு பாய்ந்து துப்பாக்கியுடன் சேர்த்து வாலிபனின் கையைப் பிடித்துக் கொண்டேன். என் உயரமே அவன் இருந்ததால் அவனை இழுத்து இரண்டு படிகள் இறக்கினேன். அவன் பலம் கொண்ட மட்டிலும் விடுபடத் திமிறினான். கோபாவேசத்துடன் என்னைத் தாக்கமுயற்சித்தான். நான் குனிந்தும், நெளிந்தும் அவனது கைவீச்சுகளில் இருந்தும் தப்பித்தேன்.

எவ்வளவு நேரமாக நாங்கள் இருவரும் சண்டையிட்டுக் கொண்டிருந்தோமோ தெரியாது. அப்படிப்பட்ட சமயத்திலெல்லாம் மணிக்கணக்குப் பார்க்க முடியாது.

விரல்களினால் என் கண்களைக் குத்திவிட முயன்றான். ஒருவிதமாக அவனைக் கட்டிப் பிடித்துப் போராடி அவன் கையிலிருந்த துப்பாக்கியைப் பிடுங்கிக் கொண்டேன். துப்பாக்கியை என் பாண்ட் பையில் போட்டேன். அவனைப் பிடித்து இழுத்துக் கொண்டு வட்டிக்காரனை நோக்கி அவனறைக்குள் சென்றேன். அறை கசாப்புத் தொட்டிபோல் காணப்பட்டது. எங்கும் இரத்தம் தெறித்திருந்தது. வட்டிக்காரன் இன்னமும் எப்படி உயிருடன் இருக்கிறான் என்று வியந்தேன்.

உண்மையில் அந்த வயதான வட்டிக்காரன் சரியான முரடன். குறைந்தது அவனது உடலிலிருந்து இரண்டு பட்டி இரத்தமாவது போயிருக்கும். அதுதான் அறையெங்கும் இரத்தமயமாக இருந்தது. அப்படியிருந்தும் கூட அவனால் திடமாக எங்களைப் பின் தொடர்ந்து படிக்கட்டுகளில் இறங்கிவர முடிந்தது. எனக்காக அவன் பொலிசுக்குப் போன் பண்ணினான். நான் வாலிபனைத் தப்பி விடாதபடி பிடித்துக் கொண்டிருந்தேன்.

என்ன நடந்தது என்பதை வட்டிக்காரனே விபரித்தான். வாலிபன் முகமூடி அணிந்து கொண்டு வட்டிக்காரனின் அலுவலகத்தினுள் நுழைந்தானாம். துப்பாக்கியைக் காட்டி மிரட்டிப் பணத்தை இரும்புப் பெட்டியிலிருந்து எடுக்கச் சொன்னானாம். இது சுத்தப் பயமுறுத்தல் எனக் கருதிய துணிச்சலுடைய வட்டிக்காரன் புயல்போல வாலிபன் மீது பாய்ந்தான். இருவருக்கும் வெகு நேரமாகப் பயங்கரச் சண்டை நடந்திருக்கிறது.



சண்டையின் போது ஒரு சமயம் வாலிபனை நோக்கி வட்டிக்காரன் கதிரையைத் தூக்கி வீசியிருக்கிறான். அதுதான் ஜன்னல் கண்ணாடியை உடைத்திருக்கிறது. வாலிபனோ அவனைப் பிடித்துத் துப்பாக்கியின் பின்புறத்தால் தலையில் ஓங்கி அடித்திருக்கிறான். தலையில் இருந்து தெறித்த இரத்தமே அறையில் தெறித்திருந்தது.

வாலிபன் சொன்ன கதையோ வித்தியாசமாக இருந்தது. அவனது தாயார் பிளக்பூலில் வாரவிடுமுறையைக் கழிப்பதற்குத் தனது மகள் வீட்டிற்குச் சென்றிருக்கிறாள். அவனது தகப்பனாரோ மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் ஓர் உயர்நிலை அதிகாரியாக வேலை பார்த்து ஓய்வு பெற்றிருப்பவர்.

நாவல்கள் வாசிப்பதில் மிகுந்த ஈடுபாடுடைய அவன் ஒரு துப்பறியும் வழிப்பறி நாவலைப் படித்தானாம். அதன் சுவாரஸ்யத்தினால் உந்தப்பட்டு தகப்பனாரிடமிருந்து பொய் கூறிக் காசைப் பெற்றுக் கொண்டு நாவலில் படித்தவண்ணம் கொள்ளையடிக்க வந்தானாம். அதுதான் வாலிபன் செய்த முதல்குற்றம். அந்தவகையில் அவன் அதிர்ஷ்டக்காரன். அவனுக்கு எச்சரிக்கையுடன் தண்டனையும் குறைத்து வழங்கப்பட்டது.

என்னையும், வட்டிக்காரனையும் சுட்டுக்கொல்லாமல் விட்டது அவன் அதிர்ஷ்டம் என்று நான் எண்ணினேன். அல்லாமலும், அவன் நோக்கிக் குறிவைத்த கணத்தில் துப்பாக்கியால் சுட்டிருந்தால் இன்று நான் உயிருடன் இருந்திருப்பேனா? எனவே, ஒரு வகையில் நானும் அதிர்ஷ்டசாலிதான். யாருக்கு அதிர்ஷ்டம் என்பது விடையளிக்க முடியாத கேள்வியாக உள்ளது.

**தமிழில் – ஜெகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வருகிறது மெகா ரீவி

ஷார்ப் தனது புதிய உலக மெகா சைஸ் ரிவியைக் களமிறக்க இருக்கிறது. திரையரங்கத் திரை போல் இருக்கும் இந்த ரிவிக்கு ஆகுவோஸ் எல்இடி ரிவி என்று பெயர் சூட்டடப்பட்டிருக்கிறது.

4 அடி உயரம், 6 அடி அகலம் மற்றும் 8 அடி நீளத்தில் வரும் இந்த டிவி பார்ப்பதற்கு மிகவும் பிரமாண்டமாக இருக்கும். அதுபோல் இந்த ரிவியை வீடுகளில் வைத்தால் இந்த ரிவிதான் வீட்டின் மையமாக இருக்கும்.

இந்த பிரமாண்ட ரிவி மிகவும் துல்லியமாக இருக்கும். ஏனெனில் இதன் ரிசலூசன் அதிகமாக இருக்கிறது. இதன் விலை 10,999.99 அமெரிக்க டாலர்களாகும். இந்த ரிவியின் எடை 141 பவுண்டுகளாகும்.

இந்த ஆக்குவோஸ் ரிவி ஒரு முழுமையான எச்டி வசதியைக் கொண்டது. அதோடு இரண்டு 3டி கண்ணாடிகளையும் கொண்டிருக்கிறது. மேலும் இந்த டிவி இணையதள இணைப்பு வசதியும் கொண்டிருப்பதால் ரசிகர்கள் இணையதளம் மூலமாக இந்த ரிவியில் நெட்ப்ளக்ஸ், ஹுலு, ஆக்குவோஸ் அட்வான்டேஜ் லைவ் போன்ற நிகழ்ச்சிகளை அனுபவிக்க முடியும்.

இந்த ரிவியின் மூலம் குடும்ப உறுப்பினர்களை ஒருங்கிணைக்கலாம் என்று ரிவி ஆய்வாளர் அவி க்ரீன்கார்ட் கூறுகிறார். ஏனெனில் பெரிய ரிவி இருக்கும்போது அதில் நிகழ்ச்சிகளைப் பார்க்க குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக வருவார்கள் என்று கூறுகிறார். அதன் மூலம் அவர்களுக்கு உறவு நெருக்கம் அதிகரிக்கும் என்றும் நம்புகிறார்.

# சந்திரனுக்கு செல்ல 700 கோடி

## 2015 ஆம் ஆண்டு சுற்றுலா ஆரம்பம்

பூமியின் பல்வேறு கண்டங்களுக்குச் சென்று பார்த்துவிட்டு போரடித்துப் போய்கிடக்கும் ஆகப் பெரும் கோடீஸ்வரர்களுக்கு இது ஒரு மகிழ்ச்சியான செய்தி...

சர்வதேவ விண்வெளி மையத்துக்கு சுற்றுலா



சென்று வரும் காலம் தொடங்கிவிட்டது. லண்டனைச் சேர்ந்த Excalibur Almaz என்ற நிறுவனம் சர்வதேச விண்வெளி மையத்தைத் தாண்டி சந்திரனுக்கும் சுற்றுலா போய்வர திட்டமிட்டிருக்கிறது.

வரும் 2015 ஆம் ஆண்டு முதல் சந்திரனுக்கான சுற்றுலா தொடங்குகிறது. இதற்கான செலவு ரூ700 (இந்தியப் பணம்) கோடிதானாம்!!

இதற்காக ரஷியாவிடம் இருந்து 6 சிறப்பு விண்கலங்கள் கூட வாங்கப்பட்டுவிட்டன. இதில் ஒரு விண்கலத்தில் 3 பேர் மட்டுமே பயணிக்க முடியும் என்கின்றனர்.

பூமியில் இருந்து 3 லட்சத்து 76 ஆயிரத்து 586.5 கி.மீற்றர் தூரம் சென்று திரும்பும் வகையிலான இத்திட்டம் தொடர்பாக நேற்று லண்டனில் செயல்முறை விளக்கம் காண்பிக்கப்பட்டது.

# ஸ்மார்ட்போன்களைக் குறி வைக்கும் சைபர் குற்றவாளிகள்



கூடிய விரைவில் ஆன்ட்ராய்ட் ஸ்மார்ட்போன்களை சைபர் குற்றவாளிகள் குறி வைப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

இப்போதெல்லாம் அதிகமான தகவல்கள் ஸ்மார்ட்போன்களின் மூலம் பரிமாறி கொள்ளப்படுகிறது. கம்ப்யூட்டர் மூலம் தேவையான தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்தி வந்தது போய், இப்போது வாடிக்கையாளர்கள் அதிகம் ஸ்மார்ட்போன்களை வாங்க விரும்புகின்றனர்.

ஸ்மார்ட்போன்களின் உதவியுடனேயே வங்கி பணப் பரிமாற்றங்கள் நடைபெறுகின்றது. இந்நிலையில் நிறைய பாஸ்வேர்ட் மற்றும் வங்கி அக்கவுன்ட் நம்பர் போன்ற முக்கியமான தகவல்கள் இப்போது ஸ்மார்ட்போன்களிலேயே பரிமாறி கொள்கின்றனர்.

தொழில் நுட்ப சவுகரியங்களை வழங்கும் கம்ப்யூட்டர்களின் வசதிகள் இப்போது உலகம் முழுவதும் ஸ்மார்ட்போன்களில் பெறமுடிகிறது. இதனால் சைபர் குற்றவாளிகள் ஸ்மார்ட்போன்களில் உள்ள பாஸ்வேர்டு போன்ற முக்கிய தகவல்களை திருட முற்பட்டால் இதன் மூலம் பெரிய பாதிப்பு இருக்கும்.

சமீபத்தில்தான் உலகின் அனைத்து கம்ப்யூட்டர்களையும் கட்டுப்படுத்தும் வகையில், புதிய வைரசை ஹேக்கர்கள் பரப்பியுள்ளதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியிருக்கிறது. இந்த புதிய வைரஸ்களால் வரும் ஜூலை மாதம் இணையத் தளங்கள் முடக்கப்படுவதற்கான வாய்ப்பிருப்பதாகவும் கூகுள் எச்சரிக்கை விடுத்திருந்தது.

அதிலும் பெரும்பாலான மக்கள் ஆன்ட்ராய்ட் இயங்கு தளம் கொண்ட ஸ்மார்ட்போன்களை தான் பயன்படுத்துகின்றனர். அதிலும் ஆன்ட்ராய்ட் ஆப்ப ரேட்டிங் சிஸ்டத்தின் பாதுகாப்பு குறைவாக இருப்பதால், இந்த இயங்கு தளத்தினை சைபர் குற்றவாளிகள் எளிதாகத் தாக்க அதிக வாய்ப்பு உள்ளது என்றும் தகவல்கள் வெளியாகி உள்ளது.

**உலகமே தொழில் நுட்பமாக மாறிக் கொண்டு வருகையில் இதனால் இயற்கையும் அழிந்து வருகிறது என்று ஒரு கருத்து வெளியாகி உள்ளது. இதை கருத்தில் கொண்டு சில நிறுவனங்கள் எலக்ட்ரோனிக் சாதனங்களை மூங்கிலில் படைத்திருக்கிறது. அதில் சில புதிய படைப்புகள் இதோ...**



*ஆசஸ் நோட்புக் லப்டப்பும் இங்கு மூங்கில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த பேம்பூ நோட்புக்கின் சில தொழில் நுட்பங்களைப் பார்க்கலாம். பேம்பூ நோட்புக் விண்டோஸ் விஸ்டா ஹோம் ப்ரீமியம் இயங்குதளம் கொண்டது. இது இன்டெல் கோர் 2 டியோ புராசரையும் வழங்கும். 12.1 இஞ்ச் திரையினை கொண்டது. இந்த நோட்புக் 0.3 மெகா பக்ஸல் கமராவினையும் கொடுக்கும். மூங்கிலில் உருவாக்கப்பட்ட இந்த பேம்பூ நோட்புக், பட்டரியுடன் சேர்த்து 1.57 கிலோ கிராம் எடை கொண்டதாக இருக்கும்.*




*ஸ்மார்ட்போனுக்கென்று பிரத்தியேகமாக வெர்ஸ் கேஸ் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ஸ்மார்ட்போன் கேஸை ஐபோன்-4 மற்றும் ஐபோன் 4-எஸ் ஸ்மார்ட்போனுக்கு பயன்படுத்தலாம்.*




*கீபோர்ட் போன்றவற்றையே உருவாக்கும் நிறுவனங்கள், மவுஸை உருவாக்காதா என்ன? பேம்பூ மவுஸை வழங்குகிறது பேம்பூக்கீ. இந்த பேம்பூ மவுஸ் மிக நுட்பமாக தயாரிக்கப்பட்டுள்ளது என்பது இதன் வடிவமைப்பலேயே தெரிகிறது.*

*மூங்கிலில் தயாரிக்கப்பட்டுள்ள ஹெட்போனும் இந்த மூங்கில் படைப்பு பட்டியலில் உள்ளது. இந்த டிஜே ஹெட்போனில் துல்லியமான ஒலியினை கேட்க முடியும்.*





*கீபோர்டையும் மூங்கிலில் தயாரித்து இருக்கிறார்கள். புளூடூத் கீபோர்டான இதை ஐபேடில் பயன்படுத்தலாம். மூங்கிலால் ஆன இந்த புளூடூத் கீபோர்ட் எளிதாக அளிக்க கூடிய ஒரு பொருள். அதனால் இந்த கீபோர்டு சுற்று சூழலுக்கு எந்தவித மாசுகளையும் உருவாக்காது.*



*ஆப்பிள் நிறுவனத்தின் ஐபேட்-2 டேப்லட்டினை பாதுகாக்கவும் ஒரு கேஸ் தயாரிக்கப்பட்டுள்ளது. வெர்ஸ் பேம்பூ ஐபேட்-2 கேஸ் பார்ப்பதற்கு மெலிதாக இருக்காது. கெட்டியான வடிவமைப்பை கொண்ட இந்த கேஸ் ஒர் புதிய ஐபேட்-2 டேப்லட்டிற்குச் சிறந்த பாதுகாப்பினை வழங்கும்.*

*இங்கு நாம் பார்ப்பது ஐபேம்பூ ஸ்பீக்கர்ஸ். மூங்கிலில் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட இந்த ஸ்பீக்கரை ஐபோன்-4 மற்றும் ஐபோன் 4-எஸ் ஸ்மார்ட்போனில் பயன்படுத்தலாம். ஆனால் மூங்கிலால் ஆன இந்த ஸ்பீக்கரின் கீழ் பகுதி உருண்டை வடிவமாக உள்ளதால், இது சரிவர சம தரையில் அமருமா? என்பது கேள்வியாக இருக்கிறது. இருப்பினும் இயற்கை சுற்றுப்புற சூழலை பாதுகாக்க இது போன்ற புதுமையான படைப்புகள் வரவேற்கத்தக்கது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாப்ஸி

# விமர்சனம் – சகுனி



காரைக்குடியில் வசித்துவரும் வசதியான ஒரு குடும்பம் காலாகாலமாக ஊருக்கே அன்னதானம்செய்துவருகிறது. தங்களிடம் பணம் இல்லாவிட்டாலும் எப்பாடு பட்டாவது, ஊருக்கு அன்னதானம் செய்யும் அக்குடும்பத்திற்கே சோதனை வந்துவிடுகிறது.

மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்தும் திட்டத்தின் ரெயில்வே தண்டவாளம் இவர்கள் வீடு வழியாக வருகிறது. வீட்டை இடித்து அத்திட்டத்தை நிறைவேற்ற அரசாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில், வீட்டை எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென அந்த குடும்பத்தின் வாரிசான கமலக்கண்ணனிடம், அவரது தாத்தா கேட்டுக்கொள்கிறார். கமலக்கண்ணனும் வீட்டை காப்பதாக தாத்தாவுக்கு உறுதி கூறுகிறார்.

தாத்தாவுக்கு உறுதியளித்தபடி வீடு இடிக்கப்படாமல் காப்பதற்காக சென்னை சென்று, ரயில்வே அமைச்சரை சந்திக்க முடிவு செய்கிறார் கமலக்கண்ணன். சென்னையில் தனது அத்தை பரிமளா வீட்டில் தங்கும் கமலக்கண்ணன், அங்கு தனது அத்தை மகள் ஸ்ரீதேவியை சந்திக்கிறார். அங்கு ஸ்ரீதேவிக்கும் கமலக்கண்ணனுக்கும் காதல் மலர்கிறது. இந்நிலையில் ரயில்வே அமைச்சருடன் சந்திப்பை ஏற்படுத்தி தருவதாகக் கூறி பலரும் ஏமாற்றுவதால் விரக்தி அடைகிறார் கமலக்கண்ணன்.

விரக்தியில் ரோட்டோரமாக நடந்து வரும் கமலக்கண்ணனை, ஆட்டோ டிரைவர் அப்பாராவ் ரஜினி வற்புறுத்தி தனது ஆட்டோவில் ஏற்றுகிறார். தன்னை ரஜினி என அறிமுகம் செய்துகொள்ளும் ஆட்டோ டிரைவரிடம், என் பேரு கமல் என கமலக்கண்ணன் தன்னை அறிமுகம் செய்து கொள்கிறார். தன் ஆட்டோவில் வரும் கமலக்கண்ணனிடம் பணமே இல்லை என தெரிந்ததும் ரஜினி டென்சன் ஆவதும், அதே ரஜினியிடம் தன் பிளாஷ்பேக்கை கமலக்கண்ணன் சொல்வதுமாக கலகலப்பாக கதை நகர்கிறது.

பின்னர் அமைச்சரை சந்திக்கும் முடிவைக் கைவிட்டு, தாத்தாவின் ஆலோசனைப்படி தங்கள் தொகுதி எம்.எல்.ஏவும், முதல்வருமான பூபதியை சிரமப்பட்டு சந்திக்கும் கமலக்கண்ணனுக்கு, அங்கும் ஏமாற்றமே மிஞ்சுகிறது. தனது பினாமியான காண்டிராக்டர் வசுந்தரா தேவிக்கு டெண்டர் கொடுத்துவிட்ட பூபதி, கமலக்கண்ணனின் வீட்டை இடித்தே ஆக வேண்டும் எனக் கூறுவதோடு அவரை அவமானப்படுத்தி விடுகிறார். இதனால் நொந்துபோன கமலக்கண்ணன், அரசியல்வாதிகள் தங்கள் கடமையை சரிவர செய்யவில்லை, எனவே சரியானவர்கள் ஆட்சிக்கு வரவேண்டும் என நினைக்கிறார். எனவே நேர்மையாக இருந்தால் ஜெயிக்க முடியாது என சிவாஜி பட பாணியில் முடிவுசெய்து, தனது வீட்டைக்காப்பதற்காக சகுனியாக மாறி தந்திரங்களை செய்கிறார்.

பின்னர் ரஜினியின் ஆட்டோவுக்கு பைனான்ஸ் செய்யும் ரமணி ஆச்சி மூலமாக அரசியலில் களமிறங்குகிறார் கமலக்கண்ணன். முதல்வர் பூபதியின் கட்சிக்கு எதிராக கவுன்சிலர் தேர்தலில் ரமணியைப் போட்டியிட வைத்து தனது தந்திரங்கள் மூலமாக அவரை ஜெயிக்கவும் வைக்கிறார். பின்னர் கவுன்சிலர் ரமணியை, மேயர் தேர்தலில் நிற்கவைத்து மேயர் ஆக்குகிறார். இறுதியில் சட்டமன்ற தேர்தல் வர, எதிர்க்கட்சி தலைவரை சந்தித்து தனது தந்திரங்கள் மூலம் அவரை ஜெயிக்க வைத்து முதல்வராக்க முயல்கிறார். இம்முயற்சியில் கமலக்கண்ணன் ஜெயித்தாரா, அவரது வீட்டைக் காப்பாற்ற முடிந்ததா என்பதே படத்தின் கிளைமாக்ஸ்.

படத்தின் முதல்பாதியை நகைச்சுவையாகவும், இரண்டாவது பாதியில் அதிரடியாகவும் சொல்லியிருக்கிறார் இயக்குனர். முடிச்சை அவிழ்ப்பது ஒரு சுவாரஸ்யம் என்றால், அவிழ்க்க முடியாத முடிச்சுகளைப் போடுவது அதைவிட சுவாரஸ்யம் என பஞ்ச் சொல்லி, அழகான முடிச்சுகளைப் போட்டுள்ள இயக்குநர் சங்கர் தயாளுக்கு ஒரு சபாஷ் போடலாம்.

கமலக்கண்ணனாக வரும் கார்த்தி காமெடியிலும், காதல் காட்சிகளிலும், அதிரடியிலும் பின்னியிருக்கிறார். சந்தானத்துடன் இணைந்து அவர் செய்கிற ரகளையில் அரங்கம் அதிர்கிறது. அப்பாராவ் ரஜினியாக வரும் சந்தானம் வழக்கம்போல தனது பணியை கச்சிதமாக செய்து, கரவொலியில் மிதக்கிறார். கார்த்தியின் அத்தை மகள் ஸ்ரீதேவியாக வரும் ப்ரணிதா, காதல் காட்சிகளில் ஒன்றுவதோடு தனது கேரக்டரில் நன்றாகப் பொருந்தியிருக்கிறார்.

சகுனி.....கார்த்திக்கு மேலும் ஒரு வெற்றிக்கனி....!



சகுனி

# சினி துளிகள்

★ மங்காத்தா படத்தில் நடித்ததற்காக அஜீத்துக்கு சிறந்த வில்லன் விருதினை வழங்கியுள்ளது விஜய் ரிவி. இதே படத்துக்காக மக்கள் மனம் கவர்ந்த ஹீரோ விருதினையும் அவர் வென்றார்.

★ அஜீத், விஜய், சிம்பு மாதிரியான பிரபல ஹீரோக்களுடன் நடனமாடும் வாய்ப்புகள் என்றால், எந்த ஆட்சேபனையும் இல்லை. உடனே அதிரடி ஆட்டத்துக்கு ஆயத்தமாகி விடுவேன் என்கிறார் ஓவியா.

★ ஆதிபகவன் படத்தில் இரட்டை வேடத்தில் நடிக்கிறார் ஜெயம் ரவி. இதில் ஒரு வேடம் திருநங்கை வேடமாம். இப்படம் வெளிவந்ததும் ஜெயம் ரவியின் நடிப்பைப் பார்த்து பலர் வாயைப் பிளக்கப்போவது உறுதி என்கிறது படக்குழு.

★ ஹாலிவுட் நடிகை கிறிஸ்டன் ஸ்டீவர்ட்டின் சம்பளம் எவ்வளவு தெரியுமா? ரூ.196 கோடி. அமெரிக்காவின் சினிமா பத்திரிக்கையான போர்ப்ஸ் ஆலிவுட் நடிகைகளின் சம்பள பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில் கிறிஸ்டன் ஸ்டீவர்ட் அதிக சம்பளம் வாங்கும் நடிகைகளில் முதலிடத்தில் இருக்கிறார்.

★ நயன்தாராவுக்கு டர்ட்டி பிக்சர் தமிழ் ரீமேக்கில் நடிக்க வாய்ப்பு வந்தது. சில்க் ஸ்மிதா வேடம். கொஞ்சம் கவர்ச்சி தூக்கலாக இருக்கும் என்று சொல்லி, சம்பளமாக ரூ 2 கோடியை ஒரே செக்காகத் தந்தார்களாம், படத்தின் தயாரிப்பாளர்கள். ஆனால் நயன்தாரா அந்த வேடத்தில் நடிக்க முடியாது என ஒரேயடியாகச் சொல்லிவிட்டாராம். காரணம்? சீதாவாக நடித்து நல்ல இமேஜைப் பெற்றுள்ள தன்னால், இப்பாத்திரத்தில் நடித்து அந்த இமேஜக் கெடுத்துக் கொள்ள முடியாது என்றாராம்

★ ரஜினியும், நானும் இணைந்து நடிப்பது பற்றி கேட்கிறார்கள். நாங்கள் சேர்ந்து நடித்தால் வியாபாரத்தில் அந்தப் படத்துக்கு வானமே எல்லையாக இருக்கும். எங்கள் இருவருக்கும் அதிக சம்பளம் கொடுக்க வேண்டும். சம்பளம் போக படத்தை எடுப்பவர்களுக்கு என்ன மிச்சம் இருக்கும்? இவ்வாறு கூறியுள்ளார் கமல்.

★ அலெக்ஸ் பாண்டியன் படத்தில் கார்த்திக் அனுஸ்கா ஓடும் ரயிலில் இருந்து ஆற்றினுள் பாயும் காட்சி கர்நாடகா மாநிலத்தில் கிருஸ்ணராஜசாகர் அணை அருகே காட்சிப்படுத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சேட்டை
நடிகர் : ஆர்யா
நடிகை : ஹன்சிகா மோத்வானி
இயக்குநர் : கண்ணன்

# திரைக்கு வரவுள்ள...



குறும்புக்கார பசங்க
நடிகர் : சஞ்சீவ்
நடிகை : மோனிகா
இயக்குநர் : டி.சாமிதுரை

சொல்லமாட்டேன்



யார் இவன்

## திருநங்கையாக விவேக்

சுந்தர் சி, சிநேகா நடிப்பில் வெளியான முரட்டுக் காளை படத்தில் திருநங்கையாக நகைச்சுவை நடிகர் விவேக் நடித்திருக்கிறார். இது குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், எமது சமுதாயத்தில் திருநங்கைகளும் ஒரு அங்கம். அவர்களின் வேடத்தில் நான் நடித்தது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. முரட்டுக் காளை படத்தில் அவர்களின் பிரச்சினைகளை சொல்லியிருக்கிறேன். இப்படத்தை பார்த்த திருநங்கைகள் பலரும் பாராட்டினர். தற்போது வழிப்போக்கன், சந்திரா, சிங்கம் 2 ஆகிய படங்களில் நடித்து வருகிறேன் என்று தெரிவித்தார்.

## துப்பட்டாவால் பிரபுதேவாவை மறைத்த நயன்தாரா

தனது கையில் பச்சைக்குத்தப்பட்ட பிரபுதேவா பெயரை அழிக்காத நயன்தாரா, சமீபத்தில் நடந்த நிகழ்ச்சியொன்றில் தனது கையை துப்பட்டாவால் மறைத்தபடி சென்றார். சமீபத்தில் ஆந்திரா, ஐதராபாத்தில் இசைத்துறையினரை கௌரவிக்கும் பொருட்டில் நடத்தப்படும் எம்.ஏ.ஏ இசை விருது விழா நிகழ்ச்சியில் நயன்தாரா கலந்து கொண்டார். அப்போது அவர் கையில் உள்ள பிரபுதேவா பெயரை எப்படியாவது புகைப்படம் எடுத்துவிடவேண்டும் என்று புகைப் பட நிருபர்கள் முயற்சித்தனர். ஆனால், தனது துப்பட்டாவால் அவரது கையின் முன்பகுதியை மறைத்தவாறு சென்றார். இந்நிகழ்ச்சியில் நயன்தாராவுடன் தமன்னா, ஸ்ருதிஹாசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## அஜித் கட் - அவுட்டுக்கு பாலாபிஷேகம் செய்த சிம்பு...!

அஜித்தின் தீவிர ரசிகர் சிம்பு. அவருடைய எந்த படம் வெளிவந்தாலும் அதை முதல்நாளில், முதல்ஷோவில் பார்த்து விடுவார். அந்தளவுக்கு அஜித்தின் தீவிர வெறியரான அவர் இப்போது ஒருபடி மேலே போய் அவரது கட்-அவுட்டுக்கு பாலா பிஷேகம் செய்துள்ளார். இப்போது நடித்து வரும் வாலு படத்தில் தான் இப்படி ஒரு காரியத்தை செய்திருக்கிறார்.

விஜய் இயக்கத்தில் சிம்பு நடித்து வரும் புதிய படம் வாலு. இப்படத்தில் அவருக்கு ஜோடியாக ஹன்சிகா நடிக்கிறார். காமெடியில் சந்தானம் கலக்க வருகிறார். சமீபத்தில் தான் இப்படத்தின் ஷூட்டிங் ஆரம்பமானது. படத்தின் கதைப்படி சிம்பு தனது காதலி ஹன்சிகாவுடன் அஜித்தின் பில்லா-2 படத்தை முதல்நாளில் போய் பார்க்கிறார். இந்தக்காட்சியை சென்னை கமலா தியேட்டரில் வைத்து எடுத்தனர். அப்போது தான் சிம்பு அஜித்தின் பில்லா-2 கட்-அவுட்டிற்கு பாலாபிஷேகம் செய்து இருக்கிறார். பின் ஹன்சிகாவுடன் அமர்ந்து படத்தையும் பார்க்கிறார். இதைதான் படமாக்கி இருக்கிறார்கள். கூடவே படத்தில் அஜித் தோன்றும் ஒவ்வொரு காட்சிக்கும், அவரை பற்றி பஞ்ச் டயலாக் கொடுத்து புகழ்ந்து தள்ளியுள்ளாராம்.

## ஷங்கரின் புதிய படம் ஐ! கதாநாயகன் விக்ரம்!!

ஷங்கர் இயக்கும் புதிய படம் பற்றி அதிகாரப்பூர்வமான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. சீயான் விக்ரம் நாயகனாக நடிக்கும் அந்த படத்திற்கு ஐ என தலைப்பிடப்பட்டுள்ளது.

வெற்றிப்பட தயாரிப்பாளர் ஆஸ்கார் வி.ரவிச்சந்திரன் தயாரிப்பில் உருவாகும் இப்படத்திற்கு, ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்கிறார். பிரபல ஒளிப்பதிவாளர் பி.சி.ஸ்ரீராம் முதல் முறையாக ஷங்கருடன் இணைகிறார். விக்ரமுக்கு ஜோடியாக சமந்தாவும், முக்கிய வேடத்தில் மலையாள முன்னணி நடிகர் சுரேஷ் கோப, சிவாஜி கணேசனின் மூத்த மகனும் நடிகர் பரபுவின் அண்ணனுமான ஜி.ராம்குமார், சந்தானம் ஆகியோரும் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

ஐ என்பதற்கு அழகு, அரசன், ஆசான், வியப்பு, மேன்மை, எழுத்து, எசமானன், நுண்மை, அம்பு, ஐயம் என பல பொருள்கள் உள்ளன. இவற்றின் கலவையாக உருவாகும் இந்த படத்தின் படப்பிடிப்பு ஜூலை 15இல் சென்னையில் ஆரம்பிக்க உள்ளது. சண்டைக் காட்சிகளை அனல் அரசுவும், சீனாவை சேர்ந்த பீட்டர் மிங்கும் இணைந்து அமைக்கிறார்கள். இந்த ரொமான்டிக் த்ரில்லர் படத்தின் படத்தொகுப்புப் பணியை ஆண்டனி ஏற்றுள்ளார். ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைப்பில் கபிலன் எழுதி விஜய்பரகாஷ் பாடிய பாடல் சமீபத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தூம் 3 இல் ரஜனி...?

கடந்த ஆண்டிலிருந்தே தூம் 3 குறித்து பல செய்திகள் வெளிவந்தவண்ணமுள்ளன. இந்தப் படத்தில் ரஜினி வில்லனாக நடிக்கிறார் என்று முதலில் கூறப்பட்டது. ரஜினி யுடன் பேசி வருவதாகவும் கூறினார்கள். ஆனால் ரஜினி தரப்பிலிருந்தே, இந்தப் படத்தில் அவர் நடிப்பதாக இல்லை என்று விளக்கம் வெளியானது. அடுத்த சில தினங்களில் இந்தப் படத்தில் அமீர்கான் அந்த வில்லன் வேடத்தில் நடிப்பார் என அறிவித்தனர்.

இப்போது மீண்டும் தூம் 3 உடன் ரஜினியை தொடர்புபடுத்தி செய்திகள் வெளியாகி வருகின்றன. தயாரிப்பாளர் தரப்பில் நம்பிக்கை இழக்காமல் தொடர்ந்து ரஜினியுடன் பேசி வருகின்றனர்.

ரஜினி நடித்தால் இந்தப் படம் பெரிய ரேஞ்சுக்குப் போய்விடும் என்பது அமீர்கானின் எதிர்ப்பார்ப்பாம். தயாரிப்பாளரிடம் தொடர்ந்து இதை அவர் வலியுறுத்துவதால், ரஜினிக்கு சம்பளமாக எத்தனை கோடி தரவும் தயாரிப்பாளர்கள் தயாராக உள்ளார்களாம்... அதாவது அமீர்கான் சம்பளத்தைப் போல ஒன்றரை மடங்கு!

## கோச்சடையான் -புதிய தகவல்கள்

இந்த ஆண்டின் பெரும் எதிர் பார்ப்புக்குரிய படங்களில் முதலிடத்தில் இருப்பது சந்தேகமில்லாமல் சூப்பர் ஸ்டாரின் கோச்சடையான்தான்.

இது வெறும் அனிமேஷன் படம் தானே, எப்படி வரப் போகிறதோ என்று ஆரம்பத்தில் சந்தேகம் கிளப்பியவர்கள், நாளுக்கு நாள் அந்தப் படம் குறித்த உண்மையான தகவல்கள் தெரியவந்ததும், அமைதியாகி, ஆர்வம் காட்ட ஆரம்பித்துள்ளமை சௌந்தர்யாவுக்கு நிச்சயம் நல்ல செய்திதான்!

இந்தப் படத்துக்கு தமிழ் திரையுலகம் தாண்டி, இந்தி, தெலுங்கு, ஜப்பான், கொரியா, யுஎஸ் என பல நாடுகளிலும் விசாரிப்புகள் தொடர்கின்றன. ஹாலிவுட்டில் நடிக்காமலேயே, ஹாலிவுட் நடிகருக்கு நிகரான செல்வாக்கைப் பெற்றுள்ள ஒரே நடிகர் என்ற பெருமை ரஜினிக்குக் கிடைத்திருக்கிறது.

கோச்சடையான் படப்படிப்பு கிட்டத்தட்ட முடிந்து விட்டது. சில பாடல்கள் மட்டுமே படமாக்க வேண்டியுள்ளது. அதற்காக மீண்டும் ரஜினி ஹொங்கொங் செல்லப் போகிறார்.

இந்நிலையில் படத்தின் கதை குறித்த தகவல் வெளியாகியுள்ளது.

படத்தில் ரஜினி, அப்பா - மகன் என இரு வேடங்களில் நடித்துள்ளார். கதைப்படி ரஜினி, ஜாக்கி ஷெராப், நாசர் ஆகியோர் பண்டைய தமிழ் மன்னர்கள். ரஜினி, ஜாக்கி ஷெராப் ஆகிய இரு மன்னர்களுக்கும் இடையில் சண்டை நடக்கிறது.

இந்த சண்டை அடுத்த தலைமுறையிலும் தொடர்கிறது. ரஜினியின் மகனுக்கும் (ரஜினி), ஜாக்கி ஷெராப் மகனான ஆதிக்கும் நடக்கும் சண்டையில் யார் வெற்றி பெற்றார்கள்? எப்படி வெற்றி பெற்றார்கள் என்பதுதான் படத்தின் கதை. இதில் ரஜினிக்கு உதவும் பாத்திரத்தில் சரத்குமார் வருகிறார்.

இந்த ஆண்டு இறுதியில் படம் வெளியாகும் என் கிறார்கள். படப்பிடிப்பு குறைந்த நாட்களில் முடிந்துவிட்டாலும், தொழில்நுட்ப நேர்த்திக் காக இன்னும் சில மாதங் கள் கூட அவகாசம் தேவைப்படுகிறதாம். ஹொங்கொங், லாஸ் ஏஞ்சல்ஸ் மற்றும் லண்டனைச் சேர்ந்த தொழில்நுட்ப நிபுணர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.



சினி.. பிட்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிந்து கொள்ளுங்கள்

- ★ எல்லாவித வேலைகளுக்கும் ஒரே மாதிரியாக சக்தியை நாம் செலழிப்பதில்லை. மாடிப்படிகளில் ஏறி இறங்குவதற்குத்தான் மிக அதிகமான சக்தி (800 கலோரிகள்) செலவழிகிறது.
- ★ எக்காரணம் கொண்டும் தேன், இட்லிமாவு, பேனா மை, ஜென்சன் வயலெட், சேறு போன்றவற்றை தீக்காயங்களின் மீது பூசக்கூடாது.
- ★ ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு தேவையான உப்பின் அளவு 3 கிராம் மட்டுமே.
- ★ தேங்காய் காய்த்த ஏழாவது மாதத்தில்தான் அதில் சர்க்கரை அளவு அதிகமாக இருக்கும். இளநீர் ஆரம்பத்திலேயே வெட்டப்படுவதால் சர்க்கரை அளவு குறைவாகவே இருக்கும்.
- ★ ஒரு பெண் கருவுற்ற மூன்றாம் மாதத்திலேயே கருவில் உள்ள குழந்தையின் பற்களின் அஸ்திவாரம் தோன்ற ஆரம்பிக்கிறது.
- ★ மனிதனுடைய 32 பற்களும் தனித்தனி வடிவமைப்பு உடையதாகவும் அளவில் வித்தியாசப்பட்டும் இருக்கும். கைரேகையைப் போலவே பற்களும் மனிதனுக்கு மனிதன் மாறுபடுகின்றன. உலகில் எந்த இரு மனிதனின் பற்களின் அமைப்பும் ஒத்திருப்பதில்லை.
- ★ ஆஸ்திரேலியாவில் உள்ள ஃபிரஷ் டர்க்கி என்ற பறவையினக் குஞ்சு முட்டையிலிருந்து வெளிவந்ததும் பறக்கத் தொடங்கிவிடும்.
- ★ இரண்டாம் உலகப்போரின்போது உலோகப்பற்றாக்குறைஏற்பட்டதால் அப்போது ஆஸ்கர் விருதுகள் மரத்தினால் செதுக்கப்பட்டன.
- ★ உப்பை விரும்பி உண்ணும் விலங்கு முள்ளம்பன்றி.
- ★ நத்தை தன் இருப்பிடத்தைவிட்டு எவ்வளவு தூரம் நகர்ந்து சென்றாலும் வந்த வழியை மறப்பதில்லை. திரும்பி தன் இருப்பிடத்துக்கு வந்து சேர்ந்துவிடும்.
- ★ மண்பானை நீர் குளிர்ந்திருக்கக் காரணம் பானை நுண்துகள்கள் வழியே நீர் ஆவியாவதே.
- ★ வியர்வையில் கந்தகச் சத்து இருப்பதால் வெள்ளி ஆபரணங்கள் கறுத்துப் போய்விடுகின்றன.



## கடவுளின் விலை?

ஒரு அரசாங்க அலுவலகத்துக்கு ஏதாவது வேலையாகப் போனால், ஊழியர்கள் அவரவர்தகுதிக்கேற்பலஞ்சம் கேட்கிறார்கள் இல்லையா! அதே, மனநிலையில் தான், கடவுளையும் விலைக்கு வாங்க மனிதன் முயற்சிக்கிறான்.

ஒருவன் ஒரு வைரக் கல்லுடன் காய்கறி கடைக்கு வந்தான்,

''ஐயா! இந்தக் கல்லுக்கு எவ்வளவு காய்கறி தருவீர்கள்?'' என்றான். வியாபாரி, ''பதினைந்து கிலோ தருகிறேன்'' என்றார்.

அவன் ஜவுளிக்கடைக்கு போனான்.

''வேண்டுமானால் ஐநூறு ரூபாய்க்கு துணி எடுத்துக் கொள்,'' என்றார்கள்.

அடுத்து, நகைக்கடை ஒன்றில் நுழைந்து விலை கேட்டான்.


''ஆகா! இப்படி ஒருவைரக்கல்லை பார்த்ததே இல்லையே! ஐந்து லட்சம் தருகிறோம்,'' என்றனர்.

அவரவர் பார்வையில், வைரக்கல்லின் மதிப்பு உயர்ந்து கொண்டே போகிறது. இப்படித்தான் மனிதனும், இறைவனைப் பார்க்கிறான்.

ஒருவன், கடவுளிடம் எனக்கு, கார் வாங்கிக் கொடு, அப்படி செய்தால்...அடுத்த வாரம் 1001 உண்டியலில் போடுகிறேன்'' என்று அவரை 1001 ரூபாய்க்கு விலை பேசுகிறான்.

இன்னொருவன்,''ஏதோ பரவாயில்லை! பத்து கோரிக்கையை இந்த மாசம் வச்சிட்டு வந்தா, ஒன்றையாவது நிறைவேற்றி வைக்கிறார். இந்தக் கடவுள் தேவலே! சரி...சரி... கும்பாபிஷேகத்துக்கு 10001 ரூபா நன்கொடை தர்றேன்''என்கிறான்.

எந்தவித எதிர்பார்ப்புமில்லாமல், ''அப்பனே! பிறவிக்கணக்கை சீக்கிரம் தீர்த்து வை. என்னையே தருகிறேன்,''என்று உயர்தர பக்தி செலுத்துகிறான்'' .எல்லாரையும் பார்த்து சிரித்துக் கொண்டு,''அவன்' ஏதுமறியாதவன் போல், உலகப் பந்தை சுழற்றிக் கொண்டிருக்கிறான்.




இரண்டு உருக்களுக்குமிடையே 5 வேறுபாடுகள் காணப்படுகின்றன. கண்டுபிடியுங்கள்.

## பழமொழிகள்

01. கண்ணிற் பட்டால் கரிக்குமா, புருவத்திற் பட்டால் கரிக்குமா?
02. கண்ணிற் புண் வந்தால் கண்ணாடி பார்த்தல் ஆகாது.
03. கதிரவன் சிலரை காயேன் என்குமோ?
04. கப்பல் ஏறிப் பட்ட கடன் கொட்டை நூற்றா விடியும்.
05. கப்பற்காரன் பெண்டாட்டி தொப்பைக்காரி, கப்பல் உடைந்தால் பிச்சைக்காரி.
06. கப்பற்காரன் வாழ்வு காற்று அடித்தால் போச்சு.
07. கரணம் தப்பினால் மரணம்.
08. கரிவிற்ற பணம் கறுப்பாய் இருக்குமா?
09. கருமத்தை முடிக்கிறவன் கட்டத்தைப் பாரான்.
10. கரும்பு கசக்கிறது வாய்க் குற்றம்.

## சிந்தனைக்கு....

- ★ தேவையில்லாமல் செலவு செய்யும் பணக்காரன் வருங்காலப் பிச்சைக்காரன் - சவுராஷ்டிர பழமொழி
- ★ எந்த சிபாரிசு கடிதத்தையும் விட நன்னடத்தை, பணிவு, அன்பு தான் ஒருவருக்கு சிறந்த பரிந்துரை - அரிஸ்டாட்டில்.
- ★ பணத்தின் மதிப்பை ஒருவன் கடன் கேட்கும்போதுதான் உணர்கிறான் - பிராங்கிளின்
- ★ செல்வம் சேர்ப்பது வாழ்க்கையின் லட்சியமல்ல, அது வாழ்க்கைக்கு ஒரு சிறு கருவி மட்டும்தான் - பீச்சர்
- ★ அறிவாளிக்கு பகைவர் இல்லை, அகங்காரனுக்கு நண்பர் இல்லை - சாணக்கிய நீதி



இலக்கங்களை இணைத்து மறைந்திருக்கும் உருவத்தைக் கண்டறிக



## சிறுவர் சுடர்

### மெதுவாகச் சிரியுங்கள்



ஆசிரியை:
மூணு சுழி ''ண'' போடறதுக்கு, அஞ்சு சுழி போட்டிருக்கியே, ஏன்?
மாணவி:
தமிழ் வளரட்டுமேன்னுதான் மிஸ்....!




ரவி:
கிளினிக்கை இராத்திரி மூடும்போது அந்த டாக்டர் தேசியகீதம் பாடுறாரே, ஏன்?
ராஜா:
அவர் நாட்டு வைத்தியராம்!



டாக்டர்:
இரண்டு வாரத்துக்கு 30 மாத்திரை கொடுத்திருக்கிறேன் தினமும் காலை ஒரு மாத்திரை இரவு ஒரு மாத்திரை எடுக்கணும்.
நோயாளி:
எடுத்த மாத்திரையை எங்க வைக்கணும் டாக்டர்...?



ஒருவர்:
கணக்கப்பிள்ளை தன் பெயரை மாத்திக்கிட்டார்...
மற்றவர்: எப்படி?
ஒருவர்: கல்குலேட்டர் பிள்ளை என்று..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# திசைமாறும் படகுகள்

அ.மரியமலர்கின்



அன்று மாலை மீனா அலுவலகம் முடிந்ததும் அவசர அவசரமாக வீட்டிற்கு வந்தாள். ஏனெனில் அன்று அவளுடைய இரண்டாவது தங்கைக்கு நிச்சயதார்த்தம். வீட்டிலே வேலைகள் ஆரவாரத்துடன் நடந்தன. நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த மீனா வீட்டிலே மூத்தபெண். அவளுக்கு இளையதாக உஷா, கீதா என இரண்டு தங்கைகள். உஷா ஏற்கனவே காதலித்து திருமணம் முடித்துவிட்டாள். கீதாவுக்குத் தான் அன்று நிச்சயதார்த்தம். தந்தை வேலுப்பிள்ளை வீட்டிலேயே சிறிய பலசரக்குக் கடை வைத்திருந்தார். தாய் வீட்டிலிருந்தார்.

மீனா கீதாவை அலங்கரித்துக் கொண்டிருந்தாள். மீனாவின் தந்தையும், தாயும் மாப்பிள்ளை வீட்டுக்காரரை எதிர்பார்த்திருந்தனர். வாசலிலே கார் சத்தம் கேட்டது. மாப்பிள்ளை வீட்டாரை மீனாவும் கீதாவும் யன்னல் வழியாக பார்த்தனர். தாய் கீதாவை வரும்படி கூற மீனா கீதாவை தனது சித்தியுடன் அனுப்பி வைத்தாள். கீதாவை அனுப்பிவிட்டு மீனா பக்கத்திலே இருந்த கதிரையிலே அமர்ந்தாள். மனதிலே நீர் குமிழ் போல காணப்பட்டது. அப்படியே தன் கடந்த கால வாழ்வை மீட்டுப் பார்த்தாள்.

"மீனா இங்கே நில்லுங்கள். ஒரு நிமிடம் நான் சொல்வதைக் கேளுங்கள்" என்று யாரோ குரல் எழுப்புவதைப் பார்த்து மீனா ஆச்சரியத்துடன் திரும்பினாள். அங்கே அவளுடைய அலுவலகத்துக்கு பக்கத்திலே இருக்கும் வீட்டுக்காரப் பையன் நின்றுகொண்டிருந்தான். அவனை அவள் பல தடவை கண்டிருக்கின்றாள். "என்னுடைய பெயர் கிஷான். எனக்கு எதையும் மறைக்கத் தெரியாது. உடனே சொல்லிவிடுவேன். நான் உங்களை விரும்புகின்றேன்."

ஒரு நிமிடம் அதிர்ந்து போன மீனா "என்ன சொல்லுறீங்கள்" என்றாள். அவன், "உங்களுக்கு சம்மதம் என்றால் நாளைக்கும் இங்கே வருவேன். உங்கள் முடிவைச் சொல்ல வேண்டும்" என்றான்.

மீனா எதுவுமே பேசாது அலுவலகத்தை நோக்கி நடந்தாள். அலுவலகத்திலே மீனாவால் வேலையை ஒழுங்காக செய்ய முடியாமல் பதற்றத்துடன் இருந்தாள். அலுவலகத்தில் வேலை முடிந்ததும் வீட்டுக்கு வந்த மீனா எதுவுமே உண்ணாது அப்படியே உறங்கி விட்டாள். அடுத்தநாள் மீனா அலுவலகத்துக்குப் போனாள் கிஷான் அந்த இடத்திலேயே நின்றான். மீனாவிடம் "என்ன சம்மதமா" என்றான். மீனா எதுவுமே கூறாது பெண்களுக்குரிய நாணத்துடன் சின்னதாக சிரிப்பை உதிர்ந்து விட்டு மௌனமாகச் சென்றாள். இவ்வாறாக இருவரும் காதலிக்கத் தொடங்கினர். கிஷானுக்கு ஒரு தங்கையும் இரண்டு சகோதரர்களும் இருந்தனர். இரு வீட்டாருக்கும் தெரியாமலே இருவருடைய காதலும் வளர்ந்தது.

அன்று புதன்கிழமை மீனாவின் பிறந்தநாள். மீனா கிஷானுக்கு பிடித்த நீல கலரில் சுடிதார் அணிந்து கொண்டு அலுவலகத்துக்குச் சென்றாள். அவளுடைய அழகிற்கு அந்த நீல சுடிதார் இன்னும் மெருகூட்டியது. அலுவலகம் முடிந்ததும் மீனா நேராக தான் வழமையாக கிஷானை சந்திக்கும் பூங்காவிற்கு வந்தாள். மீனாவைக் கண்ட கிஷான் கிண்டலாக "யாரது நடிகை மீனாவா இந்த ஆட்டோக்கிராப்பில் கையெழுத்துப் போடுங்கள்" என்றான். மீனா வெட்கத்துடன் போங்க என்றாள். "பிறந்தநாள் வாழ்த்து மீனா" என்றான். "மீனா உன்னுடைய பிறந்தநாள் பரிசாக நான் உனக்கு ஒரு பெரிய பரிசு தரப்போகின்றேன்" என கிஷான் கூறினான். மீனா "அப்படி என்ன பெரிய பரிசு" எனக் கேட்டாள். "நான் வெளிநாட்டிற்குப் போகப் போகிறேன்" என்றான். உடனே, சந்தோஷத்தில் தவழ்ந்த மீனாவின் முகம் தேய்பிறையைப் போல மாறியது. "என்ன சொல்லுகிறீங்கள்?" "நான் வெளிநாட்டிற்கு போய் உன்னையே கூப்பிடுகிறேன். நீ கவலைப்படாதே" என்றான். மீனா அவனிடம் "வெளிநாடு போக வேண்டாம்" என்றாள். மீனா திரும்பவும் "என்னை கல்யாணம் செய்துவிட்டுப் போங்கள்" என்றாள். "ஏன் மீனா சந்தேகமா" என்றான்.

கிஷான் மேல் இருந்த நம்பிக்கையால் மீனா சரி எனக் கூறினாள். கிஷான் வெளிநாடு சென்றான். ஒரு வருடம் வரை கிஷான் மீனாவுடன் ரெலிபோன் மூலம் தொடர்பில் இருந்தான். திடீரென ஒரு கிழமையாக கிஷான் மீனாவுடன் தொடர்புகொள்ளவில்லை. இல்லாவிட்டால் ஒரு நாளைக்கு ஒருக்காவேனும் தொலைபேசி எடுப்பான். மீனா ரெலிபோன் எடுத்தாலும் தொடர்பு துண்டிக்கப்பட்டது. அன்று வழமை போல் மீனா அலுவலகத்திற்குச் சென்றாள்.

அங்கே கிஷானுடைய வீட்டு வாசலுக்கு வெளியே இரண்டு கார்கள் நின்றன. உள்ளே பலபேர் நின்றனர். மீனா மனதுக்குள்ளேயே கிஷானின் தங்கைக்கு ஏதாவது விசேஷமோ என எண்ணியவாறு அங்கு நின்ற ஒரு உறவுக்காரரிடம் விசாரித்தாள். "இந்த வீட்டுப் பையனுக்கு இன்று நிச்சயதார்த்தம்" என்றார் அந்த உறவுக்காரர். மீனாவிற்கோ தலை சுற்றுவது போலிருந்தது. அப்படியே வீட்டிற்குத் திரும்பி வந்தாள். இரவு பூராகவும் மீனாவிற்கு நித்திரை வரவில்லை. கிஷான் இப்படிச் செய்து விட்டானே என எண்ணி அழுதுகொண்டே இருந்தாள். திடீரென அவளுடைய ரெலிபோன் கிணுகிணுத்தது. மீனா வேண்டாவெறுப்பாக ரெலிபோனைக் கையில் எடுத்தாள். அது கிஷானுடைய நம்பர். உடனே அவள் "ஹலோ" என்றாள். எதிர்முனையில் இருந்த கிஷான் "மீனா என்னை மன்னித்துவிடு. அம்மா என்மேல் வைத்த நம்பிக்கையால் என்னைக் கேட்காமல் பெண் பார்த்து பேசி முடித்து விட்டார்கள். என்னால் எதுவுமே செய்ய முடியவில்லை" என்றான். கிஷானின் வார்த்தையைக் கேட்ட மீனா எதுவுமே பேசாது அமைதியானாள். ரெலிபோன் கையால் நழுவி விழுந்தது.

திடீரென முதுகில் யாரோ தட்டுவதைப் பார்த்து திரும்பினாள். எதிரே கீதா நின்றாள். கீதா மீனாவிடம் "என்ன அக்கா ஒரு மாதிரி இருக்கிறாய்" என்றாள். உடனே மீனா "அது ஒன்றுமில்லை கீதா. அது சரி மாப்பிள்ளை எப்படி? உனக்குப் பிடித்ததா?" எனக் கேட்டாள். கீதா வெட்கத்துடன் தலையைக் குனிந்தாள். நாட்கள் நகர்ந்தன. கீதாவின் திருமணமும் நல்லபடியாக நிறைவேறியது. அன்று திங்கட்கிழமை. மீனாவின் தாய் மீனாவிடம் ஒரு போட்டோவைக் காட்டி "இந்தப் பையன் பெயர் ரவி. உன்னைக் கலியாணம் செய்ய ஆசைப்படுகின்றான். உனக்கு சம்மதம் என்றால் பேசி முடித்து விடலாம்" என்றாள். மீனாவும் எத்தனை நாள்கள் தான் தனித்து இருக்க முடியும். மீனாவும் அதற்குச் சம்மதித்தாள்.

அன்று மீனாவிற்குத் திருமணம். அத்திருமணத்திற்கு பல உறவுகளும் வந்திருந்தனர். கிஷானும் மாப்பிள்ளை சார்பாக தன் மனைவி பிள்ளையுடன் வந்திருந்தான். மீனா கிஷானைக் கண்டதும் ஒரு கணம் அவளுடைய இதயம் துடிக்க மறந்தது. கிஷானும் மீனாவைக் கண்டதும் திகைத்து விட்டான். ஏனெனில் இருவரும் அச்சந்திப்பை எதிர்பார்க்கவில்லை. எதையும் அறியாத ரவி மீனாவிடம் "இவன் பெயர் கிஷான். நான் முன்பு வேலை செய்த இடத்தில் இருவரும் சேர்ந்து வேலை பார்த்தனாங்கள்." என்று கூறி அறிமுகம் செய்து வைத்தான். கிஷானும் ஒன்றும் தெரியாதவன் போல வாழ்த்துக் கூறிவிட்டு அவ்விடத்தை விட்டு அகன்றான். அன்று மீனாவிற்கு என்றுமே இல்லா ஒரு வித அமைதி மனதில் படர்வதை உணர்ந்தாள். ஏனெனில், அவள் தன் கடந்தகால வாழ்வைப் பற்றி கிஷானின் பெயரைக் கூறாது ரவியிடம் எல்லா உண்மைகளையுமே சொல்லிவிட்டாள்.

---

சிவாவுக்குள் பிசாசு மனம் கூச்சலிட்டது. ஏமாந்தியா, முட்டாளே. வையுகோர்ட்டே சொல்லியும் உன் சித்தப்பா கேட்கவில்லை. அப்பீல் செய்திருக்கிறார், பார். நான் சொல்லுறதைக் கேள். ஒரே வாரத்தில் சித்தப்பா உன் காலடியில் வீட்டுத் தறுபவை மரியாதையோடு வைப்பார்.

# தெய்வம் தந்த வீடு



கொஞ்சம் நின்று யோசித்தான். சித்தப்பாவாயிற்றே என்று இரக்கப் பட்டால் ஏதாவது சாக்கு போக்குச் சொல்லி என் வீட்டை தான் சொந்தமாக்கிக் கொள்ள நினைப்பது எந்த விதத்தில் நியாயம்?

ஆனால் அடுத்த நொடியே அப்பா சொன்னது ஞாபகம் வந்தது. சிவா, அவனுக்கு இன்னும் ஆறே மாதம் டைம் கொடுடா. உன் சித்தியின் கான்சர் ரீட்மெண்ற்றுக்காக அலைஞ்சு கொண்டிருக்கிறார்.

அப்பா பேச்சை கேட்கப் போறியா? போச்சு. நாலு வருசமாக பெண் கல்யாணக் கடன்களைச் சொல்லி ஏமாத்திட்டார். இப்போ கான்சர். அதற்கு பிறகு ஏதாவது இல்லாமலா போய்விடும்?

மனப்பிசாசு சொல்வதுதான் சரி. மன்னிக்கவும் அப்பா.

தனக்குள் பேசிக் கொண்டே வந்த சிவா ரோட்டில் கிடந்த அமாவாசைப் பூசணிக்காயை கவனிக்கவில்லை. தொம்மென்று வழுக்கி விழுந்தான். பின் மண்டையிலும் இடுப்புப் பகுதியிலும் சரியான அடி. பின்புறம் அவலமாய் தகித்தது. எழ முயல்கிறான். முடியவில்லை. மணிக்கட்டு பகுதியில் ஆயிரம் ஊசிகளை சொருகிவிட்ட மாதிரி வலித்தது.

ஆள் நடமாட்டம் அதிகம் இல்லாத வீதி. ஆட்டோக்களும் மோட்டார்சைக்கிள்களும் விர்விர்ரென்று போய் கொண்டிருந்தாலும் உதவிட யாருமில்லை.

வேகமாக போய் கொண்டிருந்த ஒரு ஆட்டோ திடீரென ஓரம் கட்டி நின்றது. அதிலிருந்து குதித்து இறங்கினான் ஒரு இளைஞன். மகேஷ்! சித்தப்பாவின் இரண்டாவது மகன்.

முதுகுப் பக்கம் அவன் பிடிக்க, அவன் நண்பன் கால் பக்கம் பிடிக்க சிவா ஆட்டோவில் திணிக்கப்பட்டான்.

உடனே பிசாசு உரக்க கத்தியது. சிவா மறுபடியும் ஏமாறாதே. உதவி செய்யுற மாதிரி செஞ்சுட்டு வீட்டை பறிப்பார்கள் ஜாக்கிரதை.

"ரொம்ப நன்றி மகேஷ். நீ மட்டும் இல்லாவிட்டால் நான் ரோட்டிலேயே அனாதையாக செத்துப் போயிருப்பேன். உங்களுடைய குடும்பத்துக்கு பொறுக்கமுடியாத தொல்லைகள் எவ்வளவோ கொடுத்திருக்கிறேன். இருந்தாலும், எனக்கு உதவியிருக்கிறாய், உண்மையில் நீ சிறந்தவன்!"

"அண்ணா, உங்களுக்கும் அப்பாவுக்கும் இருக்கும் சண்டையில் எனக்கு என்னண்ணா சம்பந்தம்?"

அந்த பதிலில் சிவா கூனிக் குறுகிப் போனான். "அது சரி, வேற வீட்டுக்கு என்ன செய்யப் போகிறீங்க?"

"கஷ்டம்தான் அண்ணா. இவ்வளவு காலம் படியளந்த கடவுள் இதுக்கும் வழி காட்டாமலா போவார்?"

கொஞ்சம் அவஸ்தையான யோசனைகளுக்குப் பிறகு, வேண்டாம், மகேஷ். அப்பாவிடம் சொல்லிடு. நீங்கள் அங்கேயே இருங்கோ..

வீடு, வீடு என்று பேராசையில் அலைந்து, கடைசியில் தூக்க ஆளில்லாமல் வீதியில் சாக கிடந்தேனே! என்ன முட்டாள் நான்?

மறுபடியும் பிசாசு குரல் எழுப்ப எத்தனிக்க, ஓடிப்போ பிசாசே. உள்ளத்தினுள் அகல் விளக்கை இப்போதுதான் ஏற்றி வைத்திருக்கிறேன்.

"என்ன அண்ணா?"

"ஒன்றுமில்லை" தம்பியை அணைத்த கைகள் வலித்தன. ஆனால் மனசில் வலி இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதைப்புனல்

## கலாசார பிறழ்வு



சுடிதார்
தாவணி என்று
வலம்வந்த வீட்டுப் பெண்கள்
ஜீன்சும் ரீசேட்டுடனும்
சாலையோரம்
பவனிவந்திடி போகின்றனர்.
மானங்கொண்ட
தமிழன் பூமியில்
நிர்வாண அசிங்கங்கள்
நிரம்பிப்போகின்றன.
பண்பாடுகளில்
வெளிநாட்டு மோகமும்
உள்நாட்டு இலக்கணமும்
கலப்படமாக்கிக் கொள்ள
மூத்தோர் வாக்கும்
முதுமையாகிறது.
கற்பழிப்பும்
கருச்சிதைவும்
அரங்கேறிக் கொள்ளவும்
இளைய விபச்சாரமும்
புதிதாய் பரவிக்கொள்கிறது.
தொலைபேசிக் காதலும்
முகம் தெரியா மோகமும் கொண்டு
வளரும் சந்ததி
மாண்டு போக... இன்னொரு
இனம் சிரித்து மகிழ்கிறது...

ஜே.எம்.ராஜ்
யாழ்.பல்கலைக்கழகம்.

## முதற்சம்பளம்

என் காதலியின்
முதலிரவிற்கு
காலம் இருந்ததற்காக
[illegible]
விருந்து கொடுத்ததற்காக
[illegible] என்
கவிதைகளை
[illegible]
உலகின் சில [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
முகம் [illegible]
கொடுத்ததற்காக
சில சந்தர்ப்பங்களை

பொழுதும்
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

க.யோகேஸ்வரன்
நெடுந்தீவு.


## மழையடித்தும் வியர்க்கின்றேன்.



மழையடித்த
நாளிலும்
நான்
வியர்க்கின்றேன்
என்னைத்தேடி
அவன்
இல்லையென
நினைக்கும்
போது.

ஏ.ஆர்.நவராஸ்
கிண்ணியா.

## தாய் மண்ணை நேசி



காதலை சுவாசிக்க
தெரிந்த மனிதா உனக்கு
தாய் மண்ணை நேசிக்கத்
தெரியவில்லையா?.
மண்ணின் மானம் காக்காத
நீ இன்று நவநாகரீகம்
போற்றுகிறாய்.
தாய் மண்ணை மறந்த
உனக்கு ஆடைகள் எதற்கு.
நிர்வாணமே போதும்
ஆடைகளை உதறிவிட்டு
மிருகங்களோடு உறவாடு.
மறத்தமிழர் தேசத்தில் மானம்
இழந்து மனச்சாட்சியை
கொன்று வாழ்வதை விட
மரணத்தின் கையில்
மடிந்து போ...
தாய் மண்ணை நேசிக்கும்
உண்மை தமிழர் மட்டும்
உரிமைக்காய் குரல் கொடுங்கள்.
தொலை தேசக் குயில் ஒன்று
பாடிச் சொல்கிறது எமக்கும்
வசந்தம் வருமென்று.
புலரும் பொழுதுகள் எமக்காய்
விடியட்டும்......

பிரியா
சொக்குவில் மேற்கு.

## அதிகாலை



அதிகாலைப் பொழுதில்
கண் விழிக்கையில்
என்னறைக்கு வெளியே தெரியும்
பனித்துளியால்
நனைந்த ரோஜாக்கள் - கண்டு
மனமகிழ்ந்தேன்.
நானும் ஒரு ரோஜாவாய்
இருக்கக் கூடாதா...?

வி.விதுஷா
திருநகர்.

## சகோதரங்களே!

தொப்புள் கொடி உறவுகளே!
தொடரும் எம் பாசங்கள்
தொடர் கதையாக இருக்கட்டும்...
பிரிந்து வாழ்வும் சோதரர்களே!
பின்னே திரும்பிப் பாருங்கள்
பாசத்தின் வலி புரியும்...
பல் இனிய உடன் பிறப்புக்களே!
எளிதில் பிரிக்க முடியாது சொந்தங்களே...
கூடிக்குலாவியிருந்த காட்சிகளை
மீட்டிப்பாருங்கள்
என்றும் சகோதர பாசம் வெல்லோங்க...



கலைச்செல்வன்
கல்வெட்டித்திடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன மனவெளிகள்

28

நா.யோகேந்திரநாதன்

ஏனைய மாணவிகளுடன் பழகுவதை விடச் சொர்ணத்துடன் கதைப்பதில் தங்கவேலுக்கு ஒரு பிரத்தியேக ஆர்வம் இருந்ததை அவன் அடிக்கடி உணர்ந்ததுண்டு. ஆனால் அவன் அந்த ஆர்வத்தைக் காதல் என்றோ, கலியாண நோக்கம் கொண்டது என்றோ கருதியது கிடையாது. ஆனால் அவளுக்குத்தான் அவள் எனப் பெரியவர்கள் மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு விட்டதை அறிந்த போது உள்ளூர அவனுள் ஒரு மகிழ்ச்சி இழையோடிய போதும், ஒரு நம்பிக்கையீனம் தோன்றி அதை ஈடாட வைக்கத் தவறவில்லை.

சுந்தரமூர்த்தியும் தங்கவேலுவும் நண்பர்கள் மாதிரியே பழகிவருவதுண்டு. அவன் எதையுமே அவரிடம் மறைத்ததில்லை.

அவன் தகப்பனின் முகத்தைப் பார்த்து விட்டு சொன்னான் "அது சாத்தியமில்லையப்பா?"

அவர் ஆச்சரியத்துடன் "ஏன் உனக்கு விருப்பமில்லையோ? நல்ல வடிவான பிள்ளை... படிப்பிலையும் கெட்டிக்காரி" எனக் கேட்டார்.

"பிரச்சினை என்னிலையில்லை. அவளுக்குத்தான் விருப்பமில்லை" என்றான் அவன்.

"உனக்கென்னண்டு தெரியும்?"

"அப்பா அவள் ஒரு கொள்கை வைத்திருக்கிறாள். தான் ஒரு குறைஞ்ச சாதிக் காரனைத் தான் கலியாணம் கட்டுறதாம்?"

சுந்தரமூர்த்தி அதைக் கேட்டு விட்டு மீண்டும் பெரிதாகச் சிரித்தார்.

"தம்பி! ஒரு வயதிலை நாலு புத்தகங்களை வாசிச்சுப் போட்டு சாதியில்லை, கடவுளில்லை, ஏழை பணக்காரர் வித்தியாசம் பாக்கிறேல்லை என்டு கற்பனை பண்ணுறது தான், பிறகு கொஞ்ச நாளையிலை சமூகத்தைப் புரிஞ்சு கொள்ளுற வயது வரேக்கை எல்லாக் கொள்கையளும் மறந்து போடும்"

அவன் வியப்புடன் அவரைப் பார்த்தான். அதை ஏற்பதா விடுவதா என முடிவு செய்ய முடியவில்லை.

அவர் தொடர்ந்தார். "நான் அனுராதபுரத்திலை வேலை செய்யேக்கை ஒரு சிங்களப் பெட்டையைத்தான் விரும்பினனான். பிறகு கிளிநொச்சி இடமாற்றமும், கொம்மாவின்ரை வடிவும் சீதனமும் அவளை மறந்து போக வைச்சிட்டுது"

தங்கவேல் அவரைக் கேட்டான் "அது சரியெண்டு நினைக்கிறீங்களோ?"

"சரி... பிழை வேறை விசயம்... எங்கடை குடும்ப சமூகச் சூழலிலை என்னாலை அப்பிடித்தான் செய்ய முடிஞ்சுது. ஒரு சிலர் கொள்கைகளுக்காக வாழுறது உண்மை தான். ஆனால் எல்லாராலையும் அது முடியாது?"

அவன் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை. ஆனால் தகப்பன் கூறியவற்றை அவனால் முழுமையாக ஏற்க முடியவில்லை. ஏனெனில் இதுவரை அவன் படித்த இலக்கியங்களிலெல்லாம் காதல் பற்றி உன்னதமான எண்ணங்களையே அவனுள் ஏற்படுத்தியிருந்தன. அதன் காரணமாகவே தனக்கும் சொர்ணத்தின் மேல் தோன்றக் கூடிய சபலத்தைத் தவிர்க்க வேண்டும் என முடிவு செய்தான். ஆனால் அது அவ்வளவு இலகுவானதாகவும் தோன்றவில்லை.

சீதேவிக் கிழவியும் சுந்தரமூர்த்தியும் எதிர்பாராத வகையில் சொர்ணத்திற்கும் தங்கவேலுக்கும் திருமணம் செய்வது பற்றி எடுத்த முடிவை விதானையாரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. கனகாம்பிகையின் தமையன் சதாசிவம் மலேசியாவில் தேயிலைத் தோட்டங்கள், கடைகள் எனப் பெரும் செல்வந்தனாக வாழ்ந்து வந்தார். அவரின் மகன் இங்கிலாந்தில் வைத்தியப் படிப்பு முடித்து விட்டு சில மாதங்கள் முன்பு தான் மலேசியா திரும்பியிருந்தான். சதாசிவம் எழுதும் ஒவ்வொரு கடிதத்திலும் சொர்ணத்தைப் பற்றி விசாரிக்கத் தவறுவதில்லை. விதானையாரும் கனகாம்பிகையும் சொர்ணத்தை சதாசிவத்தின் மகனுக்கு திருமணம் செய்வது என முன்பே தங்களுக்குள் முடிவு செய்து விட்டனர். கிழவி இப்படியான ஒரு முடிவை எடுத்தது அதிர்ச்சியளித்தாலும் கூட விதானையார் எதுவும் பேசவில்லை. ஏனெனில் எப்படியும் சொர்ணத்தின் படிப்பு முடிய ஆறேழு வருடங்கள் செல்லும் என்பதால் அதற்குள் நிலைமைகள் மாறும் எனவே அவர் திடமாக நம்பினார்.

ஆனால் கனகாம்பிகையால் மனம் பொறுக்க முடியவில்லை. சொர்ணம் கிணற்றடியில் நின்ற போது அங்கு சென்ற கனகாம்பிகை "என்ன பிள்ளை வந்தவை ஏதோ கலியாணம், கிலியாணம் என்டு பெத்தாச்சியோடை கதைச்சினம்" எனக் கேட்டாள்.

சொர்ணம் ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்து விட்டு, "கலியாணமோ? ஆருக்காம்.. அவை என்ரை படிப்பைப் பற்றிக் கதைக்கவல்லோ வந்தவை?" என்றாள்.

"இல்லை பிள்ளை பெத்தாச்சியும் வந்தவரும் உனக்கும் அந்தப் பொடியனுக்கும் கலியாணம் கட்டி வைக்கிறதைப் பற்றி ஏதோ கதைச்சவை"

சொர்ணத்திற்குக் கோபம் வந்து விட்டது.

"என்னம்மா நீங்கள்... படிக்கிற வயதிலை உதுகளைப் பற்றி கதைக்கிறியள். அவை கதைக்கிறதெண்டால் தங்கடை பாட்டிலை கதைச்சுப் போட்டுப் போகட்டும். நான் இன்னும் எட்டுப்பத்து வரியத்திற்குப் படிக்க வேணும்"

கனகாம்பிகைக்கு அவளின் வார்த்தைகள் ஒரு



வித நிம்மதியைக் கொடுத்தன. அவள் "ஓமோம்... கிழவியின்ரை கதையை விட்டுட்டு நீ கவனமாப் படிச்சு டாக்குத்தராய் வா" என்றாள்.

தனது குடும்பத்திலிருந்து முதல் முதலாக "நீ படிச்சு டாக்குத்தராய் வா?" என்ற வார்த்தைகளைக் கேட்ட போது சொர்ணம் எல்லையற்ற சந்தோஷத்தில் மிதக்கத் தொடங்கினாள்.

"எனக்கு படிப்பை விட வேறை எந்தச் சிந்தனையும் வராது" என்றாள் சொர்ணம் மிகவும் உறுதியாக.

அன்று பாடசாலை ஆரம்பமாகி முதலாவது பாடம் நடந்து கொண்டிருந்த போது பியோன் வந்து ஒவ்வொரு வகுப்பாக எல்லோரையும் அசெம்பிளிக்கு வரும்படி கூறிச் சென்ற போது எல்லோருமே ஆச்சரியப்பட்டு விட்டனர். பாடத்தை இடை நிறுத்தி அசெம்பிளி வைக்கும் பழக்கம் முன்பு எப்போதுமே இருந்ததில்லை.

எல்லா மாணவர்களும் அசெம்பிளியில் கூடி ஒரு சில நிமிடங்களில் அதிபர் வந்தார். அவரின் முகத்தில் ஏதோ ஒரு சோர்வு படர்ந்திருப்பதாகவே தோன்றியது.

அவர் அப்பாடசாலையுடன் தொடர்புடைய ஜெபாலயத்தின் பிரதம போதகர் காலமான செய்தியைச் சொல்லி விட்டு இரங்கலுரையை நிகழ்த்தினார். அடுத்து ஒரு கிறிஸ்தவ மாணவி வந்து போதகரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தனை செய்தார். பின்பு அதிபர் போதகரிற்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாக பாடசாலை அன்று விடுமுறை எனவும் எல்லோரையும் வீடுகளுக்குப் போகும்படியும் கேட்டுக் கொண்டார்.

அசெம்பிளி கலைந்த போது சொர்ணம் தனக்கு ஏற்பட்ட சிக்கலைப் புரிந்து கொண்டாள். அவளை ஏற்ற மணியத்தின் கார் நான்கு மணிக்குத் தான் வரும். அப்போதே நேரம் பத்து மணி. மாலை வரை எந்த வேலையுமின்றிக் காத்து நிற்க அவளுக்குப் பிரச்சினையில்லை. முத்துலட்சுமியுடன் சேர்ந்து நடந்தே போய் விடுவது எனத் தீர்மானித்துக் கொண்டாள்.

முத்துலட்சுமியிடம் அவள் அதைச் சொன்ன போது "நீங்கள் இவ்வளவு தூரம் நடப்பியளே?" எனக் கேட்டாள்.

"நீ ஒவ்வொரு நாளும் நடக்கிறனி தானே, உன்னை விட நான் சக்கட்டையே?" எனக் கேட்டாள் சொர்ணம் ஒரு மெல்லிய புன்னகையுடன். இருவரும் புத்தகப் பைகளைத் தோளில் கொழுவியவாறு புறப்பட்டனர்.

சொர்ணத்தைப் பொறுத்த வரையில் நடந்து போவது ஒரு புதிய அனுபவமாயிருந்தது. அதிலும் முத்துலட்சுமியுடன் நடந்து போவதில் ஒரு சந்தோஷம் இருப்பதாகவே அவளுக்குத் தோன்றியது.

வளைந்து வளைந்து சென்ற ஒழுங்கைகளால் நடந்து துவாளி பிள்ளையார் கோவிலடிக்கு வந்த போது பரந்த வயல் வெளியும், அதன் நடுவில் வீற்றிருந்த துவாளி அம்மன் கோவிலும் அதன் பின்னணியில் தெரிந்த வல்லை வெளியும் சொர்ணத்திற்கு ஒரு புதிய உலகத்தை அறிமுகப்படுத்தின.

சொர்ணம் மெல்ல முத்துலட்சுமியைப் பார்த்து "உண்மையிலை நீங்கள் அதிஷ்டக் காரியள் தான்" என்றாள்.

முத்துலட்சுமி "ஏன்?" எனக் கேட்பது போல் விழிகளை அகலத்திறந்து சொர்ணத்தைப் பார்த்த போது அவள் "நீங்கள் இவ்வளவு வடிவான இடங்களை ஒவ்வொரு நாளும் காலையையும் பின்னேரமும் பார்த்து அனுபவிச்சுக் கொண்டு வருவியள்" என்றாள்.

முத்து ஒரு பெருமூச்சுடன் சொன்னாள் "என்னக்கா வடிவு. ஒவ்வொரு நாளும் மூச்சுவேண்ட ஓட்டமும் நடையுமாய் மூண்டு கட்டை வந்து போறதிலை போதுமெண்டு போய்விடும். நீங்கள் ஒரு பிரச்சினையும் இல்லாமல் காரிலை போவியள்"

"ஏதோ, காரிலை போறது பெரிய சொகுசு என்டு நீ நினைக்கிறாய். எனக்கு அதுவும் ஒரு மறியல் தான். இப்படி காத்துப்பட நடக்கிறது எவ்வளவு சந்தோஷம்.

"இக்கரைக்கு அக்கரைப் பச்சை தான்" என்று விட்டு வயலில் இறங்கி வரம்பில நடக்கத் தொடங்கினாள் முத்து. ஒரு அடி அகல வரம்பில் எதிர்காற்றில் நடப்பது சொர்ணத்துக்கு சற்று சிரமமாக இருக்கிற போதிலும் அதில் ஒரு சுகம் இருப்பதாக அவள் உணர்ந்தாள்.

சொர்ணம் மேற்குப்பக்கமாய் பார்த்து விட்டு "அதென்ன அம்மன் கோயிலுக்கு நேரை தூரத்திலை ஒரு கூடலாய்த் தெரியுது?" எனக் கேட்டாள்.

"அது கல்லுவத்திலையிருந்து வார ரோட்டு யாழ்ப்பாணம் ரோட்டிலை ஏறுற சந்தியிலை இருக்கிற தென்னந்தோப்பு. சைக்கிளிலை இல்லாட்டில் கால் நடையாய் வாறவை அதிலை ஆறித்தான் போவினை"

சொர்ணம் "இந்தப் பெரிய வெளியிலை ஆரோ ஒரு புண்ணியவான் தென்னந்தோப்பு வைச்சிருக்கிறான்" என்றாள் வியப்புடன்.

"வெய்யிலுக்கு நடையிலை போய் வரேக்கை தான் அந்த நிழலின்ரை அருமை தெரியும்" என்றாள் முத்து.

அவர்கள் நடந்து போனபோது குறுக்கே வந்த பெரிய வாய்க்காலால் இறங்கி ஏறிய போது சுழன்றடித்த சோழகம் சொர்ணத்தின் சட்டையைத் தூக்கப் பார்த்தது. உடனடியாகவே அதை அமுக்திப் பிடித்த சொர்ணம் "சீ என்னடி இந்தக் காத்து" என்றாள்.

முத்து பெரிதாகச் சிரித்தே விட்டாள் "என்ன பிள்ளை காத்தையும் வெளியையும் பற்றிப் பாராட்டினியள். இப்ப சீ என்னுறியள்?"

அவள் பிள்ளை. என்று கூப்பிட்டது சொர்ணத்திற்குக் கோபத்தை மூட்டி விட்டது.

"ஏய் எத்தினை நாள் சொன்னனான் பிள்ளை வேண்டாம் அக்கா எண்டு கூப்பிடெண்டு"

"ஏதோ பழக்கத்திலை. சரியக்கா இனி அக்கா என்டே கூப்பிடுவன்" என்றாள் முத்து.

"எங்கை கூப்பிடு"

ஒரு இனம் புரியாத பாசத்துடன் முத்து "அக்கா என்ரை அக்கா" என்றாள் மென்மையான குரலில். அன்றொருநாள் பாடசாலையில் சொர்ணம் கொடுத்த முத்தம் அவள் நினைவில் வந்து போனது.

சொர்ணத்தின் கண்கள் அவளையறியாமலே கலங்கின.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிராகரித்தல் எனும் கொடுமை

உண்மையில் நிராகரித்தலுக்குச் சமமான வலி வேறெதுவும் கிடையாது. சின்னச் சின்ன விடயங்கள் போலத் தெரிந்தாலும் நிராகரித்தல் என்பது கொடுமைதான்.

என்னுடைய நண்பன் ஒருவனின் மனைவி கல்யாணம் முடித்து ஒன்றரை வருடமாகியும் இங்கு லண்டனுக்கு வரமுடியாமல் மிகவும் சிரமப்படுகின்றார். முதலில் செற்றில்மன்ட் விசா கேட்டார். அதனை றிஜக்ட் பண்ணினார்கள்.

பிறகு இங்கு நீதிமன்றத்தில் அப்பீல் செய்து நீதிவான் சரி என்று விசாவை கொடுக்கச்சொல்லி ஹோம் ஒபிசுக்கு தீர்ப்பு சொல்லியும் ஹோம் ஒபீஸ் விசா கொடுக்காமல் இப்பொழுது ஆறு மாதமாக இழுத்தடிக்கிறது.

என்ன காரணம் என்று ஹோம் ஒபீஸ் சொல்கிறது இல்லை. கொன்சிடர் பண்ணுகின்றோம் கொன்சிடர் பண்ணுகின்றோம் என்று மட்டும் சொல்கிறார்கள். வேறு ஒன்றும் சொல்கிறார்களில்லை.

புதுப் பெண்சாதியான அவளுக்கு இங்கிருந்து விசா விடயங்களையெல்லாம் ஒவ்வொரு நாளும் சொல்லிச் சொல்லியே நண்பர் மாய்ந்து போகிறார். ஆனால் இது அவளுக்கு விளங்க முடியாத பிரச்சினை.

இங்கு லண்டனுக்கு வந்தால் தான் அகதி என்றால் என்ன? அகதிகள் கையெழுத்து போடுவது என்றால் என்ன? அகதி முகாம் எப்படி இருக்கும்?. பீ.ஆர் தருவது என்றால் என்ன என்றெல்லாம் புரியும். இலங்கையில் இருக்கிற ஆட்களுக்கு இது தொடர்பாக விளங்கப்படுத்தி கரை காணமுடியாது.

இங்கு புலம் பெயர் நாடுகளில் வயோதிபர்களை நிராகரிக்கும் ஒரு நிலைமை எங்களுடைய தமிழ் மக்களிடம் இருக்கின்றது. வயோதிபர்கள் என்றால் அவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்ற மனோநிலை அவர்களின் பிள்ளைகளிடம் இருக்கின்றது. இந்த கணனி யுகத்தில் அவர்கள் எதையும் பாவிக்கத் தெரியாதவர்கள் என்று பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் நினைக்கிறார்கள்.

இந்தக் குளிரில் துணையில்லாமல் எங்கும் போகமுடியாமல் எத்தனையோ வயதாகியவர்கள் நொந்து போகின்றார்கள். தாங்கள் பெற்ற பிள்ளைகள் காலத்துக்கு ஈடுகொடுக்கமுடியாமல் முடிக்கொண்டிருப்பதை நேரில் பார்த்து அவர்களுக்கு வெறுத்துப்போகிறது.

என்னுடைய மகனோ, மகளோ அவர்களோடு நேரம் செலவழிக்க முடியாமல் திணறுகிறார்கள். வெளிநாட்டு வாழ்க்கை இப்படி இருக்கின்றது. எனது வீட்டுக்கு முன்வீட்டிலுள்ள புருசனும் பெண்சாதியும் சேர்ந்து பெண்சாதியின் அப்பா அம்மாவை குஜராத்திலிருந்து இங்கே இறக்கிவிட்டிருக்கிறார்கள்.

இங்கு வந்த அவர்களுக்கு என்ன செய்வதென்று தெரியாமல் நாங்களது பேரப்பிள்ளைகளோடுதான் காலத்தைக் கடத்துகின்றார்கள். பேரப்பிள்ளைகளுக்கு குஜராத்தி மொழி தெரியாது. பேரனுக்கும் பேத்திக்கும் ஆங்கிலம் தெரியாது.

லண்டன் என்ற பெரும் சமுத்திரத்தில் மகிழ்வாக இருந்துவிட்டு வருவோம் என்று குஜராத்திலிருந்து வந்தவர்களுக்கு இப்பொழுது இராமர் கோவில் ஒன்றுதான் துணை.

இப்படித்தான் இங்குள்ள பெற்றோரை, வயதாகி விட்டால் வளர்ந்த பிள்ளைகள் நிராகரித்து விடுகின்றார்கள். வளர்ந்த ஆண்பிள்ளைகள் பெண்பிள்ளைகள் வெளியில் போகும் போதும்கூட பெற்றோரிடம் சொல்ல வேண்டும் என்று தோன்றுவதில்லை. ஏன் அவர்களிடம் சொல்லி என்ன பிரயோசனம். அவர்களுக்குத்தான் ஒன்றும் தெரியாதே என்று பிள்ளைகள் நினைக்கின்றார்கள். வெளியில் போய் ஏதாவது பிரச்சினைப்பட்டுவிட்டு வந்தாப்பிறகும் பெற்றோர் கேட்கும் கேள்விக்கு எடுத்தெறிந்து பேசும் பிள்ளைகளை கண்டிருக்கின்றேன்.

இங்கு பிள்ளைகளுக்கு அடிக்க முடியாது என்ற ஒரே காரணத்தை மட்டும் வைத்துக்கொண்டு பெற்றோரை மேய்க்கப் பார்க்கின்ற பிள்ளைகள்



ஏராளம். எனக்கு ஒருவரை தெரியும். அவரின் பிள்ளை இங்கு பரியான குழப்படி. அவனை அடித்து திருத்த முடியாது என்று அவருக்கு மனதில் பெரும் வேதனை. அவன் அவரை தொடர்ந்தும் எரிச்சல் படுத்திக் கொண்டே இருப்பான். ஒருநாள். வா ராசா ஊருக்கு போவோம் என்று இலங்கைக்கு கூட்டிகொண்டு போய் சுன்னாகத்தில் இரண்டுமாதம் வைத்திருந்து அடித்து திருத்தி நல்ல பழக்க வழக்கங்கள் பழக்கி கொண்டு வந்திருக்கின்றார். இப்பொழுது சொன்னது எல்லாம் கேட்கின்றான் பிள்ளை.

உண்மையில் நான் அண்மையில் கேள்விப்பட்ட பெரும் நிராகரிப்பு ஜெனரல் சரத்பொன்சேகா என்னும் 'அரசன்' போன்றவருடையது. அவர் இலங்கையில் பெரும் நிராகரிக்கப்பட்டவராகிறார். தமிழ் மக்கள் இலங்கையில் சும்மா இருந்துவிட்டு போகலாமே தவிர உரிமை அது இது என்று எதுவுமே கேட்கக் கூடாது. என்று பெரும் ஆணவமாகப் பேசிய சரத்பொன்சேகா இப்பொழுது முழுமையாக நிராகரிக்கப்பட்டிருக்கின்றார். அவரை யுத்த காலத்தில் பெரும் அரசனாக காட்டிய அதே அரசகார்களால் இப்பொழுது பட்டயங்கள் எல்லாம் பிடுங்கி எடுக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டிருக்கின்றார்.

ஆனால், அவர் செய்த கொலைகளுக்கான தண்டனை இதுதானா என்றும் அவர் நினைக்கத் தவற மாட்டார். ஆனால் மேர்வின் சில்வா சொல்வது போல சனிதோசம் என்று அவர் நினைப்பாரோ தெரியாது.

இங்கு ஐரோப்பிய நாடுகளில் விமான நிலையங்களில் எப்பொழுதும் ஒவ்வொருவரையும் ஏதோ ஒரு விதத்தில் சந்தேகக் கண்கொண்டே நோக்குகின்றனர். அதிலும் ஒரு முஸ்லீம் பயணம் செய்வது என்பது பெரும் அசௌகரியமான விடயமாகி விட்டது. முஸ்லீம் பெயர்கொண்ட பாஸ்போட்டை வைத்திருப்பது ஏதோ ஒரு உலகத்தில் மிகவும் துரோகமான செயல்போல இமிக்கிரேசன் கவுண்டரில் உள்ள கிறிஸ்தவர்கள் நினைக்கிறார்கள்.

ஐரோப்பிய நாடுகளுக்கு வரும் ஆங்கிலம் தெரியாத மாணவர்கள் உதாரணத்துக்கு இலங்கையிலிருந்து வரும் மாணவர்கள் பெரும் கஸ்டத்தை அனுபவிக்கிறார்கள். குறிப்பாக லண்டனுக்கு வருகிறவர்கள் முதன் முதலாக ஆங்கிலப் பாடசாலைக்கு போகும்போது ஏதோ வேண்டாத பொருளைப் பார்ப்பதுபோல ஆசிரியர்களும் மாணவர்களும் பார்ப்பதாகக் கவலைப்படுகின்றார்கள். அத்தோடு கேலியும் கிண்டலும் செய்யப்படுகின்றார்கள்.

இலங்கையில் படித்துவிட்டு இங்கு வரும்பொழுது, கல்வி, சூழல், பாடசாலை, எல்லாம் வேறு வேறாக இருக்கும் பொழுது அவர்கள் பெரும் அசௌகரியப்பட்டுப் போகின்றார்கள். ஒரு மாணவி குள்ளமாக இருந்த காரணத்திற்காக தனது வகுப்பிலுள்ள மற்ற மாணவர்களால் தான் முழுவதுமாக நிராகரிக்கப்பட்டதாகச் சொல்கிறாள்.

சமூகத்தில் நன்னம்பிக்கை மிக்கவர்களாக வாழ்வதற்கு ஒரு அங்கீகாரம் தேவை. அது எப்பாடும் அடைந்து கொள்ள வேண்டியது. ஆனால் சின்னச் சின்ன நிராகரிப்புக்கூட பெரும் மன உளைச்சலைக் கொண்டு வரும்.

இலங்கையில் இந்தப் பாகுபாட்டை ஒவ்வொரு ஆமி செக்பொயின்ட்டுகளிலும் அனுபவித்திருக்கிறேன். தமிழனாகப் பிறந்து தமிழனாக வாழ்வதே இலங்கையில் இன்னும் பேரவலமாக இருக்கின்றது. தமிழன் என்ற ஒரு காரணத்திற்காக தொடர்ச்சியாக எல்லா நிராகரிப்புகளுக்கும் ஆளாக வேண்டிய அவலம் காணப்படுகின்ற நிலைமை தொடர்கின்றது. இலங்கையில் எப்பொழுது தமிழர்கள் சுய பிரஜைகளாக அங்கீகரிக்கப்படப் போகின்றார்கள்?

முப்பது வருட நிராகரிப்பு யுத்தம். அரசியல் அநாதைகள் என்று தொடர்ச்சியான புறக்கணிப்புக்கு உள்ளான தமிழர்கள் இப் பொழுதும் யாரிடமும் எதுவும் கேட்கமுடியாத சூழ்நிலையில் காடுகளில் கிடக்கிறார்கள். தமிழர்கள்மீது வஞ்சம் தீர்க்கும் படலம் தொடர்கின்றது. புலிகள் இன்னும் இருக்கின்றார்கள் என்று அப்பாவி மக்களைக் தொல்லைப்படுத்தி நிராகரிக்கும் தன்மை தொடர்ந்தும் அரச தரப்பினரிடம் காணப்படுகின்றது.

புலிகளை அழித்துவிட்டோம் என்று ஒருபுறம் பெரிய விழாக்கள் கொண்டாடும் அரசாங்கம் பிறகு எப்படி புலிகள் இன்னும் இருக்கின்றார்கள் என்று சொல்ல முடியும்?

என்.ஜீ.ஓ. க்களை உள்ளே விட்டாலாவது அந்த காட்டில் இருக்கும் மக்களுக்கு ஏதாவது செய்வார்கள். எல்லாவற்றையும் மடியில்போடும் எண்ணம் கொண்ட அரசியல்வாதிகளால் எப்படி மக்களைப்பற்றி சிந்திக்க முடியும். புலிகளின் கட்டுப்பாட்டில் முப்பது வருடங்கள் இருந்து மூளைச் சலவை செய்யப்பட்டிருக்கின்றார்கள். எனவே அவர்களைக் கண்டால் பயமாக இருக்கின்றது என்று அரசாங்கம் சொல்கின்றது.

பார்த்தால் கறுத்துப்போய், வறண்டுபோய் எழவே வாழ்வில்லாமல் கிடக்கும் காட்டு மனிதர்களைப்போல தரப்பாள் கொட்டில்களில் பாம்புகளுக்கும், தேள்களுக்கும் மத்தியில் கிடக்கும் வன்னி மக்களைக் கண்டால் அரசாங்கம் பயப்படுகின்றது. வாழ்வாதாரம் எதுவும் இல்லாமல் கிடக்கும் மக்களைப் பார்த்தா அரசாங்கம் அச்சப்படுகின்றது புலிகள் என்று?

தினம் தினம் நிராகரிப்பினால் செத்துப் போகின்றார்கள் அவர்கள். வெளிநாடுகளிலும் பொருளாதார நிலைமை, நிறம், மதம், வயது காரணமாகவும் பாரபட்சம் காட்டப்படுகின்றது. ஒவ்வொரு நாளும் பலர் இந்த வேதனைகளை சுமந்து கொண்டு வாழ்கின்றார்கள்.

வெள்ளைக்காரன் எங்களைப்போன்ற ஆசியனைக் கண்டால் 'வந்தான்' வரத்தான் என்று பார்க்கின்றார்கள். வெள்ளைக்கார பொடியங்கள் தங்களது நாட்டில் அகதியாகத் திரியும் தமிழர்களை தங்களது நாட்டை சுரண்ட வந்த ஏதிலிகள் என்று பார்க்கின்றார்கள். அவர்களைக் கடந்து செல்லும்பொழுது அச்சத்துடன் கடந்து செல்ல வேண்டிய நிலைமையே காணப்படுகின்றது.

உண்மையில் நிராகரித்தல் என்பது கொடுமையானதுதான்.

அடிஅசனத்திற்குப்பால்



இளைய அப்துல்லாஹ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீ.ஜீ. மேதமையின் இன்னொரு பெயர்



ஜீ.ஜீ. என்றால் கவர்னர்ஜெனரலைத்தான் குறிக்கும். ஆனால் இலங்கையில் ஜீ.ஜீ. என்றாலோ சிறியோர் முதல் முதியோர் ஈறாக திரு.ஜீ.ஜீ. பொன்னம்பலத்தையே நினைப்பார்கள்.

ஜீ.ஜீ. பொன்னம்பலம் 1901ஆண்டு கார்த்திகை மாதம் 8ஆம் திகதி கணபதிப்பிள்ளை காங்கேயர் தம்பதிகளுக்கு புதல்வராகத் தோன்றினார். ஆரம்பக் கல்வியை கொழும்பு ஸ்ரீற்றில் பிளவர் கொன்வென்றிலும் இடைநிலைக்கல்வியை யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியிலும் மேற்கல்வியை கொழும்பு சென்.ஜோசப் கல்லூரியிலும் கற்றார். சென்.யோசப் கல்லூரியில் கற்கும்போது கல்லூரி அதிபர் வண.பிதா பொன்னம்பலத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் "ஊசி நுனி போலும் கூரிய புத்தி படைத்தவர்" என வர்ணித்தார். அவர் ஆங்கு கல்வி கற்கும் பொழுது ஆங்கிலப் பேச்சுப் போட்டியில் முதலாவதாகத் தேறி தங்கப்பதக்கம் பரிசிலாகப் பெற்றார்.

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் விவசாயத் துறைக்கான புலமைப் பரிசிலை 1921ஆம் ஆண்டு வென்றெடுத்த ஜீ.ஜீ. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் இயற்கை அறிவியல் துறையிலும், சட்டத்துறையிலும் 2ஆம் வகுப்பின் உயர்தரத்தில் சிறப்புச் சித்தியைப் பெற்றார். அங்கு படிக்கும் பொழுது 1922ல் கீழைத்தேய மாணவர்களுக்குத் தலைவராக விளங்கினார். 1925ஆம் ஆண்டு முதுகலைமாணிப் பட்டம் அவருக்கு வழங்கியது. 1926ஆம் ஆண்டு கிங்கஸ் இன்னிஸ் சட்டப் பள்ளியில் சட்டம் படித்து பரிஸ்டரானார். 1927ஆம் ஆண்டு இலங்கை திரும்பிய இவர் இலங்கை உச்சநீதிமன்ற அப்புக்காத்தாகத் தன்னைப் பதிவுசெய்து கொண்டார். இவர் பல வழக்குகளில் ஆஜராகி வெற்றிக்கு மேல் வெற்றி ஈட்டினார்.

இவருடைய புகழும் அறிவுத் திறனும் அனைத்துப் பாகங்களைச் சேர்ந்தவர்களும் அவரையே தமது வழக்குகளில் தோற்றுவிப்பதற்காகக் காத்திருக்கச் செய்தன.

இந்நாட்டில் டொனமூர்கமிஷன் சிபார்சுகள் வெளியிடப்பட்டிருந்தன. இச்சிபார்சுகளை அப்போதைய பெரும் தலைவரான சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் எதிர்ப்பதற்காக லண்டன் பயணமானார். அந்த வேளையில் இங்குள்ள தமிழ் அரசியல் பிரமுகர்கள் அச்சிபார்சுகளை ஏற்க முடிவு செய்தார்கள். 1929 ஆண்டு கொழும்பில் சில தமிழ்ப் பிரமுகர்கள் இச் சிபார்சுகளை ஏற்கும் பொருட்டு தீர்மானம் எடுப்பதற்காகக் கொழும்பில் கூட்டம் கூடினார்கள்.

இக்கூட்டத்திற்கு வந்திருந்த இளம் வயதினரான ஜீ.ஜீ.பொன்னம்பலம் அக்கமிஷனரின் சிபார்சுகளால் ஏற்படவிருக்கும் தீமைகளைச் சுட்டிக்காட்டி சிபார்சுகளை ஏற்கக் கூடாதென்ற தீர்மானத்தை முன்மொழிந்தார். தீர்மானம் அதிகப்படியான வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. அன்று தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இராமநாதன் 1931ல் மறைவிற்குப் பின்னர் தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய நட்சத்திரமாகத் திகழ்ந்தார். காலம் சென்ற பேராசிரியர் ஜயரத்தினம் வில்சன் இலங்கைத் தேசிய வாதம் (Sri Lankan Nationalism) என்ற தமது நூலில் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தைப் பற்றிப் பின்வருமாறு விவரித்தார்.

இராமநாதன், அருணாசலம் சகோதரர்களினால் விடப்பட்ட அளப்பரிய வெற்றிடத்தை நிரப்ப வேண்டியிருந்த காலத்தில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அதனை நிரப்பினார். எனினும் அவர்களிடமிருந்து அவர் தமது அரசியல் கோட்பாட்டை உருவாக்கவில்லை. மாறாக, மேலாதிக்கம் இருக்கக் கூடாதென்ற சேர்.வில்லியம் மன்னிங்கின் எச்சரிக்கையிலிருந்தே அதனை உருவாக்கினார். அதன் விளைவுதான் ஐம்பதுக்கு ஐம்பது சமநிலைப் பிரதிநிதித்துவம்.

## இந்தியத் தமிழர்களுக்காக வாதிட்டவர்

1930ஆம் ஆண்டு தென்னிந்தியத் தமிழர்கள் இலங்கையில் பிரவேசிப்பதை வரையறை செய்ய வேண்டுமென்று சிங்களவர் கிளர்ச்சி செய்தனர். இதனை ஆராய்வதற்கு ஒரு விசாரணைக்குழு சேர்.எட்வேட் ஜாக்சன் தலைமையில் நியமிக்கப்பட்டது. ஜீ.ஜீ. பொன்னம்பலம் விசாரணைக்குழு முன் தோன்றி இந்தியத் தமிழர்கள் எந்தவித கட்டுப்பாடுமற்ற முறையில் வர அனுமதிக்க வேண்டும் எனக் கோரி கடுமையாக வாதிட்டார். இதன் பயனாக தென்னிந்தியத் தமிழர்கள் எந்தவித தடையுமின்றி வர அனுமதிக்கப்பட்டனர்.

ஜீ.ஜீ.பொன்னம்பலம் அன்று தொடக்கம் இந்திய வம்சாவளியினரின் உரிமைகளுக்காகப் போராடி அவர்களின் சுயமரியாதையைப் பாதுகாத்தார். ஜீ.ஜீ. அவர்கள் சட்டத்தொழிலில் மட்டுமே நின்று விட வில்லை. அரசியலிலும் இறங்கினார். சட்டசபைத் தேர்தலை வடமாகாணத்தில் இளைஞர் காங்கிரஸ் பகிஷ்கரித்தது. இதனால் வடமாகாணப் பிரதிநிதிகள் இல்லாததினால் மாகாணம் சீரழிந்த நிலையில் காணப்பட்டது. இதனைக் கண்டு ஜீ.ஜீ. விசனமுற்றார். இடைத் தேர்தலை நடத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்வித்தார். இதன் பயனாக 1931ஆம் ஆண்டு யூன் மாதம் தேர்தல் நடைபெற்றது. மன்னார், முல்லைத்தீவில் போட்டியிட்ட ஜீ.ஜீ. தோல்விகண்டார். ஆனைந்தன் வெற்றி பெற்றார். இதனைக் கண்டு அவர் மனம் தளரவில்லை. புலி சிறிது பின்னோக்கிச் செல்வது முன்னே வேகமாகப் பாயவே தாக்குத்தான். அடுத்த தேர்தல் 1934ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ந் திகதி நடைபெற்றது. அதில் பருத்தித்துறைத் தொகுதியில் போட்டியிட்ட ஜீ.ஜீ. 84 வீதத்தால் வெற்றி பெற்று தனது 31ஆவது வயதில் முதலாவது அரச பேரவைக்குள் பிரவேசித்தார்.

சமகாலத்தில் இன்னொரு பெயர் பெற்ற இளம் பேச்சாளரான எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவுடன் சேர்ந்து 'ஒல் சிலோன் லிபரல் லீக்'கை ஆரம்பித்தார். 1934ஆம் ஆண்டு பருத்தித்துறைத் தேர்தல் தொகுதி அங்கத்தவராக ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் நாடாளுமன்றம் செல்லும் வரை சமூகத்திற்காகக் குரல் கொடுப்பதற்காக எவரும் இருக்கவில்லை. ஜீ.ஜீ. சட்ட சபையில் பிரவேசித்த நாளிலிருந்து தமிழ் மக்களுக்காக வாதாடினார்.

நீதிமன்றத்திலும் சரி, சட்டவாக்கத் துறையிலும் சரி, பொது மேடையிலும் சரி ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் அதி உயர் பேச்சாற்றல் மூலம் எல்லோருடைய மனங்களையும் வென்றதோடு அவரின் சொற்பொழிவுகளுக்குச் செவிமடுத்தோரும் பெரும் பாக்கியசாலி ஆனார்கள். பிள்ளைப் பருவத்திலிருந்தே அவரது புலமை மிகுந்த அவரது திறமை அவரது பேச்சு வன்மைக்கான தேர் வில்லியம் ஹென்றி மெலிங் இன் பேச்சாற்றலுக்கான தங்கப் பதக்கத்தை அவர் தட்டிக் கொண்ட கல்லூரி சென்.ஜோசப் கல்லூரிக்கு முன்னெப்பொழுதும் இல்லாத பெரும் புகழைத் தேடிக் கொடுத்தது. கிறிஸ்தவ இளைஞர் மன்ற (வை.எம்.சி.ஏ.) கூட்ட நிகழ்வில் அவராற்றிய ஒப்பற்ற பேருரை அவரை 1928இல் தலைவராக நியமிக்க வைத்தது. சொந்தத் தொழில் புரிந்த சட்ட அறிஞர் மட்டுமன்றி அவர் தேசவழமைச் சட்ட ஆணையம்(1937) மற்றும் 1959 ஆண்டு புதுடில்லியில் நடைபெற்ற அனைத்துலக நடுவர் ஆணையத்தின் மாநாட்டிற்கு அனுப்பப்பட்ட இலங்கைப் பிரதிநிதி போன்ற உயர் அந்தஸ்துக்களில் சேவையாற்றி தனது சட்ட மேதாவிலாசத்தைப் பதிய வைத்தவராவார்.

● எஸ்.தியாகராஜா



## மரதன் உரை

1938 ஆம் ஆண்டு சட்ட சபைத் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் திரும்பவும் பருத்தித்துறைத் தொகுதியில் குடும்ப கௌரவத்துடன் விளங்கிய பத்மநாதனுடன் போட்டியிட்டார். அதில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்றார். சட்டசபையில் புகுந்த ஜீ.ஜீ. சிங்கள மக்களின் துவேச மனப்பான்மையை உணர்ந்தார். இந்நாடு சிங்கள நாடென்றும் இது சிங்களவர்களுக்கே சொந்தமென்றும் 1936 ஆம் ஆண்டு தனிச் சிங்கள மந்திரி சபை அமைத்தும் தமிழர்களுக்கு வேம்பு காட்டியதையும் கண்டார். இதன் பயனாக சிங்களவர்களுக்கு சாட்டையடி கொடுக்க நீண்ட மரதன் (Marathon Speech) உரையை நிகழ்த்தினார். அதன் சாராம்சம் பின்வருமாறு.

"தமிழ்ச் சமூகத்தின் நிலைப்பாடு என்ன? எமது நிலைப்பாடு இது தான் என்று நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். நாம் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள் நாம் இங்கு வாழ்ந்து வந்திருக்கின்றோம். தமிழ்ச் சமூகத்தினர் ஒரு கிளையினர் எமது சிங்களச் சகோதரர்களை விட நீண்ட காலம் இங்கு வாழ்ந்திருக்கின்றனர். இதுவே எமது தாயகம். அரசியல் ரீதியாகவும் வேறு வகையிலும் நிரந்தர உரித்துக்களைக் கோருவதற்கு சிங்கள மக்களுக்குள்ள அதேயுரிமை தமிழர்களாகிய எமக்குமுண்டு. நாம் வேண்டப்படாத அந்நியர்களாக நடத்தப்படுவதை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது. நாம் மத்திய ஐரோப்பாவின் நாஸிஸ் நாடுகளில் யூதர்களைப் போன்று கெட்டோக்' களில் பிரித்து வைக்கப்படுவதையும் நடத்தப்படுவதையும் சகித்துக் கொள்ள முடியாது.

சரி சமநிலையான பிரதிநிதித்துவத்தை வழங்குவதன் மூலம் மட்டும்தான் சனநாயக நாடொன்றில் உரிமைகளை நசுக்குவதைத் தடுக்க முடியும். சரிசமநிலையான பிரதிநிதித்துவமென்ற இந்தக் கோட்பாடு ஐக்கிய அமெரிக்காவில் செனற்றர்களைத் தெரிவு செய்வதில் பின்பற்றப்படுகின்றது. இவ்வாறு ஜீ.ஜீ.பொன்னம்பலம் தொடர்ந்து 8 மணித்தியாலம் பேசினார். சட்டசபையில் சேர்.பொன்.இராமநாதன் 6 மணித்தியாலம் பேசிய பேச்சிலும் பார்க்க இது கூடிய நேரமாகும்.

## குத்துச் சண்டையில் வீரன்

படித்தவர்கள் என்றால் கோழைகளாகவும், பலம் குன்றியவர்களாகவும் இருப்பார்கள் என்பது உலக நியதி. ஆனால் ஜீ.ஜீ. பொன்னம்பலமோ இதற்கு மாறானவர். 1938ஆம் ஆண்டு ஜீ.ஜீ.பொன்னம்பலத்திற்கும் சேர்.ஜோன்.கொத்தலாவலைக்கும் இடையில் சட்டசபையில் குத்துச் சண்டை நடைபெற்றது. சேர்.ஜோன் கொத்தலாவல கடற்படைத் தளபதியாக இருந்தவர். அவரிடத்தில் எல்லோருக்கும் ஒரு பயப்பீதி. எடுத்தவுடன் கைநீட்டுபவர். அப்படிப்பட்ட கொத்தலாவல ஜீ.ஜீ.யைச் சண்டைக்கிழுத்தார். தமிழரின் மானம் காக்கச் சென்ற ஜீ.ஜீ. விடுவாரா? இருவருக்கும் இடையில் மற்போர் மூண்டது. சட்டசபைக் கட்டிடங்கள் அதிர்ந்தன. சட்டசபைப் பிரதி நிதிகள் திகைத்தனர். அன்று தொடக்கம் ஜீ.ஜீ.என்றால் சிங்கள மக்களுக்கு ஒரு பயம்.

இன்னொரு முறை பிலிப் குணவர்த்தனா சட்டசபைக் கன்ரீனில் ஜீ.ஜீ.க்கு ஏதோ சொல்லிவிட்டார். பிலிப் குணவர்த்தனா என்றால் சிங்களவர் சிங்கம் என்று அழைப்பார்கள். அப்படிப்பட்ட குணவர்த்தனவுக்கு முகத்தில் ஒரு குத்துப் போட்டார். பிலிப் நிலை தடுமாறினார். இவ்விதம் தொழிற் கட்சித் தலைவர் ஏ.ஈ.குணசிங்கா ஆகியோரையும் அடக்கி வைத்திருந்தனர். அப்படிப்பட்ட ஜீ.ஜீ. சிங்களவர் அஞ்சும் ஒப்புயர் வற்ற தமிழ்த் தலைவராக விளங்கினார்.

யுத்தகால மந்திரி சபையில் ஜீ.ஜீ. இரண்டாவது உலக மகாயுத்தம் 1939ஆம் ஆண்டு தொடங்கி 1944ஆம் ஆண்டில் முடிவுற்றது. இதனால் சட்டசபைத் தேர்தல் நடைபெறவில்லை. இக்காலத்தில் யுத்தகால மந்திரிசபையில் ஒரு மந்திரியாக ஜீ.ஜீ. பொன்னம்பலம் இருந்தார்.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் 1944ஆண்டு உதயம் இந்த நாடு சிங்கள நாடென்றும், இந்த நாடு சிங்களவர்களுக்கே சொந்தமென்றும் சிங்களத் தலைவர்களிடையே வலுப்பெற்றிருந்தது. இதனை உறுதிப்படுத்தும் முகமாக "சிங்கள மகா சபையை" எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா தோற்றுவித்தார். சிறுபான்மைமக்கள் ஒதுக்க திட்டமிட்ட சூழ்ச்சியை உணர்ந்த திரு.ஜீ.ஜீ.பொன்னம்பலம் "ஒல் சிலோன் லிபரல் லீக்கி" லிருந்து விலகி சிங்கள அரசாங்கம் மேற்கொண்ட கடும் நடவடிக்கையிலிருந்து தமிழர்களைக் காப்பாற்ற மிகவும் முக்கியமான ஒரு விடயத்தை விளங்கிக் கொண்டார். அதாவது ஆட்சியின் கீழ் இடம்பெறும் இப்படியான நியாயமற்ற கடும் அடக்கு முறைகளை எதிர்த்து நிற்பதற்குப் பலம் வாய்ந்த தமிழ்த் தேசியத்ஸ்தாபனம் அமைக்கப்பட வேண்டுமென இவர் உணர்ந்தார். இதன் விளைவாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 1944 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ம் திகதி தொடக்கி வைத்தார். இதில் திருவாளர்கள் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் Q.C. Dr.ஈ.எம்.வி.நாகநாதன், குலசிங்கம், பாலசுந்தரம் M.A., M.S.C., தம்பிஐயா, தம்பியப்பா ஆகியோர் இருந்தனர்.

அடுத்த இதழிலும் வரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திம்பிலி – சபிக்கப்பட்ட சனங்கள்

திம்பிலி முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புக்கு வடக்காக அமைந்துள்ள அடர்ந்த காட்டுப் பகுதி. வேட்டையைத் தமது முக்கிய தொழிலாகக் கொண்ட வன்னி மக்களே அந்தக் காட்டுக்குள் பிரவேசிக்க அஞ்சுவர். கொடிய விச ஜந்துக்களினதும், சிறுத்தைப் புலிகளினதும் தாயகமாகவே இந்தத் திம்பிலிக் காடு இருந்தது. அப்படியிருந்தும் இந்தக் காட்டை வன்னி மக்கள் பயன்படுத்தத் தவறவில்லை. வைத்தியசாலை, சுகாதாரக் கழிவுகளை இந்தக் காட்டின் எல்லையோரமாகக் கொட்டியபடி கோம்பாவில் கிராமத்துக்குள் பரவாமலிருக்கத் தடுத்திருந்தனர். 2005 ஆம் ஆண்டு முதன் முதலாக மனிதர்கள் இந்தக் காட்டினுள் பயணமானார்கள். அங்கேயே வசிக்கத் தொடங்கினார்கள். அவர்களிடம் ஏ.கே 47 உட்பட்ட கனரக ஆயுதங்கள் இருந்தன. அந்தத் துணிவில் தமது வன்னியைத் தள மொன்றை நடத்த விடுதலைப் புலிகள் அமைத்திருந்தனர். அதற்குப் பிறகும் அந்தக் காட்டுக்குள் சனங்கள் எதற்காகவும் பயணப்படவில்லை.

2009இன் இக்காலப் பகுதியில் அந்தக் காடு உள்ளடங்கலான கிராமங்கள் இலங்கை இராணுவத்தினர் வசமாகியது. தமிழர்களின் அனைத்து நிலங்களும் ஆக்கிரமிக்கப்பட்ட தருணத்தில் இந்தக் காட்டையும் தமிழர்கள் இழந்தனர். இறுதிப் போரில் வன்னி மக்களும், விழுப்புண் அடைந்த போராளிகளும் இலங்கை இராணுவத்தினரால் கொத்துக் கொத்தாக கோரமாகப் படுகொலை செய்யப்பட்ட முள்ளிவாய்க்கால், பனையடி, வலைஞர்மடம், பழைய மாத்தளன், புதுமாத்தளன் ஆனந்தபுரம், போன்ற கிராமங்களின் மக்கள் இந்தத் திம்பிலிக் காடுதான் இனி தமக்கு முகவரி தரப்போகின்றது என்பதை கனவில் கூட நினைத்திருக்கவில்லை. தமது உறவுகளினதும் போராளிப் பிள்ளைகளினதும் சடலங்களும், வெடிபொருட்களும் அகற்றப்பட்ட பின்னர் மீளவும் தம் ஊருக்குத் திரும்புவோம் என்ற நம்பிக்கையில் வவுனியாவின் ஊடாக இராணுவத்தினரிடம் சரணடைந்தனர். கட்டின துணியோடு மட்டும் புலரிடம் இராணுவம் சோதனை என்ற பெயரில் அதையும் பறித்துக் கொண்டது. சரணடைந்தவர்களிடம் எதிர்காலம் மீது ஒரே ஒரு நம்பிக்கை தான் இருந்தது. நாம் விரைவில் பிண நாற்றமும், ஈக்களும் அற்ற ஊர்களுக்குத் திரும்புவோம் என்பதே அந்த நம்பிக்கை.

அந்த மக்கள் வவுனியா திறந்தவெளிச் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டு வருடங்கள் கடந்தும் நம்பிக்கை வெறுமையாய்க் கடப்பதைக் கண்டு ஆத்திரமுற்றனர். வன்னியின் ஏனைய கிராமமக்கள் அனைவரும் பகுதி பகுதியாக மீள் குடியேற்றம் செய்யப்பட்டும் தாம் இன்னும் கம்பி வேலிகளுக்குள் இருப்பதாக ஆர்ப்பாட்டம் செய்தனர். தம்மை வெளியில் விடும்படி முகாம் பெண்களின் குளியலறைகளிலும் மலசலகூட வாசல்களிலும் காவலுக்கு நிற்கும் சாதாரண சிப்பாய் தொடக்கம், தாம் காணும் உயர் அரச அதிகாரிகள் வரைக்கும் கெஞ்சினர். அவர்கள் அனைவரிடமும் ஒரு பதில் இருந்தது. அது சண்டை கடைசியா நடந்த இடம். அங்கு வெடிக்காத குண்டுகள் இருக்கு. பேய் இருக்கு. இன்னும் க்ளியர் பண்ணி முடியேல்ல.

இப்படியே காலம் கடந்து கொண்டிருக்கையில் ஒரு நாள் அறிவிப்பு வந்தது. இறுதிப் போர் நடந்த கிராமங்களுக்குரிய மக்கள் தமது இடங்களுக்கு மீள்குடியமர்த்தப்படவுள்ளனர் என சனங்களுக்குத் தாங்கிக் கொள்ள முடியாத சந்தோசம். கடைசியாய் வரும்போது முள்ளிவாய்க்கால் மண்ணில் புதைத்து வைத்துவிட்ட நகைகளை எடுத்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் தமது ஊர்களுக்கு மீள்திரும்புவதற்கான பேருந்துகளில் ஏறினர். பாய், பெட்சீற், கொஞ்ச விளையாட்டுப் பொருட்கள் நிவாரணமாகத் தந்த அரிசி, சீனி இவைதான் அவர்களின் கையிலிருந்த பொருட்கள். ஆனாலும் எப்படியெல்லாம் வாழ்ந்தோம். இப்போது ஒட்டாண்டி யாகிவிட்டோமே என்று யாரும் கவலைப்படவில்லை. ஏனெனில் அவர்கள் திரும்புவது தம் சொந்த நிலத்துக்கு. ஒரு வருடகால அவர்களின் உழைப்பிற்கு அந்த மண் தரும் வசதியம் வாழ்க்கையை பெற்றுத்தரும் நிதியில் பழைய நிலைக்குக் கொண்டு வந்துவிடும். இப்படியான கனவுப் பயணம் பலருக்குப் பேருந்தைவிட வேகமாக முள்ளிவாய்க்கால் நோக்கிப் பறந்தது.

எல்லாம் இறங்கு.. இறங்கு.. இடையில் இராணுவத்தினர் கத்தினர். மந்தைக் கூட்டமாக தம்மை நடத்திப் பழக்கிய அவர்களுக்கு அந்த இடத்தில் மக்களை கையாளுவது கடினமானதாக இருக்கவில்லை. "ஏய் அங்க போய் பதி.. ஐ.சி நம்பர் சொல்லு. இனி இங்க தான் இருக்கப் போறீங்க. உங்களுக்கு 1/4 (கால்) ஏக்கர் காணியும் தற்காலிக வீடும் தாறம்". இது மாதிரியான கதைகள் அரைகுறைத் தமிழிலும் சிங்களத்திலும் விளங்கப்படுத்தப்பட்டன. அந்தக் கணத்தில் சனங்களுக்கு ஒரு குடும்பத்துக்கு ஒரு தகர வீடும் 1/4 ஏக்கர் நிலமும், ஐந்து வீட்டுக்கு ஒரு கிணறும் கிடைத்ததாக அறிவிக்கப்பட்டது. தம்மைச் சுற்றி என்ன நடக்கின்றதென்றே அவர்களால் ஊகிக்க முடியாமல் இருந்தது. பலருக்கு இது எந்தக் காடு? என்பதைக் கண்டுபிடிக்கவே பல மாதங்கள் எடுத்தது. பதிவெடுக்க வந்தவர்கள் இது தான் திம்பிலிக் காடு என இடத்தை அடையாளப்படுத்தினர்.

பெருங்காட்டுக்குள் வரிசையாகத் தகர வீடுகள். அவசர அவசரமாக யாரினதோ அழுத்தத்தின் பேரில் இராணுவம் அமைத்திருக்கின்றது. இரகசியமாக முணுமுணுத்துக் கொள்ள மட்டும் முடிந்தது. வீடுகளுக்கு அருகில் ஆமிக்காரங்கள் எந்த நேரமும் திறந்த வெளி முகாம் போலவே இங்கேயும் சதாகாலமும் விழிப்பாயிருந்தனர். வீடுகளுக்கு அருகில் இருந்த இலங்கை இராணுவத்தின் 61 ஆவது பிரிகேட்டின் பயிற்சி முகாம் கவனிப்பை இன்னும் விசேசப்படுத்தியது.

முகாமில் கிடைச்ச நிவாரணங்கள் கூட இஞ்ச கிடைக்கிறதில்ல. வந்த உடன கொஞ்ச சாமான் தந்தாங்கள். பிறகு எல்லாம் நிப்பாட்டியாச்சு இதைத் தான் ஒவ்வொரு குடும்பஸ்த்தியும், குடும்பஸ்த்தனும் தமது பிள்ளைகளின் தலைகளைத் தடவியபடி கூறு கின்றனர். குடும்பத்துக்கு ஒரு வாட்டர்பம்ப் மட்டும் கிடைச்சிது. அதை வச்சி இப்ப இருக்கிற விலை வாசில எப்படி பிழைப்பு நடத்துறது?

இந்தக் காட்டுக்குள்ள ஆறு மணி ஆகினா வெளியால வரவே முடியேல்ல. பாம்புப் பயம், புலிப் பயம் எண்டு இங்க இருக்கவே முடியாது. அவசரத்துக்கு மருந்துக்கு கூட ஆஸ்பத்திரி இல்ல. ஒரு அம்புலன்ஸ் கூட இல்ல. நாங்கள் மிருகமாத் தான் இருக்கிறம்.

பள்ளிக்கூடம் போக வேண்டிய பிள்ளைகளுக்கு எந்த உதவியும் செய்துத் தரப்படேல்ல. கிடைக்கிறதுகளும் ஆக்களப் பாத்துத் தான் குடுக்கிறாங்க.

எங்கட எங்கட இடத்துக்கு விடலாம் தானே. சிங்கள ஆக்களுக்கு வெடிக்காத குண்டுகள் எங்களுக்கு மட்டும் வெடிக்குமா? எனப் பல்வேறு அவலக் கேள்விகளோடு திம்பிலி மக்கள் வாழ்கின்றனர். அன்றாடத்தைக் கழிக்கவே பல கஷ்டங்களை சந்தித்தபடியே வாழ்க்கையை ஓட்டுகின்றனர். கிட்டத்தட்ட இங்கிருக்கும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களில் ஒன்று தானும் இந்தக் காட்டில் வாழ்வதை விரும்பவில்லை, எங்களை முள்ளிவாய்க்காலுக்கு அனுப்புங்கள் என்பதைத் தான் ஒவ்வொரு அதிகாரியிடமும் கேட்கின்றார்கள். அப்படி அனுப்பும் இலங்கை அரசு அவர்களுக்குத் திம்பிலி தான் இனிச் சொந்த இடம் என்பதை இலங்கை மீள்குடியேற்றத்துறை பிரதி அமைச்சர் கருணா (முரளிதரன்) இந்திய எம்பிக்கள் குழு வவுனியா மக்களை சந்தித்த கூட்டத்தில் தெளிவாகச் சொல்லிவிட்டார். இராணுவம் நிலைகொண்டுள்ள பகுதிகளிலிருந்து எந்தக் காரணம் கொண்டும் அகற்றப்பட மாட்டார். இந்த இடத்தை தமது சொந்த இடமாகக் கொண்டு மக்களுக்கு வேறு இடங்களில் காணி வழங்கப்படும்.

யாராவது வெளிநாட்டு அதிகாரிகள் தம்மைச் சந்திப்பார்கள் என்றும், அவர்களிடம் தமது பிரச்சினையை எடுத்துக் கூறினால் தாம் சொந்த இடங்களுக்குத் திரும்ப வழிசெய்யப்படுவர் எனவும் திம்பிலியின் மக்கள் கடைசியாய் நம்புகின்றனர். இந்த நம்பிக்கைக் கோட்டையைக் கட்டிக் கொண்டு தான் இந்தியக் குழுவையும் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் அவர்களுக்கு இப்படி ஒரு இடத்தில் மக்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விடயம் சொல்லப்படவே இல்லை. அவர்களையும், வெளிநாட்டு அதிகாரிகளையும் பொறுத்தவரையில் வவுனியா நலன்புரி நிலையத்தில் மட்டும் தான் தற்போது மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் என்பதே இலங்கை அரசால் சொல்ல வைக்கப்பட்டிருக்கின்றது. திம்பிலி என்ற காட்டுப் பகுதியில் ஒரு இடைவிட்ட நலன்புரி நிலையம் இருப்பது அதிகளவான ஊடகங்களுக்குக் கூடத் தெரியவில்லை. ஏனெனில் அங்கு யாரும் சென்று அவ்வளவு இலகுவாகத் தகவல்களைத் திரட்டிக் கொண்டு மீள முடியாது.

■ ஜெரா

***



இந்தக் காட்டுக்குள்ள ஆறு மணி ஆகினா வெளியால வரவே முடியேல்ல. பாம்புப் பயம், புலிப் பயம் என்டு இங்க இருக்கவே முடியாது. அவசரத் துக்கு மருந்துக்கு கூட ஆஸ்பத்திரி இல்ல. ஒரு அம்புலன்ஸ் கூட இல்ல. நாங்கள் மிருகமா தான் இருக்கிறம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதாவை வளைக்க அவரது ஜனாதிபதி வேட்பாளருக்கு பி.ஜே.பி. ஆதரவு!


எதிர்வரும் 2014 லோக்சபா தேர்தலில் அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைக்க முடியாது போகுமோ என்ற அச்சத்தில் பி.ஜே.பி. ஜெயலலிதாவுக்காக எதையும் செய்யத் தயார் என்பதை கடந்த வார டில்லி அரசியல் நிகழ்வுகள் மேலும் ஒருபடி உறுதிப்படுத்தியுள்ளன. ஜெயலலிதாவால் நிறுத்தப்பட்ட ஜனாதிபதி வேட்பாளரான பி.ஏ.சங்மாவை ஆதரிக்க பி.ஜே.பி. கடந்த வாரம் எடுத்த முடிவு ஜெயலலிதாவின் காலடியில் விழ பி.ஜே.பி. தயார் என்பதையே கோடிட்டுக்காட்டியது. தேசியக்கட்சியான பி.ஜே.பி. நிறுத்தும் வேட்பாளரையே மாநிலக் கட்சியான ஜெயலலிதாவின் அ.தி.மு.க. ஆதரித்திருக்க வேண்டும் என்பதே வரலாறு காட்டும் நடைமுறையாகும். ஆனால் இதைத் தலைகீழாக்கி மாநிலக் கட்சி கட்டிக்காட்டும் ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் தேசியகட்சி ஒன்றுக்கு ஏற்பட்ட பரிதாபக்கதை இது எனலாம். கடந்த இரு தசாப்த காலமாக இந்திய அரசியலில் ஏற்பட்ட பரிணாம வளர்ச்சி இதுவாகும். மாநிலக் கட்சியான அ.தி.மு.க. மற்றொரு மாநிலக் கட்சியான ஒரிசாவின் பிஜூ ஜனதா தளத்துடன் இணைந்து பிரேரித்த வேட்பாளரை பி.ஜே.பி. கைகட்டி வாய் பொத்தி அங்கீகரித்துள்ளது. இப்படி இரண்டு மாநிலக் கட்சிகள் இணைந்தவுடனேயே பி.ஜே.பி. இவ்வளவு தூரம் அடங்கி வாசிக்க வேண்டி வந்துள்ளது. அப்படியானால் நான்கு அல்லது ஐந்து மாநிலக் கட்சிகள் தமக்குள் இணைந்து நிபந்தனை விதிக்கத் தொடங்கினால் பி.ஜே.பி.யின் நிலை என்னவாகும் என்பது சுவாரஸ்யமான ஒரு கேள்வியாகும். அ.தி.மு.க., பிஜூ ஜனதா தளம் இரண்டுமே கடந்த லோக்சபா தேர்தலில் கடைசி நேரத்தில் பி.ஜே.பி. அணியில் இருந்து கழன்று பி.ஜே.பி.க்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்த கட்சிகள் என்பது கவனிக்கத்தக்கது. உண்மையில் கடந்தமுறை மத்தியில் பி.ஜே.பி. ஆட்சிக்கு வரத் தடையாக இருந்தது மூன்று தோழமைக் கட்சிகள் அக்கட்சியுடன் கூட்டணி சேர மறுத்தமையே ஆகும். ஆந்திராவின் தெலுங்கு தேசம் தமிழகத்தின் அ.தி.மு.க., ஒரிசாவின் பிஜூ ஜனதா தளம் ஆகிய மூன்று கட்சிகளும் பி.ஜே.பி. அணியில் இருந்திருக்குமானால் சொக்கி வைத்து பி.ஜே.பி. காங்கிரசை தோற்கடித்து ஆட்சியிலிருந்து அகற்றி இருக்க முடியும். பி.ஜே.பி.யின் போதாதகாலம் கூட்டணி சரியாக அமையப் பெறவே இல்லை. தோல்வியும் படுதோல்வி ஆயிற்று. இந்த மூன்று கட்சிகளில் தெலுங்கு தேசமும் பிஜூ ஜனதா தளமும் பி.ஜே.பி. மதவெறி ஆடுவதைக் கண்டு அஞ்சி ஒதுங்கின. மற்றைய கட்சியான அ.தி.மு.க.வின் தலைவி அவருக்கே உரிய இறுமாப்பினால் பி.ஜே.பி.யுடன் கூட்டணி வைக்க மறுத்துவிட்டார். பி.ஜே.பி. ஒரு மதவாத கட்சி என்பதற்காக ஜெயலலிதா பி.ஜே.பி.யை ஒருபோதும் உதறியவரல்ல என்பது கவனிக்கப்பட வேண்டும். சிறுபான்மை வாக்குகளை இழப்போமோ என்ற கவலை ஜெயலலிதாவுக்கு ஒருபோதுமே இருந்ததில்லை. மாறாக தனக்கு உரிய "அந்தஸ்து" தரப்படவில்லை என்ற காரணத்தினாலேயே அவர் பி.ஜே.பி.யை உதறி வந்துள்ளார்.

எனவே, அவருக்கு உரிய கௌரவம் தருகிறோம் என்று காண்பிக்க பி.ஜே.பி.யின் தாத்தா போன்ற தலைவர் அத்வானி தன்னைவிட 25 வயது இளையவரான ஜெயலலிதாவை தேடிச் சென்று சென்னையில் சந்தித்து "தேவி தங்கள் கடாட்சம் பெற்ற ஜனாதிபதி வேட்பாளர் சங்மாவை நாங்கள் சிரம் தாழ்த்தி ஏற்கிறோம்" என பவ்வியமாகக் கும்பிடு போட்டு அறிவித்தார். தேசிய அரசியலில் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள ஜெயலலிதா வகுத்த வியூகங்களில் முதல் வியூகம் இதன்மூலம் வெற்றி கண்டது எனலாம். காங்கிரசுக்கு எதிரான எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளரை தேர்வு செய்வதில் ஜெயலலிதா வெற்றிபெற்றதானது பிரதமர் நானே என்கிறதன் பிடிவாத நிலைப்பாட்டை பி.ஜே.பி. ஏற்கும் நிர்ப்பந்தத்துக்கு பி.ஜே.பி.யை தள்ளுவது ஜெயலலிதாவின் அடுத்த நகர்வாக இருக்கும். அப்படி இல்லாது பிரதமர் வேட்பாளர் பி.ஜே.பி.யிலிருந்தே பிரேரிக்கப்படுவார் என பி.ஜே.பி. முரண்டு பிடித்தால் 'தனித்துப் போட்டி' என்ற பிரம்மாஸ்திரத்தை மறையபடி ஜெயலலிதா கையில் எடுப்பார்.

மதவாதம் என்பதற்காக பி.ஜே.பி.யை உதறாமல் தன் சொந்த பதவி விருப்புக்காக பி.ஜே.பி.யை ஆட்டுவிக்கும் ஜெயலலிதா போலன்றி சந்திரபாபு நாயுடுவும் பிஜூ ஜனதா தள தலைவர் நவீன் பட்நாயக்கும் கொள்கை ரீதியாக பி.ஜே.பி. மதவாதிகளாக இருப்பதை சுட்டியே பி.ஜே.பி.யின் கூட்டணியில் இடம்பெற மறுத்து வருகின்றனர். அந்தத் தலைவர்களின் மதசார்பின்மை கொள்கைப் பிடிப்பு இல்லையேல் பி.ஜே.பி. என்றைக்கோ இந்தியாவின் 10 கோடி முஸ்லிம்களுக்கும் சமாதி கட்டி இருக்கும் என்பதும் உண்மையாகும். இவர்களுடன் பீகார் முதல்வரும் JDU கட்சியின் தலைவருமான நிதிஸ்குமாரும் பி.ஜே.பி.யின் கூட்டணிக்குள் இருந்தவாறே அக்கட்சியின் மதவெறிக்கு கடிவாளம் கட்டுவதில் வெற்றி கண்டுள்ளனர். நரேந்திர மோடி பிரதமராக காட்டப்பட்டால் பி.ஜே.பி. அணியிலிருந்து உடனடியாகவே விலகுவேன் என்பதை நிதிஸ்குமார் பலமுறை குறிப்பால் உணர்த்தி வந்துள்ளது கவனிக்கப்பட வேண்டும். நிதிஸ்குமாரின் கட்சி சாமான்யமானதல்ல. பீஹாரில் அக்கட்சி இரண்டு தடவை தொடர்ந்து ஆட்சியைப் பிடித்து லல்லுபிரசாத்தை கிட்டத்தட்ட ஒழித்துக் கட்டியே விட்டது. எனவே நிதிஸ்குமாரை மீறி மதவெறிக் கலவரங்கள் நடத்துவதோ மோடியை பிரதமராக்குவதோ பி.ஜே.பி.க்கு இலகுவாக இருக்கப் போவதில்லை.

ஜனாதிபதி தேர்தலில் பி.ஜே.பி.யின் நிலைப்பாட்டுக்கு நேர்முரணாக எதிரியான காங்கிரசின் வேட்பாளர் பிரணாப் முகர்ஜியை நிதிஸ்குமார் ஆதரித்துள்ளார். பி.ஜே.பி.யின் ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிக்க வேண்டுமாயின் மதவெறியற்ற தலைவரை பி.ஜே.பி. தனது பிரதமர் வேட்பாளராக அறிவிக்க வேண்டுமென நிதிஸ்குமார் நிபந்தனை விதித்த போதும் அதை பி.ஜே.பி. நிராகரித்து விட்டது. நிதிஸ்குமார் பி.ஜே.பி.யின் ஜனாதிபதி வேட்பாளரை ஆதரித்தாலுமே கூட பிரணாப் முகர்ஜியே வெற்றிபெறும் வாய்ப்பே உள்ளது. எனவே ஜனாதிபதி தேர்தலில் வெல்லாவிட்டாலும் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி காங்கிரசுக்கு எதிரான தனது கூட்டணியை பலப்படுத்தவே பி.ஜே.பி. விரும்பியது. ஆனால் அதற்கு நிதிஸ்குமாரும் மஹாராஷ்டிராவின் சிவசேனா கட்சியும் இடமளிக்க மறுத்து விட்டன. அவ்வப்போது பி.ஜே.பி.யுடன் உரசலுடன் தான் சிவசேனா தலைவர் பால்தாக்கரே பி.ஜே.பி. கூட்டணியில் தொடர்கிறார். எனவே பி.ஜே.பி.யை மிரட்ட இச்சந்தர்ப்பத்தை தாக்கரே பயன்படுத்திக் கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

முதலில் மம்தாவால் பிரேரிக்கப்பட்ட கலாமை ஆதரிக்கவே பி.ஜே.பி. விரும்பியது. ஆனால் அதற்கு முன்பே ஜெயலலிதா முந்திக் கொண்டு சங்மாவை வேட்பாளராக அறிவித்து விட்டார். பி.ஜே.பி.க்கோ மம்தா, ஜெயலலிதா இருவரையும் தாஜா செய்து கூட்டணிக்குள் இழுத்துவிடும் அவசியம் இருக்கிறது. எனவே மம்தாவா ஜெயலலிதாவா எனத் தீர்மானிக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. நல்ல வேளையாக கலாமாக விலகிக் கொண்டதால் மம்தாவின் கோபத்திலிருந்து பி.ஜே.பி. தப்பியது. எனினும் கலாம் போட்டியில் இறங்கி இருப்பின் முகர்ஜியை தோற்கடிக்கும் ஒரு சிறுசந்தர்ப்பம் பி.ஜே.பி.க்கு கிடைத்திருக்கலாம். ஜனாதிபதி தேர்தலில் எம்.பி.க்களும் எம்.எல்.ஏ.க்களும் இரகசியமாகவே வாக்களிப்பர். எனவே கட்சிமாறி வாக்களித்தாலும் கட்சித் தலைமை அதைக் கண்டுபிடித்து ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது கடினம். அவ்வகையில் கலாம் போட்டியிட்டிருந்தால் முகர்ஜிக்கும் காங்கிரசுக்கும் கடும் நெருக்கடி ஏற்பட்டிருக்கும் என்பது



நிச்சயம்.

இப்போதுள்ள எதிரணி வேட்பாளரான சங்மா வடகிழக்கு மேகாலயா மாநில பழங்குடி இன கிறிஸ்தவர். முன்பு காங்கிரசின் நம்பிக்கை நட்சத்திரமாக இருந்தவரும் கூட. 1999ல் சரத் பவார் சோனியாவுடன் முரண்பட்ட போது வெளிநாட்டவர் இந்திய பிரதமராகக் கூடாது என சரத் பவாருடன் இணைந்து சங்மா காங்கிரசிலிருந்து வெளியேறி இருந்தார். சோனியாவின் பரமவைரி என்ற தகுதி அடிப்படையிலேயே ஜெயலலிதா சங்மாவை ஆதரித்துள்ளார் என்பது சொல்லாமலே விளங்கும். சோனியா காந்திக்கு எவ்வாறெல்லாம் கடுப்பேற்ற முடியுமோ அவ்வாறெல்லாம் கடுப்பேற்றும் எந்த வழிமுறையையும் விட்டு வைப்பதில்லை என ஜெயலலிதா கங்கணம் கட்டிக் கொண்டு செயற்படுவதும் தெரிந்ததே. தொடக்கத்தில் அப்துல் கலாமை ஜெயலலிதா தான் முன்னிறுத்தினார். எனவே ஜெயலலிதாவால் பிரேரிக்கப்பட்ட கலாமை தான் ஆதரிப்பதா என்ற ஈகோவில் மம்தா சோனியாவுடன் குலாவுவது போல் கைத்தடித்தார். பின்பு ஜெயலலிதாவால் கலாம் அநாதரவாக விடப்பட்ட பின்பு மம்தா கலாமை தத்தெடுத்துக் கொள்ள முயன்றதும் கவனிக்கத்தக்கது. அச்சந்தர்ப்பத்தில் ஜெயலலிதா அதீத மௌனம் காத்தார். கலாமை ஆதரித்து எந்தக் கருத்தும் வெளியிடவும் இல்லை. கடைசியில் ஜெயலலிதாவின் வேட்பாளரே எதிரணி வேட்பாளராகி உள்ளார். அவ்வகையில் மம்தாவை விட ஜெயலலிதா தேசிய அரசியலில் பல படிகள் முன்னணியிலுள்ளார் என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. மம்தாவும் ஜெயலலிதாவும் சந்திப்பது கூட இல்லை. காங்கிரசின் எதிரிகள் இவ்வாறு தமக்கிடையே வைராக்கியம் பாராட்டும் வரையில் காங்கிரஸ் காட்டில் மழை தான்.

அஜித்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பித்தன் பதில்கள்

# ஆணாதிக்கம்; பெண்ணாதிக்கம் வேறுபாடு என்ன?



**ம.வைகீசன், யாழ்ப்பாணம்.**
**கேள்வி:** எழுத்தாளர்களுக்குத் தேவைப்படும் மிக முக்கிய விடயங்கள் எவை எனக் கூறுங்கள் பார்க்கலாம்?

**பதில்:** நேரம்; பணம்; ஊக்கம்.



**இ.செல்வரஞ்சினி, வவுனியா.**
**கேள்வி:** தோல்வியே வெற்றிக்கான முதற்படி என்பது சரிதானா?

**பதில்:** ஏனைய விடயங்களுக்குப் பொருந்தினாலும் இது காதல் விடயத்தில் மட்டும் பொருத்தமற்றது.

**மு.முருகையா, புரந்தன்.**
**கேள்வி:** முன்னரை விட தற்காலத்தில் பெண்கள் முன்னேறியுள்ளனரா பித்தரே?


**பதில்:** அப்படித்தான் சொல்கிறார்கள். (ஏன் வம்பை விலைக்கு வாங்குவான்)



**து.அருணானந்தம், பருத்தித்துறை.**
**கேள்வி:** இலக்கணம்; இலக்கியம் இவற்றில் எது முக்கியத்துவம் வாய்ந்தது.

**பதில்:** ஒரு மொழிக்கு இவ்விரண்டும் இரு கண்கள் போன்றவை.

**ஆ.அரிகரன், மட்டக்களப்பு.**
**கேள்வி:** இப்போதெல்லாம் கண்டதும் காதல் கொண்டு விடுகிறார்களே.



**பதில்:** காதல் மட்டுமல்ல விவாகரத்தும் கூட கண்ட கண்டபடிதானே நடக்கிறது.

**சு.கிஸாநிலா, திருகோணமலை.**
**கேள்வி:** உண்மையைச் சொல்லுங்கள் பித்தரே. நீர் உமது மனைவிக்குப் பயந்தவர் தானே?

**பதில்:** ஒரு கணவன் தனது மனைவியை அனுசரித்து நடந்தால் தான் வீடு களை கட்டும் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கை உண்டு (ஹி... ஹி... எப்படி? மடக்க நினைத்தீர் உம்மையே மடக்கி விட்டேனே?)



**ஆ.மயில்வாகனன், கொழும்பு 06.**
**கேள்வி:** ஆணாதிக்கம்; பெண்ணாதிக்கம் இரண்டுக்கும் உள்ள வேறுபாடு என்ன பித்தரே?

பதில்: பலாபலன் இப்படி இருக்கும். ஆணாதிக்கம் தேள் கடிக்கு இலக்கானது போலிருக்கும். பெண்ணாதிக்கம் நாயிடம் கடிவாங்கிக் காயப்படுவதற்கு ஒப்பானது.

**எஸ். தில்லைநாதன், வவுனியா.**
**கேள்வி:** காமம் இல்லாத காதல் எங்காவது இருந்திருக்குமா பித்தரே?

**பதில்:** புகையில்லா நெருப்பை நீர் எங்காவது கண்டதுண்டா?



**என். தில்லைநாயகி, மன்னார்.**
**கேள்வி:** பணம் வாழ்க்கைக்கு உயிர்நாடி என்கிறார்கள். அது பற்றி நீர் என்ன சொல்கிறீர் பித்தரே.

**பதில்:** அளவோடு இருந்தால் பணம் எம்மைக் காப்பாற்றும். அளவுக்கு அதிகமாக இருந்தால் அதை நாம் காப்பாற்ற வேண்டியிருக்கும்.

**வேதாரணியம், பருளை.**
**கேள்வி:** பருவத்தில் கிடைப்பது இன்பம். முதுமையில் இன்பம் தருவது எது?

**பதில்:** பருவ காலத்தில் அனுபவித்த இன்பங்களை மனதில் நினைத்து மகிழும் மன நினைவுகள்.

**தி.வேணியன், புத்தூர்.**
**கேள்வி:** பொதுவாக ஆண்களுக்கு தலைமுடி நரைத்த பின்னரே இறைபக்தி நாட்டம் அதிகரிக்கிறது. இது ஏன் பித்தரே?

**பதில்:** பட்டுக் களித்து அனுபவப்பட்ட விரக்தியில் வருவது அது. அதை உண்மையான இறைபக்தி நாட்டம் எனச் சொல்லிக் கொள்ளலாமா?

## சொற்சிலம்பம் போட்டி இல: 528

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 4 | | 5 | 6 |
| 7 | | | 8 | | ■ | 9 | |
| 10 | | ■ | 11 | | | | ■ |
| | ■ | 12 | | | ■ | 13 | 14 |
| ■ | 15 | | | ■ | 16 | | |
| 17 | | | ■ | 18 | | | ■ |
| 19 | | | | | | ■ | 20 |
| 21 | | | ■ | | ■ | 22 | |

அனுப்புபவர் பெயர்:.......................................
விலாசம்:.......................................
.......................................
கையொப்பம்:.......................................

### மேலிருந்து கீழ்
01. சூரியன்
02. கோணிப்பை
03. அதிக
04. இராச்சியம் செய்வதை அல்லது கோலோச்சுவதை இப்படியும் அழைப்பர்.
05. விஷ்ணுவின் அவதாரங்களுள் ஒருவர்
06. நினைவுநாள்
08. துன்பப்படுத்துவது.
12. சுவைகளுள் ஒன்று
14. நகை
15. உலோகப்பொருளைத் தட்டையாக்கினால் வருவது
16. குழிவகை அருந்தும் பாத்திரம்
17. ஒரு வாத்தியக் கருவி
18. மெல்லிய தடித்துண்டு
20. பிள்ளையாரின் வாகனம்

### இடமிருந்து வலம்
01. துயர்
04. சேனாதிபதி
07. உரியவர்
09. அழகுப் பெண்
10. பிரி
11. பரிந்துரை
12. மலை
13. சோதிடத்தில் முக்கிய இடம் இதற்கு
15. நிஷ்டை
16. பருவப்பெண்
17. உ னை
18. மதில்
19. பிள்ளையின் பிள்ளை
21. விளக்கு
22. நோவு

## சொற்சிலம்பம் போட்டி இல: 528

சொற்சிலம்பம் 528 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் திகதி 2012 ஆம் ஆண்டு ஜூலை மாதம் [illegible] விடைகள் [illegible] 22 ஆம் திகதி [illegible]

[illegible] பரிசாக ரூபா 2500 உம் இரண்டாவது பரிசாக ரூபா 1500 உம் மூன்றாவது பரிசாக ரூபா 1000 உம் [illegible] பரிசுக்குரியவர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி
சுடர் ஒளி வாரமலர் அலுவலகம்,
361 டொக்டர் [illegible] வீதி,
யாழ்ப்பாணம்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 525 விடைகள்

**மேலிருந்து கீழ்**

01.பதிகம், 02.துண்டு, 03.குழுதி, 04.குசு, 05.சடுதி, 08.நாத்திகன், 10.காத்தல், 11.பகு, 12.ஆம், 13.சந்ததி, 14.தன், 16.சைனியம், 17.கழுகு, 18.கருநா, 20.தரு

**இடமிருந்து வலம்**

01.பதுங்குகுழி, 06.திண், 07.குசி, 08.நாடு, 09.கர்வசி, 11.புத்தி, 12.ஆகுதி, 13.சத்தம், 15.காசை, 17.கந்தன், 18.கன்னி, 19.முதல், 20.தரு, 21.[illegible]

## போட்டி இல. 525 இல் பரிசு பெற்றோர்

**1 ஆம் பரிசு** திருமதி. சி.கலைவாணி, 1385, நாதன் திட்டம், புன்னை நீராவி, விசுவமடு.

**2 ஆம் பரிசு** கு.சண்முகம், நடுவில் தம்பி வீதி, வத்தாறுமுறை.

**3 ஆம் பரிசு** அ.சண்முகநாதன், இல.24/A. மொஸ்க் வீதி, நீர்கொழும்பு.

## பாராட்டுப் பெறுவோர்

(1) பி.செல்வநாயகம், 108-5/3, மனிங் பிளேஸ், கொழும்பு 06.
(2) கந்தையா வைத்தியநாதன், சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.
(3) சு.பரந்தாமன், 145/14 ஜெம்பட்டா வீதி, கொழும்பு 13.
(4) திருமதி சு.அருந்ததி, மட்/வாணிலை அவதான நிலைய விடுதி, மட்டக்களப்பு.
(5) செ.றொபேட், சென் மேரீஸ் லேன், ஊர்காவற்றுறை.
(6) கே.இராஜகோபால், அடைக்கலம்தோட்டம், கந்தசுவாமி கோவிலடி, வட்டுக்கோட்டை.
(7) ச.கீர்த்தனா, 110, அனிஞ்சியன் குளம், மல்லாவி.
(8) வசந்த பிரியன், போக்காலை லேன், உடுப்பிட்டி.
(9) திருமதி சரோஜினிதேவி மோகன்தாஸ், பிரதான வீதி, செங்கலடி.
(10) க.தில்லையம்பலம் கதிர்காம கோவிலடி, வதிரி, கரவெட்டி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சானியாவின் ஆவேசம்



லண்டன் ஒலிம்பிக் போட்டியில்பங்கேற்கும் அரிய வாய்ப்பை இந்தியாவின் சானியா மிர்சா, ருஷ்மி சக்ரவர்த்தி, சோம்தேவ் தேவ்வர்மன் ஆகியோர் வைல்டு கார்டு முறையில் பெற்றனர். இம்முறை ஒலிம்பிக் போட்டிக்கான வீரர்கள் தேர்வு தொடர்பாக, இந்திய டென்னிஸ் சங்கத்தின் மீது சானியா கடுமையாக சாடியுள்ளார்.

லண்டனில், 30ஆவது ஒலிம்பக் போட்டி ஜூலை 27ஆம் திகதி ஆரம்பமாகிறது. இதில் பெண்கள் டென்னிஸ் இரட்டையர் பிரிவில், வைல்டு கார்டு (சிறப்பு அனுமதி) முறையில் விளையாட, சானியா, ருஷ்மி சக்ரவர்த்திக்கு அனுமதி கிடைத்துள்ளது. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இளம் இந்திய வீரர் சோம்தேவ் தேவ்வர்மனுக்கும் அனுமதி கிடைத்துள்ளது.

மிக நீண்ட சர்ச்சைக்கு பின் இம்முறை ஒலிம்பிக் ஆண்கள் இரட்டையரில் பூபதி-போபண்ணா, பயஸ்-விஷ்ணுவர்தன் , கலப்பு இரட்டையரில் சானியா-பயஸ் ஜோடியும் விளையாடும் என அகில இந்திய டென்னிஸ் சங்கம்(ஏ.ஐ.டி.ஏ.) ஏற்கனவே அறிவித்தது. சமீபத்தில் நடந்த பிரெஞ்ச் ஓபனில் பூபதி-சானியா சேர்ந்து பட்டம் வென்ற நிலையில், பயசுடன் விளையாடச் சொல்வது நியாயமா என்ற கேள்வி எழுந்தது.

***சானியா ஆவேசம்:***

இப்பிரச்சினையில் கொஞ்சம் பொறுத்திருந்த சானியா, தற்போது ஒலிம்பிக் வாய்ப்பு கிடைத்ததும் ஆத்திரத்தை கொட்டித் தீர்த்துள்ளார். இது குறித்து இவர் வெளியிட்ட அறிக்கையில், ஏ.ஐ.டி.ஏ., செயல் எனது மதிப்பை குறைக்கும் வகையில் உள்ளது. பயஸ், பூபதியை சமாதானப்படுத்த என்னை பயன்படுத்திக் கொண்டது இந்திய பெண் இனத்துக்கே ஏற்பட்ட இந்த அவமானம் கண்டனத்துக்குரியது.

பயசுடன் தான் விளையாட வேண்டும் என அவாது தந்தை வெசி பயஸ் எழுத்துப்பூர்வமாக உறுதி கேட்டது ஆச்சரியம் அளித்தது. தரப்படுத்தலில் பின்தங்கி இருந்தாலும் விஷ்ணுவர்தனும் மிகச் சிறந்த வீரர் தான் என்பதை பயசுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். விஷ்ணுவுடன் சேர்ந்து 2010 ஆசிய விளையாட்டில் வெள்ளி வென்றுள்ளேன்.

பூபதியுடன் சேர்ந்து விளையாடவே விருப்பம். ஆனாலும், நாட்டின் நலன் கருதி ஒலிம்பிக்கில் பயசுடன் இணைந்து விளையாட தயாராக உள்ளேன், என, தெரிவிக்கப் பட்டுள்ளது.

# ஆனந் ஏமாற்றம்



ருமேனியாவின் மெடியாஸ் நகரில் நடைபெறவிருந்த 'திகிங்செஸ்'போட்டிஒத்திவைக்கப்பட்டது ஏமாற்றமளிப்பதாக உலக சம்பியன் விஸ்வநாதன் ஆனந்த் தெரிவித்தார்.

ருமேனியாவின் மெடியாஸ் நகரில் ஜூன் 23 முதல் ஜூலை 4 வரை இப்போட்டி நடைபெறுவதாக இருந்தது.

இதில் நடப்புச் சம்பியனான நோர்வேயின் மாக்னஸ் கார்ல்ஸன், விஸ்வநாதன் ஆனந்த் உள்ளிட்டோர் பங்கேற்க விருந்தனர். இந்தப் போட்டி திடீரென திகதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது.

# தென்ஆபிரிக்காவில் ருவன்ரி - 20

உள்ளூரில் சாதித்த அணிகள் மோதும் நான்காவது சம்பியன்ஸ் லீக் 'டுவென்ரி-20' தொடர் வரும் ஒக்டோபரில் (10-28) இந்தியாவில் நடைபெறவிருந்தது. ஆனால் பருவ மழை மற்றும் கொல்கத்தாவில் நடக்கவுள்ள துர்கா பூஜா காரணமாக, இத்தொடரை தென் ஆபிரிக்காவுக்கு மாற்றம் செய்ய முடிவு செய்யப்பட்டது. இது தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளது. இத்தொடர் இரண்டாவது முறையாக தென் ஆபிரிக்காவில் நடைபெறவுள்ளது. போட்டிகள் கேப்டவுன், ஜோகனஸ்பர்க், செஞ்சுரியன், டர்பன் உள்ளிட்ட நான்கு மைதானங்களில் நடத்தப்படுகிறது. இதற்கான முழு அட்டவணை விரைவில் வெளியிடப்பட உள்ளது.

**பாக்., அணிக்கு அனுமதி:**

முதல் முறை சம்பியன்ஸ் லீக் தொடரில் முதல் முறையாக பாகிஸ்தான் சார்பில் சியால்கோட் ஸ்டாலியன்ஸ் என்ற அணி விளையாட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. முதலில் தகுதிச் சுற்றில் விளையாடும். இதில் வெற்றி பெறும் பட்சத்தில் முக்கிய சுற்றில் பங்கேற்கும்.

**மும்பைக்கு வாய்ப்பு:**

இம்முறைஇந்தியாசார்பில்ஐ.பி.எல்.,தொடரில் முதல் நான்கு இடங்களை பிடித்த அணிகள் நேரடியாக விளையாடும் வாய்ப்பை பெற்றன. இதன்படி, ஐந்தாவது ஐ.பி.எல்., தொடரில் நான்காவது இடம் பிடித்த மும்பை இந்தியன்ஸ் அணிக்கு நேரடி வாய்ப்பு கிடைத்துள்ளது. முதல் மூன்று இடங்களை பிடித்த கொல்கத்தா நைட்ரைடர்ஸ், சென்னை சூப்பர் கிங்ஸ், டில்லி டேர்டெவில்ஸ் அணிகளும் விளையாடுகின்றன.

**எட்டு அணிகள்:**

முக்கிய சுற்றில் இம்முறை மொத்தம் 8 அணிகள் விளையாடுகின்றன. இதில் இந்தியா (4 அணி), ஆஸ்திரேலியா (2), தென் ஆபிரிக்கா (ஒரு) சார்பில் மொத்தம் எழு அணிகள் நேரடியாக விளையாட தகுதி பெற்றன. மீதமுள்ள ஒரு இடத்துக்கு, ஆறு அணிகள் தகுதிச் சுற்றில் மோதுகின்றன. இதில் பாகிஸ்தான், நியூசிலாந்து, வெஸ்ட் இண்டீஸ், இங்கிலாந்து, இலங்கை, தென் ஆபிரிக்கா சார்பில் தலா ஒரு அணிகள் விளையாடுகின்றன.

இதுகுறித்து சம்பியன்ஸ் லீக் 'டுவென்ரி-20' தொடரின் தொழில்நுட்ப கமிட்டி உறுப்பனர் சுந்தர் ராமன் தனது 'டுவிட்டர்' இணையதளத்தில் வெளியிட்ட செய்தியில், இந்த ஆண்டு சம்பியன்ஸ் லீக் தொடர் தென் ஆபிரிக்காவில் நடைபெறுவது உறுதியாகி உள்ளது. முழு விவரம் விரைவில் வெளியிடப்படும், என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டெஸ்ட் தரவரிசை; சங்ககாரா 2 ஆம் இடம்

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் வெளியிட்டுள்ள டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசையில் பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் ஆட்டமிழக்காமல் 199 ரன்கள் குவித்த இலங்கையின் சங்ககாரா 3 இடங்கள் முன்னேறி 2 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் ஓர் இடம் முன்னேறி 11 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளின் சிவநாராயண் சந்தர் போல் 856 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார். தென் ஆப்பரிக்காவின் ஏ.பி.டிவில்லியர்ஸ் 3ஆவது இடத்தில் உள்ளார். சச்சினைத் தவிர வேறு எந்த இந்திய பேட்ஸ்மேனும் முதல் இருபது இடங்களுக்குள் இல்லை.

பெளர்கள் தரவரிசையில் தென் ஆபிரிக்காவின் டேல் ஸ்டெயின், பாகிஸ்தானின் சயீத் அஜ்மல், இங்கிலாந்தின் ஜேம்ஸ் ஆண்டர்சன் ஆகியோர் முறையே முதல் 3 இடங்களை தக்கவைத்துக் கொண்டனர். இந்திய வீரர் ஜாகீர்கான் ஓர் இடம் முன்னேறி 11 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். இந்தியாவின் பரகயான் ஓஜா தொடர்ந்து 20 ஆவது இடத்தில் உள்ளார். இந்திய வீரர்களில் இவர்கள் இருவர் மட்டுமே இருபது இடங்களுக்குள் உள்ளனர்.

டெஸ்ட் ஆல்ரவுண்டர்கள் தரவரிசையில் வங்கதேசத்தின் ஷகிப் அல்ஹசன் முதலிடத்திலும், தென் ஆப்பரிக்காவின் ஜாக்ஸ் காலிஸ் 2 ஆவது இடத்திலும், இங்கிலாந்தின் ஸ்டூவர்ட் பிராட் 3 ஆவது இடத்திலும் உள்ளனர்.



# சச்சின் வழியில் மகன்

சச்சின் வழியில் அசத்த காத்திருக்கிறார் அவரது மகன் அர்ஜுன். மும்பை கிரிக்கெட் (எம்.சி.ஏ.) சங்கத்தின் 14 வயதுக்குட்பட்டோருக்கான உத்தேச அணியில் இடம் பெற்றுள்ளார்.


இந்திய அணியின் சாதனை வீரர் சச்சின். இவரது மகன் அர்ஜுனும் கிரிக்கெட்டில் மிகுந்த ஆர்வமாக உள்ளார். இடது கை பேட்ஸ்மேனான இவர், வேகப்பந்துவீச்சிலும் வல்லவர். மும்பையில் உள்ள திருபாய் அம்பானி பாடசாலையில் படிக்கும் இவர், சமீபத்தில் உள்ளூர் கிளப் அணிக்காக பங்கேற்று சதம் (124) விளாசினார்.

இந்நிலையில், அடுத்த மாதம் எம்.சி.ஏ., சார்பில் 14 வயதுக்குட்பட்டோருக்கான பயிற்சி முகாம் நடக்க உள்ளது. இதற்கான 32 பேர் கொண்ட உத்தேச அணியில் அர்ஜுனும் இடம் பெற்றுள்ளார்.

இது குறித்து எம்.சி.ஏ., இணை செயலர் மற்றும் தேர்வுக்குழு தலைவர் ஷெட்டி கூறுகையில்,கோடை கால கிரிக்கெட் தொடரில் அர்ஜுன் சிறப்பாக செயல்பட்டார். ஐந்து போட்டிகளில் 250 ரன்களுக்கு மேல் எடுத்தார். இதன் அடிப்படையில் பயிற்சி முகாமில் கலந்து கொள்ள வாய்ப்பு கிடைத்துள்ளது. ஜூலை 3 ஆம் திகதி பயிற்சி ஆரம்பிக்கும், என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






GUEST HOUSE - I

No. 392/6, Navalar Road, Jaffna.
T.P: 021 2225660, 021 5677608,
071 5 36 36 36

UTHAYAN

GUEST HOUSE - II

No. 12, Sivagurunathar Lane,
Off Kasthuriyar Road, Jaffna.
T.P: 021 2222330, 021 5677603,
071 5 36 36 36





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உலகில் மிகப்பெரிய கழிப்பறை

உலகின் மிகப் பெரிய பொதுக் கழிப்பறை, ஜப்பானின் இச்சிகாரா என்ற நகரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. நகரின் மையப் பகுதியில் உள்ள ரயில்வே ஸ்ரேஷன் அருகே இக்கழிப்பறை உள்ளது. இதை, கழிப்பறை என ஒற்றை வார்த்தையில் கூறி விட முடியாது. 200 ச.மீ., பரப்பளவில் கட்டப்பட்டுள்ள இந்தக் கழிப்பறையைச் சுற்றி, ஒரு பூந்தோட்டமே உருவாக்கப்பட்டுள்ளது. அழகான மரங்கள், கண்ணை கவரும் பூக்கள் என, ஏராளமான பணத்தை கொட்டி, இதை உருவாக்கியுள்ளனர். இந்த பூந்தோட்டத்தின் மையப் பகுதியில், கண்ணாடிக் கூண்டு அமைக்கப்பட்டு, அதற்குள் கழிப்பறை உருவாக்கப்பட்டுள்ளது. பூந்தோட்டத்தை சுற்றி வெளியில் இருந்து யார் பார்த்தாலும் தெரியாத அளவுக்கு, இரண்டு மீற்றர் உயரமுள்ள தடுப்புச் சுவர் அமைக்கப்பட்டுள்ளது. இதுதான் உலகின் மிகப் பெரிய, அதே நேரத்தில் இயற்கை எழில் கொஞ்சும் அழகான கழிப்பறை... என, பெருமிதத்துடன் கூறும், இச்சிகாரா நகர அதிகாரிகள், இதை அமைப்பதற்காக, ஒரு கோடி ரூபாய் செலவழித்துள்ளனர். இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்ன தெரியுமா? இது, பெண்கள் மட்டுமே பயன்படுத்தும் கழிப்பறை. எதற்காக கழிப்பறைக்கு இவ்வளவு பணத்தைச் செலவழிக்கிறீர்கள்... என கேட்டால், சுற்றுலாவை ஊக்குவிப்பதற்காகத் தான்... என, ஜப்பான் அதிகாரிகளிடம் இருந்து பதில் வருகிறது.

## தினமும் 9 500 வெப்சைட்டுகளை அழிக்கும் கூகுள்!

இன்றைய உலகில் இன்ரநெற் என்றாலே எல்லோரின் மனங்களிலும் முதலில் வருவது கூகுளின் சேவையாகும். கூகுளின் தேடுதல் கருவி மூலம் தினமும் ஏராளமான தகவல்களைப் பெறமுடிகிறது. அதுபோல் இந்த கூகுளுக்குள் தினமும் ஏராளமான வெப்சைற்றுகளும் வருகின்றன.

அந்த வெப்சைற்றுகளில் பயனுள்ளவையும் உண்டு.




அதே நேரத்தில் விரும்பத்தகாத மற்றும் சர்ச்சைக்குரிய வெப்சைட்டுகளும் உண்டு. இவற்றை கூகுள் எப்போதுமே ஆராய்ந்து வருகிறது. மேலும் தேவையில்லாத வெப்சைட்டுகளைக் களைவதில் கூகுள் முழு முனைப்புடனும் இருக்கிறது.

அந்த வகையில் ஒவ்வொரு நாளும் ஏறக்குறைய 9,500 தேவையில்லாத புதிய வெப்சைற்றுகளைக் கண்டுபிடிப்பதாக தனது ஆன்டி-மால்வேர் இனிசியேட்டிவில் கூகுள் தெரிவித்திருக்கிறது. இதன் மூலம் இணையதளத்தை பயன்படுத்துவோர் இந்த வெப்சைற்றுகளைப் பற்றி கவனத்துடன் இருக்க வேண்டும் என்றும் எச்சரிக்கையும் செய்கிறது.

உலக அளவில் 600 மில்லியனுக்கும் அதிகமானோர் க்ரோம், பயர்பாக்ஸ், சபாரி போன்ற பல ப்ரொளசர்கள் மூலம் இணையதளத்தைப் பயன்படுத்துகின்றனர் என்று கூகுள் கூறுகிறது. அவர்கள் இணையதளத்தைப் பயன்படுத்தும்போது ஏதாவது தேவையில்லாத வெப்சைற்றுக்குள் நுழைந்தால் உடனே திரையில் எச்சரிக்கை வாக்கியங்களை வெளியிடுவதாக கூகுள் கூறுகிறது. அதன் மூலம் பயனாளர்கள் பத்திரமாக இருக்க முடியும் என்று கூகுள் நம்புகிறது.

அதிலும் குறிப்பாக இ-காமர்ஸ் வெப்சைட்டுகள் தேவையில்லாத சிக்கல்களுக்குள் மக்களை மாட்டிவிடுகிறது. அதன் மூலம் ஏராளமான சைபர் குற்றங்களும் ஏற்படுகின்றன. ஆனால் இவற்றைத் தவிர்க்க கண்ணும் கருத்துமாக இருப்பதாக கூகுள் தெரிவித்திருக்கிறது. மக்கள்தான் விழிப்புடன் இருக்க வேண்டும்.



## சீனாவில் பன்றிகளுக்கு கிராமம்


சீனமக்கள் விரும்பி உண்ணும் இறைச்சி வகைகளில், பன்றி இறைச்சிக்கு முக்கியமான பங்கு உண்டு. இந்தாண்டில் மட்டும், 15 லட்சம் டன் எடையுள்ள பன்றி இறைச்சியை இறக்குமதி செய்ய, சீன அரசு திட்டமிட்டுள்ளது. சீனாவில் தொழிற்சாலைகள் அதிகரித்து விட்டதால், பன்றிகளை வளர்ப்பதற்கு தகுந்த சூழல் இல்லை என்றும், அதனால் தான், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதாகவும் பேச்சு எழுந்துள்ளது.

இந்த பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், ஜாங்குபு என்ற, மரங்கள் சூழ்ந்த குளு, குளு பிரதேசத்தில், பன்றிகளை வளர்ப்பதற்காக, பிரத்தியேகமாக ஒரு கிராமம் உருவாக்கப்பட்டுள்ளது. பன்றிகள் வசிப்பதற்காக இங்கு, கான்கிரீட்டாலான, 600 சிறிய குடில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும், பத்தாயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

இங்கு பன்றிகள் விளையாடுவதற்காகவும், உற்சாகமாக வலம் வருவதற்காகவும், பல வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தினமும், காலை 8 மணிக்கு, குடில்களில் இருந்து திறந்து விடப்படும் பன்றிகள், மாலை 5 மணி வரை, மற்ற பன்றிகளுடன் சேர்ந்து விளையாடுவதற்கு அனுமதிக்கப்படுகின்றன.

பன்றிகளுக்கான கிராமத்தை பராமரித்து வரும் அதிகாரிகள் கூறுகையில், இயற்கை யான சூழலில் வளரும் பன்றிகளின் இறைச்சி தான், மிகவும் ருசியாக இருக்கும். மார்க்கெட்டிலும் இது போன்ற பன்றிகளுக்கு தான் கிராக்கி அதிகம். அதனால்தான், இந்த கிராமத்தை உருவாக்கியுள்ளோம்... என்கின்றனர்.

## 3 கோடி மக்கள் சீனாவில் குகை வீடுகளில்..



சீனா, பழமையும், புதுமையும் கலந்த ஒரு இரும்புத் திரை நாடு. கிராமப்புறங்களிலும், சிறு நகரங்களிலும் மட்டுமல்லாமல், பீஜிங், ஷாங்காய் உள்ளிட்ட பெரு நகரங்களில் கூட, புராதன காலத்து வீடுகள் அதிகம் இருந்தன. கடந்த சில ஆண்டுகளுக்கு முன், பீஜிங்கில் நடந்த ஒலிம்பிக் போட்டி, பீஜிங் நகரத்தின் அடையாளத்தையே அடியோடு மாற்றி விட்டது.

ஒலிம்பிக் போட்டிக்காக, உலகம் முழுவதும் இருந்து ஆயிரக்கணக்கானோர், பீஜிங்கிற்கு வரும்போது, அங்குள்ள பழமையான வீடுகளை பார்த்து, நம் நாட்டை குறைவாக மதிப்பிட்டு விடுவர்... என, சீன அரசு கருதியது. இதன் காரணமாக, பழமையை பறைசாற்றிக் கொண்டிருந்த, லட்சக்கணக்கான வீடுகள், இடித்து தரைமட்டமாக்கப்பட்டன. பீஜிங் உள்ளிட்ட சீனாவின் பெரு நகரங்களிலும், நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள கிராமப் பகுதிகளிலும் இருந்த பழமையான வீடுகள், இருந்த இடம் தெரியாமல் போய் விட்டன.

ஆனாலும், இங்குள்ள ஷான்சி மாகாணத்தில், மிகப் பழமையான குகை வீடுகள் அதிக அளவில் உள்ளன என்பதும், இந்த வீடுகளில் மூன்று கோடிக்கும் அதிகமான மக்கள் இன்னும் வசிக்கின்றனர் என்பதுதான் ஆச்சரியமான விஷயம். இந்த வீடுகள், மலைகளை குடைந்து உருவாக்கப்பட்டவை.

இந்த பகுதியில் உள்ள மலைகள், மண் துகள்களால் ஆனவை. பல ஆண்டுகளுக்கு முன், இங்கு வசித்தவர்கள், இந்தக் குகை வீடுகளை அமைத்துள்ளனர். அரை வட்ட வடிவமான நுழைவாயில், தரை விரிப்புகளாலான கதவுகள், உயர்ந்த மேற்கூரை, சூரிய வெளிச்சம் உள்ளே வரும் வகையில் அமைக்கப்பட்ட ஜன்னல்கள் என, இயற்கையான அம்சங்களுடன் இந்த குகை வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

சற்று வசதியுள்ளவர்களின் குகை வீடுகளில், மின்சாரம், தொலைபேசி, குடிநீர் குழாய் ஆகிய வசதிகளும் உள்ளன. இந்த வீடுகளை கட்டுவதற்கு, சீமென்ற், செங்கல், தண்ணீர் உள்ளிட்ட எந்தப் பொருள்களும் தேவையில்லை என்பதால், செலவும் மிகவும் குறைவு. தற்போது இந்த குகை வீடுகளில், வயதானோர் மட்டுமே அதிக அளவில் வசிக்கின்றனர்.

சீனாவில் வேகமாக பெருகி வரும் மக்கள் தொகை காரணமாக, நகர்ப்புறங்களில் வசிப்பதற்கு, போதிய வீடுகள் கிடைப்பது இல்லை. இதனால், சமீபகாலமாக, பழமையான குகை வீடுகளுக்கு, கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. ஆனாலும், இங்கு வசிப்பவர்கள், வீடுகளை விற்பதற்கு முன்வருவது இல்லை. இந்த வீடுகள், எங்கள் வேர்களின் அடையாளமாக விளங்குகின்றன. எங்களின் முன்னோர், இங்கு தான் பிறந்து வளர்ந்தனர். இந்த வீட்டில் இருக்கும் ஒவ்வொரு நிமிடமும், அவர்களின் நினைவுகளுடன் வசிப்பது போல் உணர்கிறோம். எவ்வளவு ரூபாய் கொடுத்தாலும், வீட்டை விற்க மாட்டோம்... என, உறுதியாகக் கூறுகின்றனர், இங்கு வசிக்கும் சீனர்கள்.

கிராமங்களில் முன்னோர்கள் வசித்த பழமையான வீடுகளை, தொலையட்டும் என, குறைந்த விலைக்கு விற்றுவிட்டு, நகர்ப்புறங்களில் போலியான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும், நம்மவர்களுக்கு, இந்த சீன மக்களின் அசாத்தியமான மன உறுதி, நல்ல பாடம்.

## விண்ணிலிருந்து உளவு பார்க்க கூகிள், அப்பிள் நிறுவனங்கள் கூட்டு முயற்சி

இது தொழில்நுட்ப யுகம். தொழில்நுட்ப வளர்ச்சியானது நமது வாழ்க்கையை வசதியானதாகவும், எளிதானதாகவும், பாதுகாப்பானதாகவும் மாற்றிவிட்டதாக நினைக்கிறோம்.

இது சரிதானா? அமெரிக்காவின் இரு பெரும் தொழில்நுட்ப நிறுவனங்கள், விண்ணிலிருந்து நம்மை உளவு பார்க்கப் போகின்றன. இவை தாங்கள் உருவாக்கும் சக்திவாய்ந்த கமராக்களைக் கொண்டு விண்ணிலிருந்து படம் பிடிக்கப்போகின்றன. இராணுவத்தில் பயன்படுத்தக்கூடிய இந்த கமராக்கள், பூமியில் உள்ள வெறும் நான்கு அங்குலம் அளவுள்ள பொருளைக் கூட வானில் இருந்தே படம்பிடிக்கக் கூடியவை.

கூகுள், ஆப்பிள் நிறுவனங்கள், அதிநவீன மேப்பிங் விமானங்களைப் பயன்படுத்தி இவ்வாறு படம்பிடிக்கத் திட்டமிட்டிருக்கின்றன. சாதாரண வெளிச்சத்திலேயே படம் பிடிக்கக்கூடிய இந்த கமராக்கள், உங்கள் படுக்கையறை ஜன்னல் வழியாகக் கூட ஊடுருவக்கூடியவை. எனவே தனி மனிதர்களின் தனிமைக்கு இவை பெரும் ஆபத்து என்று எதிர்ப்புக் குரல்கள் எழத் தொடங்கியிருக்கின்றன.

கூகுள், ஆப்பிள் நிறுவனங்கள் பயன்படுத்தும் புதிய தொழில்நுட்பம், ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகளின் இலக்குகளைக் குறிவைக்கப் பயன்பட்ட அதே மாதிரியானவை. இந்தத் தொழில்நுட்பம் மூலம் சுமார் ஆயிரத்து 600 அடி உயரத்தில் இருந்தே படம் பிடிக்கலாம் என்பதால், தான் கண்காணிக்கப்படுகிறோம் என்பதே பூமியில் இருக்கும் ஒரு மனிதருக்குத் தெரியாது.

இந்த கமராக்களை விமானங்கள், ஹெலிகொப்டர்கள்... ஏன், ஆளில்லாத விமானங்களில் கூட பொருத்தலாம்.

பெருநகரங்கள் மீது சுற்றி இவ்வாறு படம் எடுப்பதற்காக தாங்கள் விமானங்களை அனுப்பியிருப்பதாக கூகுள் நிறுவனம் கூறியிருக்கிறது. அதேநேரம் ஆப்பிள் நிறுவனம், வேறொரு நிறுவனத்தை அமர்த்தி, லண்டன் உள்ளிட்ட நகரங்களை சோதனை ரீதியாகப் படம் பிடித்திருக்கிறது.

இவ்வாறு படம் பிடித்து தாங்கள் 3டி மேப்களை வெளியிட்டாலும், அதில் தனிநபர் பாதுகாப்புக் கட்டுப்பாடுகள் இருக்கும் என்று இந்த நிறுவனங்கள் கூறுகின்றன. பொறுத்திருந்து பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2012, ஜூலை 01 ஆம் திகதி வெளியிடப்பட்டது.